# අල්-අඛ්ලාකුල් ඉස්ලාමිය්යා

(ඉස්ලාමීය සාරධර්ම)

**ඉස්ලාම් ආගමික (අහදිය්යා අල්කුර්ආන් පාසල්)**
**අවසන් සහතික පත්‍ර විභාගය සඳහා පෙළ පොත්**

# அல் அக்லாக்குல் இஸ்லாமிய்யா

**(இஸ்லாமியப் பண்பாடுகள்)**

**இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா, அல்குர்ஆன்) பாடசாலை**

**இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடப்புத்தகம்**

# Al - Akhlaqul Islammiyya

**(Islamic Ethics)**

**Text Book for**
**Final Certificate Examination of Islamic Studies**
**(*Ahadhiyyah, Al Quran Schools)***

# الأخلاق الإسلامية

**الكتاب المقرر لشهادة الإمتحانات النهائية**
**للمدارس القرآنية والأحدية الإسلامية**


**إصدار: إدارة الشؤون الإسلامية**
**كولومبو-سريلانكا**

***Published by :***
***Department of Muslim Religious and Cultural Affairs***
***180, T. B. Jayah Mawatha,***
***Colombo - 10,***
***Sri Lanka.***



2-CM 14794

CM 14794 - 5,000(2012/08)


بسم الله الرحمن الرحيم

**ஆலோசனையும் வழிகாட்டலும்** : கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி
பணிப்பாளர்,
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

அஷ்ஷெய்க் ஏ. சி. அகார் முஹம்மத் (நளீமி)
பிரதிப் பணிப்பாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்
துணைத் தலைவர்,
அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை

அஷ்ஷெய்க் வை. எல். எம். நவவி (நளீமி)
முன்னாள் பணிப்பாளர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல் (நளீமி)
பணிப்பாளர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

**எழுத்தாளர் குழு அங்கத்தவர்கள்** : அஷ்ஷெய்க் எஸ். எம். எம். மஸாஹிர் (நளீமி) M.Phil,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தென் கிழக்குப் பல்கலைக்கழம்

அஷ்ஷெய்க் எப். எம். ஏ. அன்ஸார் மௌலானா (நளீமி) M.A.
விரிவுரையாளர்,
தேசிய கல்வியியல் கல்லூரி
அட்டாளைச்சேனை

**செம்மையாக்கக் குழு** : அல்ஹாஜ் எஸ். எச். எம் ஜெமீல் (M. A.)
முன்னாள் செயலாளர்
முஸ்லிம் விவகார இராஜாங்க அமைச்சு

அல்ஹாஜ் எம். ஐ. எம். அமீன் (M. A.)
முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்
பேராதனை பல்கலைக்கழகம்

கலாநிதி, மௌலவி எம். எஸ். எம். ஜலால்தீன்(கபூரி)
முன்னாள் பீடாதிபதி / சிரேஷ்ட விரிவுரையாளர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

அல்ஹாஜ் எம். எச். எம். நாளிர் B. A. (Hons)
வளவாளர்
தேசிய கல்வி நிறுவகம், மஹரகம

அல்ஹாஜ் எம். எம். எம். ஸாபீர் (M. A.)
சிரேஷ்ட விரிவுரையாளர்
கொழும்பு பல்கலைக்கழகம்

அஷ்ஷெய்க் எம். எச். எம். புஹாரி BA (Hon's) PGDE
முன்னாள் பிரதம செயற்திட்ட அதிகாரி
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

**இணைப்பாக்கம்** : மௌலவி அல்ஹாஜ் எம். எச். எம். லாபிர் (கபூரி) BA PGDE
மத்திய அஹதிய்யா சம்மேளன பாடத்திட்டக் குழுத்தலைவர்

மௌலவி அல்ஹாஜ் எம். எச். நூறுல் அமீன் (நத்வி) BA (Cey)
உதவிப் பணிப்பாளர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | **அல் அக்லாக்**<br>**(இஸ்லாமியப் பண்பாடுகள்)**<br><br>இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா, அல்குர்ஆன்)<br>பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரியது |
| பதிப்பாசிரியர் | : | மௌலவி அல்ஹாஜ் எம். எச். நூறுல் அமீன் (நத்வி) BA (Cey)<br>உதவிப் பணிப்பாளர்<br>முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |
| வெளியீடு | : | முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்<br>இல. 180, T. B. ஜாயா மாவத்தை<br>கொழும்பு - 10. |
| பதிப்பு | : | அரசாங்க அச்சகத் திணைக்களம்<br>இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,<br>கொழும்பு - 08. |
| முதற்பதிப்பு | : | 2014 |
| பதிப்புரிமை | : | முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |

# மாண்புமிகு பிரதமர், புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் அவர்களது ஆசிச் செய்தி

இலங்கை சமயங்களுக்கும் கலாசாரங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கும் ஒரு தேசமாகும். சிறுபிராயம் முதல் பிள்ளைகளிடையே கலாசாரம், சகவாழ்வு, மானிடத்துவம் பற்றிய மனப்பாங்கை வளர்ப்பதன் ஊடாகவே தேசத்தையும் சமூகத்தையும் மதிக்கின்ற, சமய கலாசாரத்தை கௌரவிக்கின்ற, மனிதமாண்பை புரிந்து கொண்ட சமூகமொன்றை உருவாக்க முடியும். பரீட்சையை மையப்படுத்திய கல்வித் திட்டத்தின் மூலம் சிலவேளை தார்மீக பண்பாட்டு ரீதியான கல்வியை வழங்குவது கடினமாகலாம். இதனால் இலங்கையில் ஞாயிறு சமய பாடசாலைக் கல்வித்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமய பிள்ளைகள் தத்தமது சமய ஸ்தலங்களுக்கு அல்லது பாடசாலைகளுக்கு சென்று சமயக் கல்வியைப்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமயக் கல்விப் போதனைகளுக்குத் தேவையான ஆசிரியர்களை வளப்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்கள், சீருடை வழங்கல் மட்டுமன்றி ஆசிரியர்களுக்கான ஆசிரியர் கைந்நூல், மாணவர்களுக்கான பாடநூல் என்பனவும் இலவசமாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பௌத்த சமய பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ள சகல வசதிகளும் ஏனைய சமயம் சார்ந்த பிள்ளைகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். அஹதிய்யா என்ற பெயரில் செயற்படும் இஸ்லாமிய சமய பாடசாலைகளுக்கு அவசியமான பாடத்திட்டத்தை தயார் செய்யும் வேலைத்திட்டத்தினை சிறப்பாக நிறைவு செய்துள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இதே பிரகாரம் பாடநூல் தொகுதியொன்றை வெளியிட மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை பாராட்டுக்குரியது.

சமயக் கல்விப் போதனையின் இலக்கை அடைவதில் ஆசிரியர் களுக்கான வழிகாட்டல்களை வழங்குவது இன்றியமையாததாகும். மிக விரைவில் இது விடயமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என நம்புகிறேன்.

எந்தவொரு மட்டத்திலாயினும் கற்றல், கற்பித்தல் செயற்பாடு வெற்றியளிப்பதற்கு உரிய பாடநூல்கள் அவசியம் என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். இவ்வவசியத் தேவையை சரியாகப் புரிந்து கொண்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய பாடத்திட்டத்திற்கமைவாக இரு பரீட்சைகளுக்குமான பாடநூல்களை வெளியிட ஏற்பாடு செய்திருப்பது காலத்தின் தேவையாகும். சமய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் இதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இதை செய்து முடிப்பதற்கு பங்களிப்புச் செய்த முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சகலருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**தி. மு. ஜயரத்ன**
இலங்கைச் சனநாயக சோசலிசக்
குடியரசின் பிரதமரும்
புத்த சாசனம் மற்றும்
மத அலுவல்கள் அமைச்சரும்

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# கௌரவ புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் பிரதியமைச்சரின் ஆசிச் செய்தி

பல்லின சமய, கலாசார விழுமியங்களைக் கொண்ட இலங்கைத் திருநாட்டு மக்கள் மத்தியில், தார்மீக சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் இலங்கையில் வதியும் பிரதான நான்கு சமயத்தவர்களும் தத்தமது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மூலம் முதன் முறையாக இஸ்லாமிய சமய (அஹதிய்யா) பாடசாலை மாணவர்களுக் கான பாடத்திட்டத்தினையும் அப்பாடத்திட்டத்திற்கமைவாக பாடநூல் களையும் வெளியிடும் இச்சிறப்பான வேளையில் வாழ்த்துச் செய்தி யொன்றை வெளியிடக் கிடைத்தமையினை பெரும் நற்பேறாகக் கருதுகிறேன்.

நீண்டகாலமாக நிலவிவந்த குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு எமது அமைச்சின் ஊடாக பங்களிப்புச் செய்வது எமது கடமை என்பதோடு பல தசாப்தங்களாக இயங்கிவரும் அஹதிய்யா சமய பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தமது சமய கல்விப்பணிகளை முன்கொண்டு செல்வதற்கு இது பேருதவியாக அமையும் என நம்புகிறேன்.

ஒரு நாட்டின் அபிவிருத்தி நிலைத்திருப்பது அரசியல் பொருளாதார அபிவிருத்தியுடன் சமய, சமூக மட்டத்திலான அபிவிருத்தியும் இணைந்து தான் என உறுதியுடன் நம்பிக்கை பூண்டுள்ளேன். குறிப்பாக சமூக மட்டத்திலான ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதாயின் சமய, கலாசார துறைசார் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மேற்படி சமய, சமூக கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதில் அஹதிய்யா முதலான சமயப் பாடசாலைகள் ஆற்றும் பணி விலைமதிக்க முடியாததாகும்.

சிறு பராயம் முதல் பிள்ளைகளை சமய பின்னணியில் வாழப் பயிற்றுவிப்பதுபோல் அதற்கான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் ஒழுக்க விழுமியங்களால் போஷிக்கப்பட்ட இளைய தலைமுறையொன்று உருவாகுவதை எதிர்பார்க்க முடியும்.

எங்களைப் போல் பல்லின சமய, கலாசார சமூகமொன்று வாழும் நாட்டில் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மக்கள் தமது பிள்ளைகளுக்கு அவரவர்களது சமய அறிவையும் விளக்கத்தையும் வழங்குவதற்கு இதுபோன்ற சமய பாடசாலைகள் ஊடாக மேற்கொள்ளும் அறப்பணி மகத்தானதாகும்.

இம்மகத்தான பணியைச் செய்வதில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இதற்கு பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எமது அமைச்சின் நன்றியறிதலை சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

**எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்தன,**
பிரதியமைச்சர்,
புத்த சாசன மற்றும் மத அலுவல்கள்
அமைச்சு.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளரது ஆசிச் செய்தி

தார்மீக சமுதாயமொன்றை தோற்றுவிப்பதில் சமயக் கல்வி அதிமுக்கிய பங்காற்றுகிறது. பாலர் பருவம் முதல் பிள்ளைகளிடையே சமய விழுமியச் சிந்தனையை ஏற்படுத்த முடியுமாயின் நாட்டின் சமூக சூழலை நல்ல நிலைக்கு மாற்றுவது கஷ்டமாயிராது. யாவரிடத்திலும் நல்ல மனப்பாங்கு ஏற்படுவது அனுபவங்கள் ஊடேயாகும். சமயக் கல்வி பயனுள்ள அனுபவங்களை வழங்குவதற்கான சிறந்த ஊடகமாகும். பரீட்சையை மையப்படுத்திய பொதுக்கல்வியுடன் மாத்திரம் சமய அறிவைப் புகட்டுவது சிரமமான காரியமாகும். இதற்கு மாற்றீடாக இலங்கையில் ஞாயிறு தினங்களில் நடாத்தப்படும் சமய பாடசாலைகள் முறை இத்துறையில் பெருமளவு வெற்றியை ஈட்டித்தந்துள்ளது.

பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ பிள்ளைகளிடையே சமய சூழலும் சமய அறிவும் விருத்தி செய்யப்படும் வகையில் ஒவ்வொரு சமயம் சார் பிள்ளைகளுக்குமாக வெவ்வேறான சமயப் பாடசாலைகள் நடைபெறுகின்றன. சமய பாடசாலைகளுக்கான பாடத்திட்டம், பாடநூல் என்பன தற்போதைக்கு வெளியிடப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கு அவசியப்படும் பயிற்சித்திட்டங்கள் மற்றும் ஆசிரியர் சீருடை என்பன வழங்கப்பட்டு வருகின்றன. இங்கு முக்கிய குறைபாடாக விளங்கி வந்த பாடநூல்களை வழங்க ஏற்பாடு செய்கின்றமை முக்கிய அம்சமாகும். சகல சமய குழந்தைகளுக்கும் ஒரே விதமான வசதிகளை செய்து கொடுப்பது அரசின் கொள்கையாகும். இஸ்லாமிய சமய பாடசாலைகள் விடயத்தில், முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பாடத்திட்டத்தை தயாரித்து சிறப்பாக வெளியிட்டு வைத்த இத்திணைக்களம், தேவையான பாடநூல்களை வெளியிட ஏற்பாடு செய்தமை சமய கல்வித்துறையில் ஒரு திருப்பு முனையாகும். எந்தவொரு கல்வி மட்டத்திலும் பாடத்திட்டத்தின் உரிய பலாபலன்களை அடைவதில் பாடநூல்கள் முக்கிய பங்கு வகிப்பதை மறுக்க முடியாது. இவ்வவசியத் தேவையினை சரிவரப்புரிந்து கொண்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆரம்ப நடவடிக்கையாக அஹதிய்யா (தஹம்) இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடநூல்

களையும், தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடநூல்களுடன் மொத்தம் 10 நூல்களை வெளியிட எடுத்துள்ள நடவடிக்கையினையிட்டு இத்திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் என்ற வகையில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

மேற்படி அறப்பணியில் ஈடுபட்டிருக்கும் திணைக்கள ஊழியர்கள், வளவாளர்கள், நூலாக்கக்குழுவினர் ஆகிய அனைவருக்கும் எனது நன்றிகளை சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன்.

**எம். கே. பீ. திசாநாயக்க,**
செயலாளர்,
புத்த சாசன மற்றும் மத அலுவல்கள்
அமைச்சு.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

இன்றைய உலகு பயங்கர ஆன்மீக வறுமையிலும் வெறுமையிலும் வாடிக் கொண்டிருக்கிறது. உண்மையாக இன்றைய உலகின் சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது ஆன்மீக வீழ்ச்சியும் அதனடியாகப் பிறந்துள்ள பண்பாட்டு வீழ்ச்சியுமாகும் எனக் குறிப்பிட்டால் அது மிகையாகாது.

சமய சார்பற்ற சிந்தனை, சடவாதம், உலகாயதம் முதலான மதவிரோத கொள்கைகளின் செல்வாக்கின் காரணமாகவே ஆன்மீக, தார்மீக, ஒழுக்க பண்பாட்டுத் துறைகளில் பயங்கர பின்னடைவை இன்று நாம் கண்டு வருகிறோம். அறிவைப் பூஜிக்கின்ற சமூகம் ஆன்மீகத்தைப் புறக்கணிக்கிறது. உடலைக் கவனிக்கின்ற சமூகம் உள்ளத்தை மறந்துவிடுகின்றது. இம்மையை நேசிக்கின்ற சமூகம் மறுமையை நிராகரிக்கின்றது.

சமகால உலகின் இத்தகைய சமய விரோத சவால்களுக்கு முகங்கொடுத்து மனித சமூகத்தை சன்மார்க்க அடிப்படையில், ஆன்மீகப் பாதையில் வழிநடாத்த வல்ல அறிவையும், புலமையையும், ஆளுமையையும் உருவாக்குகின்ற பயிற்சிப் பாசறைகளான அரபுக் கல்லூரிகளோடு இணைந்து அஹதிய்யா பாடசாலைகளும் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அஹதிய்யா பாடசாலைகள் இலங்கையில் 50 வருடங்களுக்கும் மேலாக இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அஹதிய்யா பாடசாலைகளை சிறந்த முறையில் வழிநடத்துவதற்காக திணைக்களம் அதற்கான முழுமையான பாடத்திட்டத்தை வெளியிட்டு வழிநடாத்தி வந்துள்ளமை அனைவரும் அறிந்ததே.

இந்த வகையில் இப்பாடத்திட்டங்கள் மூலம் பூரண பயனைப் பெற முடியாது என்பதை அறிந்த திணைக்களம், முதற்கட்டமாக இப்பாடத்திட்டங்களுக்கு அமைவாக இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா, அல்குர்ஆன்) பாடசாலை இறுதிச்சான்றிதழ் பரீட்சை மற்றும் இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சை களுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த பணியை சிறப்பாக மேற்கொண்ட புத்தக

ஆக்கக்குழுவுக்கும் தொகுப்பாசிரியர் குழு மற்றும் இப்பணியில் மும்முரமாக ஈடுபட்ட எமது திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். நூறுல் அமீன் அவர்களுக்கும் மற்றும் இப்பணியில் இணைந்து பணியாற்றிய அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு, இப்பணியில் ஈடுபட்டவர்களது உழைப்பையும், அவர்களது முயற்சி யையும் அல்லாஹ் அங்கீகரித்துச் சிறந்த நற்கூலிகளை வழங்க வேண்டும் என வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

**அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல்,**
பணிப்பாளர்,
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180, T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு - 10.

# உயர் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரின் (முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்) ஆசிச் செய்தி

இஸ்லாம் ஒரு வாழ்க்கை நெறியாகும். முஸ்லிமாக வாழ்வதாயின் அல்குர்ஆன், அல்ஹதீஸ் தொடர்பான தெளிவான அறிவைப் பெறுவது அவசியமாகும். "அறிவைத்தேடுவது முஸ்லிமான ஆண், பெண் இரு பாலார் மீதும் கடமையாகும்." என்ற கருத்தில் வரும் நபிமொழியும் "அல்குர்ஆனைக் கற்று மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுப்பவரே உங்களில் சிறந்தவர்" என்ற கருத்தில் வரும் நபிமொழியும் இதனை வலியுறுத்துகின்றன. இலங்கையில் இஸ்லாத்தை பாடசாலைப் பருவத்தில் கற்றுக்கொள்வதற்கான ஒரு சிறந்த ஊடகமாக அஹதிய்யா பாடசாலைகள் காணப்படுகின்றன. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அஹதிய்யா பாடசாலைகளின் வளர்ச்சியில் போற்றத்தக்க சேவைகளை வழங்கி வருகின்றமை யாவரும் அறிந்ததாகும். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அஹதிய்யா பாடசாலைகளுக்கு வருடாந்தம் வழங்கி வரும் சேவைகள் அஹதிய்யாவின் வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக அமைகின்றன.

பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரையான 14 வருடங்களுக்குரிய தேசிய அஹதிய்யாப் பாடத்திட்டம் தயாரித்தமை இலங்கை அரசாங்க பரீட்சை திணைக்களம் மூலம் அஹதிய்யா இறுதி சான்றிதழ் பரீட்சை, இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சாரிய) சான்றிதழ் பரீட்சை ஆகிய இரு பரீட்சைகளையும் நடாத்த ஏற்பாடு செய்தமை, மாவட்ட ரீதியாக நடாத்தியமை அஹதிய்யா ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளும் கருத்தரங்குகளும் அஹதிய்யா ஆசிரியர்களுக்கான வருடாந்த நூல் கொள்வனவுக் கொடுப்பனவு வழங்கியமையும், வருடாந்தம் ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கியமையும் அப்பணிகளில் சிலவாகும்.

இவற்றில் அஹதிய்யா பாடசாலைகளது வரலாற்றில் தேசிய பாடத்திட்டத்திற்கு அமைவாக பாடநூல்கள் வெளியிடப்படுவது முக்கியதொரு மைல்கல்லாகும். அஹதிய்யா சமூகத்தின் ஏகோபித்த



3-CM 14794

கோரிக்கையின் முதற்கட்டம் இன்று நிறைவேறுவதையிட்டு உளப் பூரிப்படைகிறேன். முதற் கட்டமாக, அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சை வகுப்புகளுக்குரிய அகீதா, மஸாதிருஷ்ஷரீஆ, பிக்குஹுல் இஸ்லாம், ஸீரா வத்தாரீக், அஹ்லாக் ஆகிய நான்கு பாடங்களுக்கும் தீனிய்யாத் பரீட்சைக்குரிய மேற்படி நான்கு பாடங்களுடன் அரபு மொழியும் இஸ்லாமிய இலக்கியமும் ஆகிய ஆறு பாடங்களுக்குமாக பத்து பாட நூல்கள் வெளிவருகின்றமை சிறப்பித்துக் கூறவேண்டிய தொன்றாகும். புதிய பணிப்பாளர் தலைமையில் இப்பணிகள் யாவும் தொடரும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

மேற்படி பணிகளை முன்கொண்டு செல்வதில் ஆரம்பம் முதல் இன்றுவரை அயராது உழைத்துவரும் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். நூறுல் அமீன் மற்றும் திணைக்கள அதிகாரிகள் மற்றும் எழுத்தாளர் குழு அங்கத்தவர்கள், தொகுப்பாசிரியர்கள் ஆகியோர் என்றும் நன்றிக்குரியவர்களாவர். அல்லாஹ் அவர்களது முயற்சிகளை அங்கீகரித்துக் கொள்வானாக. இப்பணியில் இவர்களுடன் சேர்ந்து ஈடுபடுவதற்கு கிடைத்தமையை அல்லாஹ் எனக்கு வழங்கிய ஒரு மகத்தான சந்தர்ப்பமாகவே கருதுகின்றேன்.

இதற்காக என்னால் ஆன பணிகளைச் செய்யக் காத்திருக்கின்றேன்.

அல்லாஹ்வின் அருள் வேண்டி அனைவருக்கும் பிரார்த்திக்கிறேன்.

ஆமீன் !

**அஷ்ஷெய்க் Y. L. M. நவவி**,
உயர் கல்வியமைச்சின்
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
(முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்
திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்)

உயர் கல்வியமைச்சு,
இல. 18, வோட் பிளேஸ்,
கொழும்பு - 07.

# மத்திய அஹதிய்யா சம்மேளன பாடத்திட்டக் குழுத் தலைவரின் ஆசிச் செய்தி

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்**

அஹதிய்யாப் பாடசாலைகள் மூலம் கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக முஸ்லிம் சமூகம் பல நன்மைகளையடைந்து வந்துள்ளது. இருப்பினும் எதிர்பார்க்கப்படும் முறையான பயனை சமூகம் அடைவதற்கு முக்கிய சில தடைகள் இருந்து வந்துள்ளன. அவற்றுள் ஒன்று பாடநூல் இல்லாமை, மற்றையது தேவையான ஆசிரிய வளம் கிடைக்காமை எனலாம்.

பெரும்பாலும் அஹதிய்யாப் பாடசாலைகளில் க.பொ.த. (சாதாரண தரம்) அல்லது க.பொத. (உயர் தரம்) வரை கற்றவர்களே கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒரு சில இடங்களிலேயே உலமாக்களும் பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி ஆசிரியர்களும் கற்பித்தற் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

அஹதிய்யா பாடசாலைகளில் போதிக்கும் ஆசிரியர்களது அறிவு மட்டத்தை மேம்படுத்தும் வகையிலேயே இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இப்பாடநெறியைக் கற்றுத் தேர்வதன் மூலம் அவர்கள் சன்மார்க்க போதனாசிரியர்களுக்கான தராதரத்தைப் பெறுகின்றனர். இச்சான்றிதழ் உடையவர்களை சமய ஆசிரியர்களாக நியமிக்கும் திட்டத்தினை அரசு முன்கொண்டுள்ளது. எனவே இப்பாடத்திட்டம் முறையாக கற்பிக்கப்படுவதன் மூலம் அஹதிய்யாக்கள் எதிர்நோக்கும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும். அத்தோடு ஆசிரியர்களது கல்வித்தரத்தை மேம்படுத்தவும் முடியும். மேலும் இவர்களிடம் கற்கும் மாணவர்களது அறிவுமட்டம் உயர்வடையும் என்றும் எதிர்பார்க்கலாம்.

இது விடயத்தில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கரிசனை கொண்டு நடவடிக்கை மேற்கொண்டு செயற்பட்டுவருகின்றமை பாராட்டுக்குரியது. இதற்கு முன்னோடியாக விளங்கிய முன்னாள் பணிப்பாளர் அஷ்ஷெய்க் Y. L. M. நவவி அவர்களது பங்களிப்பு மெச்சத்தக்கதாகும். அவரது வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் இதற்கு உறுதுணையாக விளங்கின. அவருக்கு பக்கபலமாக விளங்கிய முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் M. H. நூறுல் அமீன் அவர்களது அயராத

முயற்சியும் ஈடுபாடும் இங்கு குறிப்பிடத்தக்கவை. அஹதிய்யாப் பாடசாலைகள் மத்திய சம்மேளனம் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இந்தப் பங்களிப்பினை நன்றியுணர்வோடு நோக்குகிறது.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கை பூராவும் எமது இளைய தலை முறையினரான பாடசாலை பிள்ளைகளுக்கு இஸ்லாமிய அறிவையும் உணர்வையும் ஊட்டி, தூய இஸ்லாமிய ஷரிஆவின் வழியில் நடாத்தும் பொறுப்பையேற்று செயற்பட்டு வரும் அஹதிய்யாவின் முன்னோடிகள், அதன் தொண்டர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகிய அனைவரும் அல்லாஹ்வின் அருளுக்குரியவர்கள் என்பதை கூறவிரும்புகிறோம்.

அஹதிய்யாவின் ஸ்தாபகத்தலைவர் மர்ஹூம் எம்.எச்.அப்துல் அஸீஸ் அவர்களைத் தொடர்ந்து எம்மோடு பணியாற்றுகின்ற தலைவர்கள், நிருவாகிகள் யாவருக்கும் இவ்விஸ்தாபனத்தை வழிநடாத்திச் செல்வதற்கான மனோபலத்தையும் உடற்சுகத்தையும் நல்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

மத்திய அஹதிய்யா சம்மேளனம் 1988 ஆம் ஆண்டு பொதுப்பாடத்திட்டத்தை வகுத்தது. இதனை தொடர்ந்து முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய ரீதியாக பொதுபாடத்தினை 2003 ஆம் ஆண்டு அறிமுகஞ் செய்தது. 2005 முதல் தேசிய மட்டத்தில் அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சைகள் இடம் பெற்றாலும் பரீட்சைகளுக்கான பாடநூல்கள் எதுவும் இல்லாதிருந்தமை பெரும் குறைபாடாக இருந்தது. இதனால் இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களது எண்ணிக்கையிலும் விண்ணப்பித்தோருள் தோற்றா மலிருப்போரின் எண்ணிக்கையிலும் கணிசமாயிருந்தது.

மேற்படி குறைபாட்டை முன்னால் முஸ்லிம் சமய, பண்பாட்டலு வல்கள் திணைக்களப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் வை. எல். எம். நவவி அவர்களிடம் எடுத்துக்கூறியபோது அவர் தேவையான நூல்களைத் தயாரித்து வெளியிட முன்வந்தார். அவர் விட்ட இடத்திலிருந்து இப்பணியை சிறப்பாக தொடங்குகின்ற பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல் அவர்களது பங்களிப்பும் பாராட்டத்தக்கதாகும்.

இப்பணியில் ஒத்துழைத்த அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக. அவர்களின் பணியை அங்கீகரிப்பானாக.

**மௌலவி எம். எச். எம். லாபிர்,**
மத்திய அஹதிய்யா சம்மேளன,
பாடத்திட்டக் குழுத்தலைவர்.

# பதிப்புரை

## பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம்

சர்வ புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தாகட்டும்! அல்ஹம்துலில்லாஹ் !

"(எனக்கு வழிப்பட்டு என்னை) வணங்குவதற்கன்றி ஜின்களையும் மனிதர்களையும் நான் சிருஷ்டிக்கவில்லை."(அல்குர்ஆன் - 51 : 56)

இவ்வுலகில் மானிட வர்க்கம் படைக்கப்பட்டதன் நோக்கம் அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று, நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை அடிச்சுவடுகளை முறையாக பின்பற்றி முஸ்லிமாக வாழ்ந்து மரணிப்பதே யாகும். அல்லாஹ்வின் அடியார்கள் என்ற வகையில் ஒவ்வொரு முஸ்லிமும் ஆத்மீக சிந்தனையுடன் தனது வாழ்வை இபாதத்துடன் இணைத்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

நபி (ஸல்) அவர்களின் அருள்வாக்கு பின்வருமாறு சான்று பகர்கின்றது : "இவ்வுலகத்தில் அல்லாஹ் ஒருவனுக்கு நன்மையை நாடினால் அவனுக்கு மார்க்கத்தில் தெளிவான விளக்கத்தை வழங்குகிறான்." (அல்ஹதீஸ்)

மேற்படி இறைவசனத்திற்கும் நபி (ஸல்) அவர்களின் போதனைக்கும் ஏற்ப மார்க்கத்துடன் தொடர்புடையவனாக வாழ்வது கட்டாயக் கடமையாகும். இவ்வாறாக ஒரு முஸ்லிம் இறையச்சம், பொறுமை, சகிப்புத்தன்மை, நல்லொழுக்கம், நற்பண்புகளுடன் வாழ்வதற்கு இஸ்லாமிய சன்மார்க்கக் கல்வியை பெற்றுக் கொள்வது இன்றியமையாத தாகும். மார்க்கக் கல்வியை பெறுவது உண்மையான மு∴மினாக வாழ்வதற்கு வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறான நல்லொழுக்கமுடைய ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு இன்று நாடளாவியரீதியில் பல இஸ்லாமிய ஷரீஆ கல்வி நிறுவனங்களும், தனியார் அமைப்புகளும் தங்களாலான பங்களிப்புகளைச் செய்து வருவது உண்மையில் போற்றத்தக்கதாகும்.

மேற்படி நோக்கத்தை மையமாகக் கொண்டு சுமார் ஆறு தசாப்தங்களுக்கு மேல் அஹதிய்யா கல்வியை மேம்படுத்துவதற்காக திட்டங்களை வகுத்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் மத்திய அஹதிய்யா சம்மேளன தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் பணி என்றும் பாராட்டத்தக்கதாகும்.

அத்துடன் இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக அரபுக் கல்லூரிகள், அஹதிய்யா பாடசாலைகள், குர்ஆன் மத்ரஸாக்கள் போன்ற இஸ்லாமிய கல்வி நிறுவனங்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதிலும், பௌதிக வளங்களை விரிவுபடுத்துவதிலும் இத்திணைக்களம் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. இவற்றுள் அஹதிய்யா பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பல திட்டங்களை வகுத்து செயற்பட்டு வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்த வகையில் முதல் பணியாக அஹதிய்யா மற்றும் குர்ஆன் மத்ரஸாக்களுக்கான பாடத்திட்டத்தினை 2003 ஆம் ஆண்டு வெளியிட்டு வைத்தமையும் இப்பாடத்திட்டத்திற்கமைவாக 2005 ஆம் ஆண்டு அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சையை நடாத்துவதற்கு இத்திணைக்களம் நிதியுதவி வழங்கி தேவையான ஒழுங்குகளை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் 2008 ஆம் ஆண்டு இஸ்லாமிய தீனிய்யாத் தர்மாச்சார்ய பரீட்சையையும் பரீட்சைத்திணைக்களத்தின் மூலமாக நடாத்துவதற்கு சகல நடவடிக்கை களையும் இத்திணைக்களம் மேற்கொண்டது. மேலும் 2008 ஆம் ஆண்டு அஹதிய்யா பாலர் வகுப்பு முதல் இஸ்லாமிய தீனிய்யாத் தர்மாச்சார்ய பரீட்சை வரைக்குமான பாடத்திட்டங்களை வகுத்து தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

மேலும் இத்திணைக்களம் வருடந்தோறும் அஹதிய்யா ஆசிரிய ஆசிரியைகளுக்கான சீருடை மற்றும் புத்தகக் கொடுப்பனவு வழங்குதல்; கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல் போன்றவற்றையும் நடை முறைப்படுத்தி வருகின்றது.

குறிப்பாக அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் மற்றும் இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) பரீட்சைகளுக்கு தோற்றுபவர்கள் பாடப் புத்தகங்கள் இல்லாததன் காரணமாக பரீட்சைக்கு தோற்றுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனை கருத்திற்கொண்டு பரீட்சைகளுக்கு ஏற்றவிதமாக பாடப்புத்தகங்களை உருவாக்கும் பணியை எமது திணைக்களம் மேற்கொண்டது.

மேற்படி நூல்களை வெளியிடுவதற்கும் மற்றும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் முன்னோடியாக விளங்கி, ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய முன்னாள் பணிப்பாளர்களான அஷ்ஷெய்க் Y. L. M. நவவி அவர்களுக்கும் அஷ்ஷெய்க் M. I. அமீர் அவர்களுக்கும் இந்நூல் எவ்வித தங்கு தடையுமின்றி துரிதமாக வெளிவர காரணமாக இருந்த தற்போதைய பணிப்பாளர் அஷ்ஷெய்க் M. H. M. ஸமீல் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இப்பாடப் புத்தகத்தை வடிவமைத்து பிரசுரிப்பதற்கு எல்லா வகையிலும் ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கிய ஜாமிஆ நளீமிய்யா கலாபீடப் பணிப்பாளர் கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி மற்றும் பிரதிப்பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ. சீ. அகார் முஹம்மத் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இப்பணியை செவ்வனே முடிப்பதற்கு ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் வழங்கியவர்களையும் நன்றியுடன் ஞாபகப்படுத்திக் கொள்கின்றேன்.

இப்புத்தகம் நூலுருவில் வெளிவருவதற்கு பல சிரமங்களுக்கு மத்தியில் பாடவிதானங்களுக்கேற்ப பாடங்களை எழுதி வடிவமைத்து தந்த எழுத்தாளர் குழு அங்கத்தவர்களான ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எஸ். எம். எம். மஸாஹிர் (நளீமி), அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் எப். எம். ஏ. அன்சார் மௌலானா (நளீமி) ஆகியோருக்கும் எமது திணைக்களத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் இப்புத்தகத்தினை செம்மைப்படுத்தி, வடிவமைத்து தந்தவர்களான முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல், பேராதனை பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர், அல்ஹாஜ் எம். ஐ. எம். அமீன், சிரேஷ்ட விரிவுரையாளரும் ஒலுவில், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பீடாதிபதியுமான கலாநிதி மௌலவி எம். எஸ். எம். ஜலால்தீன் (கபூரி) மஹரகம தேசிய கல்வி நிருவகத்தின் வளவாளர், அல்ஹாஜ் எம். எச். எம் நாளிர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அல்ஹாஜ் எம். எம். எம். ஸாபிர், மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பிரதம செயல்திட்ட அதிகாரி அஷ்ஷெய்க் எம். எச். எம். புகாரி (நளீமி) ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இப்புத்தகத்தை நூலாக்குவதற்கு ஆரம்பம் முதல் இன்று வரை என்னுடன் இணைப்பாளராக செயலாற்றிய மௌலவி எம். எச். எம். லாபீர் (கபூரி) மற்றும் அல்முபாரக் தேசிய பாடசாலை சிரேஷ்ட ஆசிரியை திருமதி எம். டீ. எஸ். றுவைதா அவர்களுக்கும் இப்புத்தகம் நூல் வடிவில் வெளிவருவதற்கு பல வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய ஜாமிஆ நளீமிய்யா சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம். ஜே. எம். அறபாத் கரீம் (நளீமி), அஷ்ஷெய்க் எம். என். எம். றிஷாத் (நளீமி) அவர்களுக்கும் மேலும் ஒத்துழைப்பு நல்கிய எமது திணைக்கள அதிகாரிகளான அஷ்ஷெய்க் எம். ஐ. முனீர் (நளீமி), திருமதி எம். ஐ. ரஸீனா, அல்ஹாஜ் ஏ. ஏ. எம். அஸ்ரின், திருமதி எம். வை. எப். இன்சிபா, மற்றும் இப்பணிக்கு ஒத்துழைப்பு நல்கிய திணைக்கள அனைத்து அதிகாரிகளுக்கும், சிற்றூழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இப்புத்தகத்தை கனிணி வடிவமைத்துத் தந்த திருமதி எம். எப். ஷாமிலா, திருமதி எம். எச். எஸ். பாத்திமா மஹ்ஸனி, திருமதி எம். எச். எப். ரிஸானா ஆகியோருக்கும் மற்றும் இப்புத்தகத்தின் அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த ஜனாப் அஸார் வஸீர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மற்றும் அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் கனிணி பிரிவில் கடமையாற்றும் திருமதி ஏ. என். ஹிதாயா அவர்களுக்கும் எமது திணைக்களத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பாடநூல் சம்பந்தமாக ஏதேனும் ஆலோசனைகளும் கருத்துக் களும் இருப்பின் மறுபதிப்பில் பிரசுரிப்பதற்கு ஏதுவாக முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். எனவே இப்பணியில் ஈடுபட்ட சகலரது முயற்சியையும் எல்லாம் வல்ல அல்லாஹ் பொருந்திக் கொள்வதுடன் உரிய பயனை அடைவதற்கு நம் அனைவருக்கும் அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக!

ஆமீன் !!

**மௌலவி எம். எச்.நூறுல் அமீன்,**
உதவிப்பணிப்பாளர்,
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180 T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு -10.

## உள்ளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| 01. | அக்லாக்கின் முக்கியத்துவம் | 01 |
| 02. | அக்லாக்-ஈமான் தொடர்பு | 04 |
| 03. | அக்லாக்-இபாதத் தொடர்பு | 05 |
| 04. | ஈமானியப் பண்புகள் | 08 |
| 05. | முஸ்லிம்களிடம் இருக்கவேண்டிய முக்கிய சில பண்புகள் | 23 |
| 06. | ஆன்மீக வளர்ச்சிக்குரிய செயற்பாடுகள் | 62 |
| 07. | ஆன்மீக வளர்ச்சிக்குரிய உளப்பண்புகள் | 74 |
| 08. | ஆன்மீக வளர்ச்சிக்கான சமூக உறவு | 80 |

# அல் அக்லாகுல் இஸ்லாமியா
# (இஸ்லாமியப் பண்பாடுகள்)

## நூல் அறிமுகம்

இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா, அல்குர்ஆன்) பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரிய தரங்களில் பாடசாலைகளில் கற்கும் முஸ்லிம் மாணவ, மாணவிகளுக்கான இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா, அல்குர்ஆன்) பாடசாலைகளுக்கான இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடத்திட்டம் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் முதல் வெளியீடாக 2003 ஆண்டிலும் இரண்டாம் வெளியீடாக 2008 ஆண்டிலும் வெளியிடப்பட்டு தற்போது இலங்கை முழுவதிலுமுள்ள அஹதிய்யா பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதை நன்றியுணர்வோடு நினைவு கூருகின்றோம்.

பாடத்திட்டத்தின் நோக்கு, இலக்கு, வெற்றி என்பன ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியிலேயே தங்கியிருக்கிறது. அந்த வகையில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தற்போது மேற் கொண்டிருக்கும் அயராத முயற்சியின் விளைவாக நிபுணத்துவ கல்வியியலாளர்-உலமாக்குழு தயாரித்துள்ள இந்த வழிகாட்டி; அஹதிய்யா பாடசாலைகளின் ஆசிரிய குழாத்தின் நீண்ட நாள் கனவை நனவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அல் அக்லாகுல் இஸ்லாமிய்யா என்ற பாடப்பகுதி 06 தேர்ச்சி மட்டங்களைக் கொண்டிருப்பதோடு அவை ஒவ்வொன்றும் உள்ளடக் கியுள்ள உபதலைப்புக்களை முக்கியத்துவப்படுத்தி ஆதாரபூர்வமாகவும் நடைமுறை சார்ந்த அம்சங்களோடும் விரிந்த கண்ணோட்டத்திலும் பல தியாகங்களுக்கு மத்தியில் இந்த வழிகாட்டி நூலை தயார் செய்துள்ளோம்.

சமயக் கல்விப் புலத்தில் அதிகமாகப் பேசப்படுகின்ற விழுமியக் கல்விச் சிந்தனையை எமது ஆக்கங்கள் கொண்டிருப்பதோடு இன்று இளைஞர் சமூகத்தால் எதிர்கொள்ளப்படும் ஒழுக்க, பண்பாட்டு, ஆன்மீக வறுமை, தேக்கம் என்பவற்றுக்கு சிறந்த தீர்வாக இஸ்லாமிய ஔடதமாகவும் இந்த வழிகாட்டி அமையும் என நம்புகிறோம்.

இந்த வழிகாட்டியைப் பயன்படுத்தும் சகல ஆசிரியர்களும் போதனையாளர்களும் பாடத்திட்ட உள்ளடக்கத்தை உள்வாங்கிய பின்னர் வழிகாட்டியை ஒப்பீடு செய்தால் வினைத்திறன் மிக்க கற்பித்தலுக்கும் போதனைக்கும் சிறப்பாகப் பங்களிப்புச் செய்ய முடியும் என எதிர்பார்க்கின்றோம். நாம் எழுதியவை மட்டும்தான் முடிவானவை என்று கருதாமல் அவற்றை அடிப்படையாக வைத்து மேலும் தேடல் ஆய்வுகளை மேற்கொள்ளும் உரிமை ஆசிரியர்களுக்கும் வாசகர் களுக்கும் தாரளமாக உண்டு என்பதை தெரிவித்து கொள்கிறோம்.

நூலாக்கக் குழுவின் சார்பாக


**(1) அஷ்ஷெய்க் எஸ். எம். எம். மஸாஹிர்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில்.

**(2) அஷ்ஷெய்க் எப். எம். ஏ. அன்சார் மௌலானா,**
விரிவுரையாளர்.
தேசிய கல்வியியல் கல்லூரி,
அட்டாளைச்சேனை.

# அக்லாக்

## அக்லாக்கின் முக்கியத்துவம்

இஸ்லாமிய மார்க்கத்தில் மிகவும் முக்கியமான ஒரு பகுதியாக "அக்லாக்" கருதப்படுகின்றது. "குலுக் ஹஸன்" அல்லது "அக்லாக் ஹஸனா" என்ற சொற்றொடர்களை இஸ்லாமிய மூலாதாரங்கள்; நற்பண்புகள், நல்லொழுக்கங்கள், ஒழுக்க விழுமியங்கள் போன்றவற்றுக்குப் பிரயோகித்துள்ளன. "மகாரிமுல் அக்லாக்" என்ற சொற்றொடரும் இதே கருத்துக்களில் ஹதீஸில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"அதப்" அல்லது, "ஆதாப்" என்ற பிரயோகமும் பொதுமக்கள் மத்தியில் நற்பண்புகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டாலும்; அப்பதம் செயல்களின் சீரிய ஒழுங்குமுறையைச் சுட்டிக்காட்டுவதற்கு இஸ்லாமிய ஷரீஅத்தில் உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக:

உண்ணல், குடித்தல் ஒழுங்குகள், மாணவன் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் என்பவற்றைக் கூறலாம்.

இஸ்லாத்தில் "அகாயித்" என்ற நம்பிக்கைக் கோட்பாடுகள், இபாதாத் என்ற வணக்க வழிபாடுகள், முஆமலாத் என்ற கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள், முனாகஹாத் என்ற திருமண விவாகரத்தோடு தொடர்பான அம்சங்கள், "ஜினாயாத்" என்ற குற்றவியல் சட்டங்கள், "அக்லாகிய்யாத்" என்ற நற்பண்புகள் தொடர்பான அம்சங்கள் என்று பிரதான பகுதிகள் அமைந்துள்ளன. அக்லாக் தொடர்பான பகுதி ஏனைய எல்லாப் பகுதிகளோடும் இரண்டறக் கலந்ததாகவும் அவற்றின் இறுதி இலக்காகவும் நோக்கப்படுகின்றது. இஸ்லாம் ஒரு சம்பூரணமான வாழ்க்கைத் திட்டம் என்றவகையில் ஏனைய அம்சங்களோடு அக்லாக்கையும் இணைத்து செயற்படுத்தும் போதுதான் இஸ்லாமிய வாழ்வு பரிபூரணமாகும்.

இஸ்லாம் நற்பண்புகளை உயர்ந்த இபாதத்தாகக் கருதுகின்றது. "நன்மை (நலவு) என்பதே நற்பண்புகள்தாம்." (முஸ்லிம்) என்ற நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ் இதனை விளக்குகின்றது.

**"அடியான், பலவீனமான வணக்க வழிபாடுகளைக் கொண்டிருந்த போதிலும்; தனது நற்பண்புகளினால் மறுமையில் உன்னதமான அந்தஸ்துக் களையும் கண்ணியமான இடங்களையும் அடைந்து கொள்வான். அவன் தனது தீய பண்புகளினால் நரகில் மிகவும் கீழான நிலையை அடைவான்."**

(தபரானீ) என்ற ஹதீஸும் நற்பண்புகளும் இபாதத்தாக மதிக்கப்படுகின்றன என்ற கருத்தை விளக்குகின்றது.

இறுதித் தூதர் (ஸல்) அவர்கள் இவ்வுலகிற்கு நபியாக அனுப்பப்பட்டதன் இலக்கு நற்பண்புகளை பூரணப்படுத்துவதுதான் என்ற கருத்தைக் கீழ்வரும் ஹதீஸ் விளக்குகின்றது.

**"நற்பண்புகளைப் பூரணப்படுத்துவதற்காகவே நான் (நபியாக) அனுப்பப் பட்டுள்ளேன்."** (முவத்தா)

"அல்லாஹ்வுக்கு மிக நேசத்திற்குரியவர் நற்பண்புகளைக் கொண்டவரே" என்ற கருத்தைப் பின்வரும் ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது.

உஸாமா பின் ஷுரைக் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள், **"நாங்கள் எங்களது தலைகள் மீது பறவைகள் அமர்ந்திருப்பது போன்று (ஆடாது அசையாது) நபி (ஸல்) அவர்களோடு அமர்ந்திருந்தோம். எங்களுள் யாரும் எதனையும் பேசவில்லை. அப்போது சிலர் நபியவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் அடியார்களுள் அவனுக்கு மிகவும் அன்புக்குரியவர் யார்?" எனக் கேட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "அவர்களுள் மிகச் சிறந்த பண்பாளர்"** எனப் பதிலளித்தார்கள். (தபரானீ)

ஈமான் பூரணமடைவதற்கும் நற்பண்புகள் அவசியம் என்ற கருத்தைப் பின்வரும் ஹதீஸ் விளக்குகின்றது. "நபி (ஸல்) அவர்களிடம் ஈமானில் பூரணத்துவம் வாய்ந்த மு∴மின் யார்? என வினவப்பட்டது. அதற்கு அவர், "அவர்களுள் மிகவும் சிறந்த நற்பண்பு கொண்டவர்" எனப் பதிலளித்தார்கள். (இப்னு மாஜா)

**"மனிதர்களுள் மிகச் சிறந்த இஸ்லாத்தை உடையவர் யாரெனில், அவர்களுள் மிகச் சிறந்த ஒழுக்கம் கொண்டவராவார்."** (அஹ்மத்) என்ற ஹதீஸ் இதை மேலும் உறுதிப்படுத்துகிறது.

நற்பண்புகளோடு வாழ்வது இம்மையில் மட்டுமன்றி; மறுமையிலும் பயன்தரக்கூடியது என்பதை **"மறுமை நாளில் மு∴மினின் தராசில் நற்பண்பைவிடப் பாரமான எதுவும் இருக்காது"** (பைஹகீ) என்ற ஹதீஸின் மூலம் நிறுவிய நபி (ஸல்) அவர்கள், அந்த ஹதீஸின் இறுதியிலே, நற்பண்பு கொண்டவர் அந்நற்பண்பின் மூலமாக நோன்பாளி, தொழுகையாளிகளுடைய அந்தஸ்தைப் பெறுவார் எனவும் கூறியுள்ளார்கள் (முஸ்னத் அஹ்மத்). இந்த அடிப்படையில் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு மிகவும் நேசத்துக்குரியவரும், மறுமையில் சுவர்க்கத்தில் மிக நெருக்கமாக இருக்கக் கூடியவரும் யார் என்று கூறும்போதும், **"உங்களுள் மிகவும் நற்பண்பு கொண்டவர்"** (அஹ்மத்) என்று அழுத்திக் கூறியுள்ளார்கள்.

மேலுள்ள ஹதீஸ்களின்படி “அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மிகவும் நேசத்துக்குரியவர், மக்களுள் சிறந்தவர், ஈமானில் பூரணமானவர், மறுமையில் நபி (ஸல்) அவர்களுக்கு அருகிலிருப்பவர், மறுமையில் மிக அதிக நன்மைகளைப் பெறுபவர் யார்” என்ற கேள்விக்கு **“மிகச் சிறந்த நற்பண்புள்ளவர்”** என்று பதில் கூறப்பட்டிருப்பது இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

நல்ல ஒழுக்க விழுமியங்களோடு வாழ்வது என்பது நபி (ஸல்) அவர்களின் மிகச் சிறந்த ஸுன்னா என்பதையும் நாம் புரிந்து கொள்ளுதல் வேண்டும். கண்ணியத்திற்குரிய எமது நபி (ஸல்) அவர்கள், நபித்துவம் கிடைப்பதற்கு முன்பே மிகச் சிறந்த ஒழுக்கப்பண்புகளைக் கொண்டவர்களாக விளங்கினார்கள். அவர்களது எதிரிகள் கூட அவரை அதற்காகப் பாராட்டினார்கள். அவரது ஒழுக்கப் பண்புகள் சிகரத்தை எட்டியிருந்தன. சிறந்த பண்புகள் அவரிடம் நிறைந்து இருந்ததை அவர்களது மனைவி மார்களும், தோழர்களும் ஏன் எதிரிகளும் கூட சான்று பகன்றிருப்பதை நாம் வரலாற்று ஏடுகளில் காண்கிறோம். அதனால்தான் மனிதர்கள் அனைவரும் பின்பற்றத்தக்க உயரிய முன்மாதிரி அவரிடம் இருப்பதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. “அல்லாஹ்வையும் இறுதிநாளையும் உறுதியாக நம்புகிறவர்களுக்குரிய அழகிய முன்மாதிரி நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடமே உங்களுக்கு இருக்கின்றது.” (33 : 21)

தனிமனிதன், குடும்பம், சமூகம் என்பவற்றின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் நற்பண்புகளுக்கு ஒரு பாரிய பங்கு உண்டு. ஒழுக்க மாண்புகளைக் கடைப்பிடிக்கின்ற தனிமனிதன், குடும்பம், சமூகம் பிறரால் மதிக்கப்படுவதையும், கௌரவிக்கப்படுவதையும், புகழப்படுவதையும் காண்கின்றோம். மிக மோசமான பண்பு கொண்ட, கீழ்த்தரமான நடத்தை கொண்ட தனிமனிதன், குடும்பம், சமூகம் இகழப்படுவதையும் தூற்றப்படுவதையும் அவதானிக்கின்றோம்.

வரலாற்றில் இஸ்லாத்தின் பரவலுக்கும், அதன் தொடர் வெற்றிகளுக்கும் வியாபகத்திற்கும் நற்பண்புகளின் வகிபாகம் மிகப் பெரும் துணையாகியது. முஸ்லிம்கள் த.்.வாவிற்காகவும், வியாபாரத்திற்காகவும், கல்விக்காகவும், வேறுபல தேவைகளுக்காகவும் அறேபியத் தீபகற்பத்தை விட்டு வெளியேறி, பல நாடுகளுக்கும் சென்ற போது அவர்கள் உயர்ந்த நற்பண்புகளையும் இணைத்துக்கொண்டே சென்றனர். அதுவே முஸ்லிம்கள் அங்கு எழுச்சி பெறவும் இஸ்லாத்தை சுதேசிகள் ஏற்றுக்கொள்ளவும் காரணமாயின. இலங்கை, தென்னிந்தியா, மாலைதீவு போன்ற தென்னாசிய நாடுகளிலும் மலேஷியா, இந்தோனேஷியா, புரூணை போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் இஸ்லாம் தழைத்தோங்குவதற்கு முஸ்லிம்களின் பண்பாடுகளே ஏதுவாக அமைந்தன.

எனவே, இஸ்லாம் நற்பண்புகளுக்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை உணர்ந்து, அவற்றை எமது வாழ்வில் முழுமையாகக் கடைப்பிடித்து, பூரண மு.ஃ.மின்களாக வாழ்வதற்கு எத்தனிப்போமாக.

## அக்லாக் - ஈமான் மற்றும் இபாதத்துக்களிடையிலான நெருங்கிய தொடர்பு

இறைவேதமான அல்குர்ஆனும், இறுதித் தூதரின் ஹதீஸ்களும் நற்பண்புகளுக்கும் - ஈமானுக்கும், நற்பண்புகளுக்கும் இபாதாத்துக்குமிடையே மிக நெருங்கிய தொடர்பிருப்பதை எடுத்துக்காட்டுகின்றன. அவற்றைக் கீழே அவதானிப்போம்.

### அக்லாக் - ஈமான் தொடர்பு

அல்-குர்ஆனும் அல்-ஹதீஸும் நற்பண்புகளை ஈமானோடு இணைந்ததாகச் சுட்டிக் காட்டுகின்றன. ஒரு மு.ஃ.மின் ஒழுக்க மாண்புகள் இல்லாதவனாக இருக்க முடியாது என்பது இதன் கருத்தாகும்.

> ஈமான் என்ற அடிப்படை (சக்தி) நற்பண்புகளை நோக்கி மனிதனை வழிநடாத்துகின்றது. **“விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து (சொல்லிலும் செயலிலும்) உண்மையாளர்களுடன் இருங்கள்.”** (அத்தௌபா; 9 : 119) என அல் குர்ஆன் விளக்குகின்றது. **“வெட்க உணர்வும் ஈமானும் ஒன்றோடொன்று பிணைந்தவை. ஒன்று நீங்கி விட்டால் மற்றதும் நீங்கிவிடும்”** (ஹாகிம், தபரானீ) என்ற ஹதீஸும் நற்பண்புக்கும் ஈமானுக்குமிடையிலுள்ள மிக நெருக்கமான இணைப்பை விளக்குகின்றன.

அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொள்வதோடு; நற்பண்புகளை தொடர்புபடுத்தி பல்வேறு ஹதீஸ்கள் வந்துள்ளன. **“யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டுள்ளாரோ அவர் நல்லதையே பேசட்டும்; அல்லது மௌனமாக இருக்கட்டும்.”** (புஹாரி) போன்ற ஹதீஸ்கள் இதற்குதாரணமாகும்.

மோசமான பண்புகளைக் கொண்டிருப்பது ஈமானைப் பலவீனப்படுத்தும்; அதனைப் பாழ்படுத்திவிடும் என்ற விடயத்தை ஹதீஸ்கள் தெளிவு படுத்துகின்றன. **“அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவன் ஈமான் கொண்டவனல்லன்; அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவன் ஈமான் கொண்டவனல்லன்”**; என்று நபியவர்கள் கூற, அவன் யார் அல்லாஹ்வின் தூதரே! எனக் கேட்கப்பட்டது. அதற்கவர், **“யாருடைய துன்பங்களிலிருந்து அவனது அண்டை வீட்டான்**

**பாதுகாப்புப் பெறவில்லையோ அவன்"** என நபியவர்கள் பதில் கூறினார்கள்." (புஹாரி) அண்டை வீட்டாரைத் துன்புறுத்துதல் ஒருவனின் ஈமானையே பாதித்துவிடும் என்பதை மேலுள்ள ஹதீஸ் தெளிவாகக் கூறுகின்றது.

ஈமானைப் பாதிக்கின்ற "நிபாக்" என்ற நயவஞ்சகத்தனத்தின் அடையாளங் களைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட அனைத்தும் நற்பண்புகளுக்கு முரணானவை என்பது சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

**"எவனிடம் மூன்று பண்புகள் இருக்கின்றனவோ அவன் முனாபிக்காவான். அவன் நோன்பு பிடித்து, தொழுது, ஹஜ் செய்து, உம்ரா செய்து தான் ஒரு முஸ்லிம் என்று கூறிய போதிலும் கூட, அவன் பேசினால் பொய் பேசுவான்; வாக்குறுதியளித்தால் மாறு செய்வான் ; நம்பினால் மோசடி செய்வான்."** (முஸ்லிம்). மற்றொரு ஹதீஸில் நான்கு அடையாளங்கள் என்று கூறிவிட்டு, மேலுள்ள மூன்றோடு நான்காவது பண்பாக **"வாதாடினால் மோசமான வார்த்தைகளைப் பிரயோகிப்பான்."** (புஹாரி) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, **"ஈமானும் ஒழுக்கப் பண்புகளும் ஒன்றோடொன்று இணைந்தவை"** என்பதையும் ஒரு மு.்.மின் நற்குணங்கள் இல்லாத நிலையில் முஸ்லிமாக வாழ முடியாது என்பதையும் மேலுள்ள அம்சங்களினூடாகப் புரிந்து கொள்கின்றோம்.

### அக்லாக் - இபாதத் தொடர்பு

நற்பண்புகளுக்கும் வணக்க வழிபாடுகளுக்கும் இடையேயும் மிக நெருங்கிய தொடர்புண்டு. இஸ்லாம், மக்கள் மீது கடமையாக்கியுள்ள அடிப்படைக் கடமைகளினூடாக நற்பண்புள்ள முஸ்லிமை உருவாக்கவே விரும்புகின்றது. அல் குர்ஆனும் அல் ஹதீஸும் இதனை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

### தொழுகை

ஒரு மு.்.மின், தொழுகையைச் சீராகவும், நேர்த்தியாகவும், நியமமாகவும் தொழுவதனூடாக தீய செயல்களையும், பாவங்களையும் விட்டுத் தூய்மை பெறுதல் வேண்டும் என்பதைக் கீழ்வரும் இறைவசனம் விளக்குகின்றது.

**"தொழுகையைக் கடைப்பிடித்து வருவீராக ! ஏனென்றால் நிச்சயமாகத் தொழுகை, மானக்கேடான காரியங்களிலிருந்தும் பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்குகின்றது."** (29 : 45)

சூறதுல் மாஊனிலும் இக்கருத்து வலியுறுத்தப்படுகிறது.

## ஸகாத்

ஸகாத்தை வழங்குவதன் நோக்கமும் மனிதனை லௌகீக ரீதியாகவும்; ஆன்மீக ரீதியாகவும் பரிசுத்தப்படுத்துவதாகும். அல் குர்ஆன் அதனைப் பின்வருமாறு கூறுகின்றது.

> **"(நபியே! அவர்கள் தங்கள் குற்றத்திற்கு பரிகாரமாகக் கொண்டு வந்திருக்கும்) அவர்களுடைய பொருட்களைத் தானமாக நீர் எடுத்துக் கொண்டு (உள்ளும் புறமும்) அவர்களை பரிசுத்தமாக்கி வைத்து, அதைக்கொண்டு அவர்களை தூய்மைப்படுத்தி (பாக்கியவான் களாக்கும்படி) அவர்களை ஆசிர்வதிப்பீராக"** (9 : 103)

இறைதூதர் (ஸல்) அவர்கள், "ஸதகா" என்ற பதத்தின் கருத்தை மிக விரிவானதாக காட்டியுள்ளார்கள். அதற்குள் மிக அதிகமான நற்குணங்கள் அமைந்திருக்கின்றன. **"நீர் உமது சகோதரனின் முகத்தைப் பார்த்து புன்னகைப்பதும் உமக்கு ஸதகாவாகும்", "நீர் நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தலும் தர்மமாகும்.", வழிதவறிய ஒருவருக்கு பாதையைக் காட்டிவிடுவது உமக்கு ஸதகாவாகும்.", "பாதையை விட்டும் தீங்குகள் விளைவிக்கும் முள், எலும்பு போன்றவற்றை அகற்றுவது உமக்கு ஸதகாவாக அமையும்"** என்பதனை நிகர்த்த ஹதீஸ்கள் ஸஹீஹ் புஹாரியில் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றமை இதற்கு ஆதாரமாக அமைகின்றன. இவையனைத்து நற்பண்புகளும் ஸதகா எனும் நன்மை தரும் கருமமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

## நோன்பு

நோன்பின் பிரதான இலக்கு "இறை உணர்வு கொண்ட மு:ஃமினைத் தயார்படுத்துவதாகும்" என்பதை அல் குர்ஆன் விளக்குகின்றது.

> **"விசுவாசிகளே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது விதிக்கப் பட்டிருந்தது போலவே ; உங்கள் மீதும் நோன்பு நோற்பது விதிக்கப்பட்டுள்ளது. (அதனால்) நீங்கள் பரிசுத்தவான்களாகலாம்."** (2 : 183)

நோன்பு நற்பண்புகளை உருவாக்கவில்லையாயின் அந்த நோன்பில் பயனேதுமில்லை என்ற கருத்தைப் பல்வேறு ஹதீஸ்கள் வலியுறுத்துகின்றன. **"யார் பொய் பேசுவதையும் தீய செயல்களையும் விட்டு விடவில்லையோ அவர் தனது உணவையும், பானத்தையும் விட்டுவிடுவதில் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையும் கிடையாது."** (புஹாரி)

**“நோன்பு என்பது சாப்பிடுவதையும்; குடிப்பதையும் தவிர்த்திருத்தல் அல்ல. உண்மையில் நோன்பு என்பது வீணானவற்றையும்; தீய செயல்களையும் விட்டுவிடுவதாகும். யாராவது ஒருவர் நோன்பாளி ஒருவரை தூற்றினால் அல்லது கோபமூட்டினால் அவர், “நான் ஒரு நோன்பாளி” எனக் கூறி விடட்டும்.”** (இப்னு குஸைமா)

## ஹஜ்

ஹஜ்ஜின் மூலமும் நற்பண்புகளும் ஆன்மீகப் பரிபக்குவமும் ஏற்பட வேண்டும் என இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. அதற்கான ஒரு பயிற்சியாக ஹஜ் கிரியைகளை அல்லாஹ் அமைத்துள்ளான்.

**“ஆகவே, அவற்றில் எவரேனும் (இஹ்ராம் அணிந்து) ஹஜ்ஜைத் (தன் மீது) கடமையாக்கிக் கொண்டால், ஹஜ்ஜு (மாதத்தின் பத்தாம் திகதி) வரையில், சம்போகம், துர்வார்த்தை பேசுதல், சச்சரவு செய்து கொள்ளல் கூடாது...”** (2 : 197)

பொதுவாக ஒரு முஸ்லிம் வணக்க வழிபாடுகளில் கூடுதல் கவனம் செலுத்துவது போன்று தமது வாழ்வில் நற்பண்களை வளர்த்துக் கொள்வதற்கும் முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். நற்குணமில்லாத இபாதத்தாளிகளை இஸ்லாம் வரவேற்பதில்லை. இதனைப் பின்வரும் ஹதீஸ்கள் தெளிவுபடுத்துகின்றன.

**“ஒரு மனிதர், “அல்லாஹ்வின் தூதரே! ஒரு பெண்மணி இருக்கின்றாள். அவள் மிக அதிகமாக தொழுகை, நோன்பு, தர்மங்கள் செய்பவளாக காணப்படுகின்றாள். ஆனால், அவள் தனது நாவினால் அயலவர்களைத் துன்புறுத்துகின்றாள்.”என்று கூறினார். அதற்கு நபியவர்கள், “அவள் நரகில் இருப்பாள்” என்றார்கள். அந்நபர் மீண்டும், “அல்லாஹ்வின் தூதரே! இன்னொரு பெண்மணி, குறைவாகவே தொழுகை, நோன்பில் ஈடுபடுவாள். அவள் வெண்ணெய் கட்டிகளைக்கூட தர்மம் செய்வாள். ஆனால், அவள் தனது அண்டை வீட்டாரைத் துன்புறுத்துவதில்லை.” என்றார். அதற்கு நபி (ஸல்), “அவள் சுவர்க்கத்தில் இருப்பாள் என்றார்கள்”** (அஹ்மத்)

**“ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களை நோக்கி, “வங்குறோத்துக்காரன் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?”என்று கேட்டார்கள். அதற்கவர்கள், “யாரிடம் திர்ஹம்களும், செல்வங்களும்**

**இல்லையோ அவர்தான் எங்களிடத்தில் வங்குறோத்துக்காரன் எனப்படுகின்றான்" என்றார்கள். அதற்கு நபியவர்கள், "எனது சமூகத்தில் வங்குறோத்து நிலையை அடைந்தவன் யாரென்றால், மறுமை நாளில் அவன் தொழுகை, ஸகாத், நோன்போடு வருவான். அதே நேரத்தில் அவன் ஒருவனை ஏசியிருப்பான். இன்னொரு வனுக்கு அவதூறு கூறியிருப்பான்; வேறொருவரின் சொத்தை அபகரித்திருப்பான்; மேலுமொருவரின் இரத்தத்தை ஓட்டியிருப்பான். இன்னொருவருக்கு அடித்திருப்பான். பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் அவனது நன்மைகளிலிருந்து கொடுக்கப்படும். அவர் வழங்க வேண்டியவை முடியமுன்பு, அவனது நன்மைகள் முடிந்துவிட்டால், பாதிப்புற்றவர்களின் பாவங்களிலிருந்து எடுக்கப்பட்டு, அது அவன் மீது சுமத்தப்பட்டு, பின்னர் நரகில் தூக்கி எறியப்படுவான் என்று விளக்கினார்கள்."** (முஸ்லிம்)

எனவே, நாம் வணக்க வழிபாடுகளில் கூடிய கவனம் செலுத்துவதோடு, அவற்றின் இறுதி இலக்கான நற்குணங்களை எம்மில் வளர்த்து, தீய குணங்களை எம்மிலிருந்து நீக்கிக் கொள்வோமாக.

### ஈமானியப் பண்புகள்

மு.ஃ.மின்கள் நற்பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும். ஈமான் கொண்டவர்கள் மிகச் சிறந்த பண்பாளர்களாக மிளிர வேண்டும் என அல் குர்ஆனும், அல் ஹதீஸூம் எதிர்பார்க்கின்றன. அத்தோடு இஸ்லாத்தின் அடிப்படை அம்சமான ஈமான், பல்வேறு நற்பண்புகளை உள்வாங்கிக்கொள்ளுமாறு வேண்டுகின்றது. அவற்றுள் மிக முக்கியமான சில பண்புகளை நாம் நோக்குவோம்.

### இக்லாஸ்

உளத்தூய்மை எனப்படுகின்ற இக்லாஸ், அல்லாஹ்வின் நெருக்கத்தை ஆதரவு வைத்தவனாக, அவனுக்குக் கீழ்படிந்து, அவனுக்காகவே ஒரு கருமத்தைச் செய்வதைக் குறிக்கும். ஏனைய மனிதர்களால் புகழப்படுதல் வேண்டும் என்பதற்காகவோ, விரும்பப்படவேண்டும் என்பதற்காகவோ, வேறு உலகியல் இலாபங்களுக்காகவோ அன்றி, தூய்மையாக அல்லாஹ்வை மட்டும் நாடிச் செய்வதே இக்லாஸ் ஆகும்.

மனிதன் எந்த ஒரு கருமத்தைச் செய்கின்றபோதும் அவன் யாருக்காக, எதற்காக அதனைச் செய்கின்றான் என்ற எண்ணம் அவனது மனதில் உருவாகும். அவ்வாறு உருவாகின்ற பின்னணிக் காரணி அல்லாஹ்விற்காக என அமைய வேண்டும் என்பதே இஸ்லாத்தின் எதிர்பார்ப்பாகும்.

இக்லாஸ், ஒவ்வொரு மு.ஃமினிடமும் எதிர்பார்க்கப்படுகின்ற பிரதான பண்பு என்பதை அல்குர்ஆனும், அல் ஹதீஸும் தெளிவாகக் கூறுகின்றன.

**"அன்றி, அவர்கள் அல்லாஹ்வின் மீதுள்ள அன்பின் காரணமாக ஏழைகளுக்கும் அநாதைகளுக்கும் சிறைப்பட்டோருக்கும் ஆகாரமளித்தும் வந்தனர். "நாம் உங்களுக்கு ஆகாரமளிப்பதெல்லாம், அல்லாஹ்வின் முகத்தை நாடியேயன்றி, உங்களிடம் நாம் யாதொரு கூலியையோ அல்லது (நீங்கள் நமக்கு) நன்றி செலுத்துவதையோ கருதவில்லை" (என்று கூறுவர்)"** (76 : 8, 9).

இறைதூதர் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விற்கு அடிபணிந்து செய்யப்படும் செயல், சாதாரண செயல் என்பதை எடுத்துக்காட்டும் பிரிகோடாக இக்லாஸை எடுத்தியம்பியுள்ளார்கள். **"எல்லாச் செயற்பாடுகளும் எண்ணங்களை வைத்தே (தீர்மானிக்கப்படுகின்றன). ஒவ்வொரு மனிதனுக்கும் தான் எண்ணியதே உண்டு. யாருடைய ஹிஜ்ரத் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்குமாக இருந்ததோ அவரது ஹிஜ்ரத் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்குமாக அமைந்துவிடும்."** யாருடைய ஹிஜ்ரத் உலகத்தை அடைந்து கொள்வதற்காகவோ அல்லது ஒரு பெண்ணை விவாகம் செய்வதற்காகவோ அமைந்திருந்தால் அவரது ஹிஜ்ரத் அதற்கானதாக அமைந்து விடும்." (புஹாரி, முஸ்லிம்)

இஸ்லாமிய ஷரீஅத்தில் வணக்க வழிபாடுகளாயினும் சரி, சாதாரண அன்றாடச் செயற்பாடுகளாயினும் சரி, அல்லாஹ்விடத்தில் அங்கீகாரம் பெறுவதற்கு இரண்டு நிபந்தனைகள் உண்டு. ஒன்று அச்செயல் இக்லாஸோடு செய்யப்பட்டிருக்க வேண்டும். மற்றையது குறிப்பிட்ட அச்செயல் நபியவர்கள் காட்டித்தந்த முறைப்படி அல்லது ஷரீஅத்துடைய அங்கீகாரம் பெற்றதாக அமைந்திருத்தல் வேண்டும்.

இந்த அடிப்படையில் வணக்க வழிபாடுகளைச் செய்வதாயின் இக்லாஸும், நபியவர்கள் காட்டித் தந்த வழிமுறைகளும் பேணப்படுதல் வேண்டும். சாதாரண செயல்களைச் செய்வதாயின் இக்லாஸும் ஷரீஅத்துடைய அங்கீகாரமும் இருத்தல் வேண்டும். அதனைத்தான் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு பிரஸ்தாபித்தார்கள். **"யார் ஒருவர் ஒரு கட்டடத்தை அநியாயம் செய்யும் நோக்கமோ அத்துமீறும் நோக்கமோ இன்றி கட்டுகின்றாரோ; அல்லது அநியாயம், அத்துமீறும் நோக்கமின்றி ஒரு பயிரை நடுகின்றாரோ அவற்றிலிருந்து ரஹ்மானின் படைப்பினங்கள் பயன்பெறும் காலமெல்லாம் தொடர்ந்து நன்மை தரக்கூடியவையாக அவை மாறிவிடும்."** (அஹ்மத்)

உண்மையான இக்லாஸுடைய எண்ணம், சிலவேளைகளில் அமல் செய்யாமலேயே நன்மை பெற்றுத் தரக்கூடியதாக அமையலாம் என்ற கருத்தை அல் குர்ஆனும் ; சுன்னாவும் விளக்குகின்றன.

> **"எவரேனும், தன் இல்லத்தை விட்டு வெளியாகி, அல்லாஹ்வின்பாலும்; அவனது தூதரின்பாலும் செல்லும் வழியில் இறந்துவிட்டால் அவருடைய வெகுமதி நிச்சயமாக அல்லாஹ்வின் மீது கடமையாகிவிட்டது. அல்லாஹ் மிக்க மன்னிப்போனும் அன்பு புரிவோனுமாவான்." (4 : 100)**

> "தபூக்" யுத்தத்தில் கலந்துகொள்ளாதிருந்த சிலரைப் பற்றி நபி (ஸல்) அவர்கள், **"எமக்குப் பின்னால் மதீனாவில் சிலர் இருக்கின்றனர். நாங்கள் ஒரு மலைப்பாங்கான இடத்தை அல்லது பள்ளத்தாக்கைக் கடந்து செல்லும் போதெல்லாம் அவர்கள் எங்களோடு இருக்கின்றனர். அவர்களை நியாயமான காரணங்கள் தடுத்துவிட்டன."** (புஹாரி) என்று கூறினார்கள்

இக்லாஸுக்கு முரணாக வாழ்வது பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விடும். அதிலொன்று முகஸ்துதி ஆகும். முகஸ்துதி எனப்படுவது பிறருக்காக ஒன்றைச் செய்வதாகும். அது பெரிய இபாதத்களைக் கூட நாசப்படுத்திவிடும் என்பதை அல்லாஹ் அல்-குர்ஆனில் சூறதுல் மாஊனில் விளக்குகின்றான்.

**“சிறிதளவு முகஸ்துதியும் ஷிர்க்காகும்”** (ஹாகிம்) என்ற கருத்தினூடாக முகஸ்துதி அல்லாஹ்வுக்கு இணை வைக்கும் பெரிய பாவத்திற்குக் கொண்டு செல்கின்றது என்பதை நபியவர்கள் குறிப்பிட்டார்கள்.

எனவே, **“நிச்சயமாக அல்லாஹ் உங்களது உடம்புகளையோ தோற்றங்களையோ பார்ப்பதில்லை. அவன் பார்ப்பதெல்லாம் உங்களது உள்ளங்களையும் செயல்களையும்தான்”** (முஸ்லிம்) என்ற ஹதீஸை அடியொட்டி எமது வாழ்வை அமைத்துக்கொள்வோமாக.

**நீதி, நேர்மை**

ஈமானியப் பண்புகளுள் நீதியாக நடப்பதும் நேர்மை தவறாது வாழ்வதும் மிக முக்கியமானவையாகும். நடுநிலையோடு நடத்தல், பக்கச் சார்பின்றிச் செயற்படல், ஒவ்வொருவருக்கும் அவரவருக்குரியதை வழங்குதல் நீதி எனப்படுகின்றது.

இந்தப் பண்பை பல்வேறு இடங்களில் அல் - குர்ஆன் வலியுறுத்துகின்றது.

> **“(விசுவாசிகளே ! உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட) அமானிதப் பொருட்களை அவற்றின் சொந்தக்காரர்களிடம் நீங்கள் ஒப்படைத்து விடும்படியும், மனிதர்களுக்கிடையில் நீங்கள் தீர்ப்புக் கூறினால் (பாரபட்சமின்றி) நீதமாகவே தீர்ப்பளிக்குமாறும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான்.”** (4 : 58)

நீதி பல்வேறு முறைகளில் வெளிப்படுத்தப்படும். பொதுவாக தீர்ப்பு வழங்கும் போது நீதி வழங்குதல் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. மேலுள்ள அல் குர்ஆன் வசனம் அதற்கு நல்லதொரு ஆதாரமாகும். கடமைகளையும் பொறுப்புக்களையும் வழங்கும் போது நீதி பேணப்படுதல் வேண்டும். சாட்சியம் கூறும் போது நீதி பேணப்படுதல் வேண்டும்.

> **“விசுவாசிகளே ! நீதத்தை நிலைநாட்டுவதில், அல்லாஹ்வுக்காக நீங்கள் உறுதியான சாட்சிகளாக இருங்கள்”.** (5 : 8)

அத்தோடு நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கும் போதும் நீதியாக நடத்தல் வேண்டும்.

**“நீங்கள் எதைத் கூறியபோதிலும் (அதனால் பாதிக்கப்படுபவர் உங்கள்) உறவினராயினும் (சரியே) நீதத்தையே கூறுங்கள்”** (6 : 152)

அளவை நிறுவைகளிலும் நீதம் பேணப்படுதல் வேண்டும்.

**“அளவை (சரியான அளவு கொண்டு) பூரணமாக அளவுங்கள். எடையை நீதமாக நிறுத்துங்கள்.”** (6 : 152)

மக்ஸூம் கிளையைச் சேர்ந்த ஒரு பெண் திருடிவிட்டாள். அப்பெண்ணுக் காக உஸாமா பின் ஸைத் (றழி) அவர்கள் சிபாரிசுக்காக வந்தபோது நபி (ஸல்) அவர்கள், உஸாமா (றழி) அவர்களிடம், **“அல்லாஹ் விதித்த தண்டனை விடயத்தில் நீ சிபாரிசு செய்கின்றாயா? அல்லாஹ்வின் மீது ஆணையாக முஹம்மதின் மகள் பாத்திமா திருடினாலும் அவளது கரத்தைத் துண்டிப்பேன்”** என்று கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

உண்மையான ஒரு மு:்மின் அநீதமிழைக்கமாட்டார். **“அநீதமிழைப் பதை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அநீதியிழைப்பது மறுமை நாளின் இருள்களாகும்.”** (முஸ்லிம்) என நபியவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

அல்லாஹுத் தஆலா, அநீதமிழைப்பதில் அடியார்கள் ஈடுபடக்கூடாது எனத் தடுத்துள்ளான். ஹதீஸ் குத்ஸி ஒன்று பின்வருமாறு குறிப்பிடுகிறது. **“எனது அடியார்களே! நான் அநீதமிழைப்பதை எனக்கு நானே தடை விதித்துக் கொண்டேன். அதை உங்களுக்கு மத்தியிலும் விலக்கப்பட்ட தாகவே ஆக்கியிருக்கின்றேன். நீங்கள் ஒருவருக்கொருவர் அநீதி யிழைத்துக் கொள்ளாதீர்கள்.”** (முஸ்லிம்) அநீதமிழைப்பது ஒரு முஸ்லிமின் பண்பல்ல என்பதை நபி (ஸல்) அவர்கள் குறித்துக் காட்டினார்கள். **“ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரராவார். அவருக்கு அவர் அநீதியிழைக்கமாட்டார்.....”** (புஹாரி)

முஸ்லிமல்லாதவர்களின் விடயங்களிலும் அநீதி இடம்பெறக் கூடாது என அல் குர்ஆன் வலியுறுத்துகின்றது.

**"(விசுவாசிகளே!) மார்க்க விஷயத்தில் உங்களுடன் எதிர்த்து யுத்தம் புரியாதவர்களுக்கும் உங்கள் இல்லங்களி லிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்வதையும், அவர் களுடன் நீங்கள் நீதமாக நடந்து கொள்வதையும் அல்லாஹ் உங்களுக்குத் தடுக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்து வோரை நேசிக்கின்றான்."** (60 : 08)

எனவே, நாமும் எல்லா சந்தர்ப்பங்களிலும் நீதியைப் பேணி, அநீதியை விலக்கி வாழ்வோமாக.

### பொறுமை

பொறுமை மிகச் சிறந்த பண்புகளுள் ஒன்றாகும். உயர்ந்த மனிதர்களான நபிமார்களின் சிறப்புப் பண்புகளுள் இதுவும் ஒன்றாகும். அல்லாஹ்வின் திருநாமங்களுள் மிகவும் பொறுமைமிக்கவன் எனும் கருத்தைத் தரும் அஸ்-ஸபூர் என்பதுவும் ஒன்றாகும்.

அல்குர்ஆன் கிட்டத்தட்ட 70 இடங்களில் பொறுமையைப் பற்றிப் பிரஸ்தாபித்துள்ளமை அதன் முக்கியத்துவத்தை விளக்குவதற்குச் சிறந்த சான்றாகும்.

**"பொறுமையாளர்கள் தங்களது கூலியை அதிகமாக பெறுவார்கள்" (39 : 10) "அன்றி, அவர்கள் இம்மையில் (கஷ்டங்களைச்) சகித்துக் கொண்டிருந்ததன் காரணமாகச் சுவனபதியையும் ; (அணிவதற்குப்) பட்டாடைகளையும் அவர்களுக்குக் கூலியாகக் கொடுத்தான்".** (76 : 12)

இறைதூதர் (ஸல்) அவர்களும் பொறுமையின் சிறப்பு பற்றி பல ஹதீஸ்களில் எடுத்துரைத்துள்ளதோடு தமது வாழ்விலும் அதனைக் கடைப்பிடித்துள்ளார்கள். "பொறுமை என்பது ஓர் ஒளியாகும்." (முஸ்லிம்) "பொறுமையைக் கைக்கொள்பவனுக்கு அல்லாஹ் பொறுமை பேணும் பண்பை வழங்குகின்றான். இன்னும் பொறுமையை விட ஒருவன் பெற்ற சிறந்த விரிவான சன்மானம் வேறெதுவுமில்லை." (புகாரி)

நபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்க்கை முழுவதிலும் பொறுமையின் அடையாளங்கள் மிகத் தெளிவாகத் தெரிகின்றன. குறைஷிகள் இஸ்லாம் பரவுவதற்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள்; நபித் தோழர்கள் துன்பங்களுக்கும் சித்திரவதைகளுக்கும் உட்பட்டமை, நபி (ஸல்) அவர்களின் வணக்கங்களின் போது இடையூறுகள் விளைவித்தமை, தாயிப் நகருக்குச் சென்றவேளை முகங்கொடுத்த எதிர்ப்புக்கள், கதீஜா (றழி), அபூ தாலிப் ஆகியோரின் மரணம் போன்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் நபி (ஸல்) அவர்கள் நிலைகுலையாமல் பொறுமைகாத்தார்கள்.

**பொறுமை பல விதமாக அமைகின்றது ; அவற்றில் சில :**

**(அ) கீழ்படிதலில் கைக்கொள்ளப்படும் பொறுமை**

இது இஸ்லாம் கட்டளையிட்டுள்ள தொழுகை முதலான கடமைகளை நிறைவேற்றுவதிலும் ; கிரமமாகச் செய்துவருவதிலும் காட்டப்படும் பொறுமையாகும். அக்கடமைகளை வாழ்வு முழுவதும் எடுத்து நடப்பதற்கு பொறுமை அவசியமாகும்.

> **“(நபியே !) தொழுதுவருமாறு நீர் உம் குடும்பத்தினரை ஏவுவீராக! நீரும் அதன் மீது உறுதியாக இருப்பீராக !” (20 : 132)**
>
> **“(நபியே!) எவர்கள் தங்கள் இறைவனின் பொருத்தத்தை நாடி, அவனையே காலையிலும் மாலையிலும் (பிரார்த்தனை செய்து அழைத்துக் கொண்டிருக்கிறாரோ அவர்களுடன் நீரும் (உம் கஷ்டங்களைச் சகித்துப் பொறுத்திருப்பீராக!”** (18 : 28)

**(ஆ) பாவங்களிலிருந்து தடுத்துக் கொள்ளும் பொறுமை**

பாவச் செயல்களும் மனோ இச்சையும் கவர்ச்சிகரமாக இருப்பதனால் அவற்றிலிருந்து தவிர்ந்து, தங்களைத் தற்காத்துக் கொள்வதற்குப் பொறுமை அவசியமாகும்.

**“எங்கள் இறைவனே! எங்கள் மீது பொறுமையைச் சொரிவாயாக. (உனக்கு) முற்றிலும் வழிப்பட்டவர்களாக (எங்களை ஆக்கி) எங்களை நீ கைப்பற்றிக் கொள்வாயாக.”** (7 : 126)

**(இ) துன்பங்களின் போதுள்ள பொறுமை**

உலக வாழ்வின் யதார்த்தங்களுள் ஒன்றான உயிர், உடைமை இழப்புகளின் போது நம்பிக்கையிழந்து விடாமலும் உயிரை மாய்த்துக் கொள்ளாமலும் இருப்பதற்கு பொறுமை அவசியமாகும். உயிர், உடைமை, குடும்பம், பதவி, அந்தஸ்து போன்றவற்றில் ஏற்படும் இழப்பின் போது ஒரு மு.்.மின் பொறுமை காப்பான். அது அவனுக்கு நன்மையாகவே அமைந்துவிடும்.

**“(விசுவாசிகளே!) ஓரளவு பயத்தாலும், பசியாலும், பொருட்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் நட்டத்தாலும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். என்றாலும், (நபியே! இச்சோதனைகளால் ஏற்படும் நட்டங்களைச்) சகித்துக் கொண்டிருப்போருக்கு நீர் நன்மாராயங் கூறுவீராக (சோதனைக் குள்ளாகும்) அவர்கள் தங்களுக்கு எத்தகைய கஷ்டம் ஏற்பட்ட போதிலும் “நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கின்றோம் ; நிச்சயமாக நாம் அவனிடமே மீளுவோம்.” என்று கூறுவார்கள். இத்தகையோர் மீதுதான் அவர்களுடைய இறைவனின் ஆசீர்வாதங்களும் கிருபையும் ஏற்படுகின்றன. மேலும் இவர்கள்தான் நேரான வழியை அடைந்தவர்கள்”.** (2 : 155-157)

**பணிவு**

பெருமையும் கர்வமும் தலைக்கனமும் கொள்ளாது, ஏனைய மனிதர்களுடன் தராதரம் பாராது, பணிந்து நடத்தல் ஒரு மு.்.மினுடைய பண்பாகும். அல்லாஹ்வின் ஏவலை ஏற்று அடிபணியும் பழக்கம், இந்தப் பண்பை அவனுக்கு வழங்குகின்றது. அவ்வாறு அவன் நடந்து கொள்வதனால் அல்லாஹ்விடத்தில் உயர்வையும் மேன்மையையும் பெறுகின்றான். நபி (ஸல்) அவர்கள் இதன் சிறப்புப் பற்றி கூறும் வார்த்தைகளைப் பாருங்கள். **“எவரேனும் அல்லாஹ்வுக்காகப் பணிந்தால் அவரது அந்தஸ்தை**

**அல்லாஹ் உயர்த்தியே தீருவான்."** (முஸ்லிம்) **"பணிவாக இருங்கள். உங்களுள் ஒருவர் மற்றவர் மீது அகந்தை கொள்ள வேண்டாம். அநியாயம் செய்ய வேண்டாம் என அல்லாஹ் எனக்கு வஹீ அறிவித்தான்."** (முஸ்லிம்)

பணம், கல்வி, பதவி, அந்தஸ்து, செல்வாக்கு போன்றவை அதிகரிக்கும் போதெல்லாம் பணிவும் அதிகரித்தல் வேண்டும் என்பது இஸ்லாத்தின் கோட்பாடாகும். அதனை நபி (ஸல்) அவர்கள் தம் வாழ்வில் செயற்படுத்திக் காட்டினார்கள்.

விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்களைக் கண்டால் அவர்களுக்கு ஸலாம் சொல்லி, புன்னகை புரிவதற்கு அவர்களின் "நபி" என்ற அந்தஸ்து தடையாக அமையவில்லை. அனஸ் (றழி) அவர்கள் சிறுவர்களைக் கடந்து சென்றால் அவர்களுக்கு ஸலாம் உரைப்பார்கள். "நபி (ஸல்) அவர்களும் இவ்வாறுதான் செய்து வந்தார்கள்." என்று கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

**"மதீனாவின் அடிமைப் பெண் ஒருத்தி நபி (ஸல்) அவர்களின் கரம் பிடித்து, தான் விரும்பிய இடங்களுக்கெல்லாம் அழைத்துச் செல்வாள். நபி (ஸல்) அவர்கள் அவளது தேவையை நிறைவேற்றிக் கொடுப்பார்கள் என அனஸ் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள்.** (புஹாரி)

**"ஓர் ஆட்டுக்கால் அல்லது அதன் கீழ்ப் பகுதியை விருந்தாக்கி அந்த விருந்துக்கு நான் அழைக்கப்பட்டாலும் நிச்சயம் நான் ஏற்றுக்கொள்வேன். ஆட்டுக்கால் அல்லது அதன் கீழ்ப்பகுதி எனக்கு அன்பளிப்பாகத் தரப்பட்டாலும் நிச்சயம் நான் அதைப் பெற்றுக் கொள்வேன்."** (புஹாரி)

பணிவும், எளிமையும், பெருந்தன்மையும் கொண்டவராகச் செயற்பட்ட இறுதித் தூதர் (ஸல்) அவர்கள், தங்களை எதிர்த்துப் போராடிய குறைஷிகளை வென்று முழு அதிகாரமும் அவ்வெற்றியின் மூலம் தமக்குக் கிடைத்த போதிலும் தலை தாழ்த்திய வண்ணம் தான் மக்கா நகருக்குள் நுழைந்ததை நாம் வரலாற்றிலே படிக்கின்றோம். இச்சீரிய பண்பை எம் வாழ்வில் அமுல்படுத்த முனைவோமாக.

**ஈகை**

இஸ்லாம் பிறருக்கு தர்மம் செய்வதற்கும், செலவழிப்பதற்கும் தூண்டும் ஒரு மார்க்கமாகும். இப்பிரபஞ்சத்தில் உள்ள எல்லாவற்றினதும் சொந்தக்காரன் அல்லாஹ் என்ற வகையில் அவன் எமக்களித்த பணத்தையும் பொருட்களையும் பலருக்கும் வழங்கும்படி அவன் எமக்குக் கட்டளை பிறப்பித்துள்ளான்.

பிறருக்கு இரகசியமாகவும் பரகசியமாகவும் வழங்கும் கொடை வள்ளல்களுக்கு மறுமையில் உயர்ந்த நற்கூலி இருப்பதை அல்-குர்ஆன் உறுதிப்படுத்துகின்றது.

> **“எவர்கள் தங்கள் பொருள்களை (தர்மத்திற்காக) இரவிலும் பகலிலும், இரகசியமாகவும் பரகசியமாகவும் செலவு செய்கின்றார்களோ அவர்களுக்கு, அவர்களுடைய கூலி அவர்களுடைய இறைவனிடத்தில் உண்டு. தவிர, அவர்களுக்கு (மறுமையில்) யாதொரு பயமு மில்லை ; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.”** (2 : 274)

செல்வத்தை வீணாகவும் ஆடம்பரமாகவும் செலவளிப்பதைத் தவிர்த்து, மிகத் தேவையுடையவர்களுக்கு வழங்க வேண்டும் என அல்-குர்ஆன் வலியுறுத்துகின்றது.

> “இனபந்துக்களுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் அவரவர் களுடைய பங்குகளை கொடுத்துவரவும். (செல்வத்தை) அளவு கடந்து வீண் செலவு செய்ய வேண்டாம். ஏனென்றால், மிதமிஞ்சி செலவு செய்வோர் ஷைத்தான்களுடைய சகோதரர்களாக இருக்கின்றனர். ஷைத்தானோ, தன் இறைவனுக்கு (நன்றி செலுத்தாது) மாறு செய்பவனாவான்.” (17 : 26, 27)

நபி (ஸல்) அவர்கள் கொடை கொடுப்பதால் ஏற்படும் நல்ல விளைவுகள் பற்றிப் பின்வருமாறு கூறினார்கள் :

> **“கொடை வள்ளல் அல்லாஹ்வுக்கு நெருக்கமானவன் ; மனிதர் களுக்கும் நெருக்கமானவன் ; சுவர்க்கத்திற்கும் நெருக்கமானவன்; நரகத்தை விட்டும் தூரமானவன், கஞ்சன் அல்லாஹ்வை விட்டும் தூரமானவன், மக்களை விட்டும் தூரமானவன் ; சுவர்க்கத்தை விட்டும் தூரமானவன்; நரகிற்கு நெருக்கமானவன். கொடை வழங்கும்**



5-CM14794

**அறிவீனன் உலோபித்தனமுடைய வணக்கசாலியைவிட அல்லாஹ் வுக்கு மிக விருப்பமுடையவன்"** (திர்மிதி)

செல்வத்தைப் பிறருக்கு வழங்குவதன் மூலம் அது குறைவடைந்து விடும் என்ற சிந்தனையை இஸ்லாம் தகர்த்தெறிந்து, கொடுப்பதனால் செல்வம் விருத்தியடையும் என உறுதிபடக் கூறுகின்றது. அத்தோடு மறுமைக்கான உயரிய சேமிப்பாகவும் அதனைக் கருதுகின்றது.

**"மூன்று விடயங்களை நான் சத்தியம் செய்து கூறுகின்றேன். ஓர் அடியானின் செல்வம் தர்மம் செய்வதால் குறைவடையாது. ஒரு அடியானுக்கு இழைக்கப்படும் அநியாயத்தின் போது அவன் பொறுமை காத்தால் அவனது கண்ணியத்தை அல்லாஹ் அதிகரிப்பான். எந்த ஒரு அடியான் யாசகத்தின் வாயிலைத் திறந்துவிட்டானோ அல்லாஹ் வறுமையின் வாயிலை அவன் மீது திறந்து விடுகின்றான்."** (இப்னு மாஜா)

**"மனிதர்கள் காலையில் எழுகின்ற நாட்களில் எல்லாம், இரு மலக்குகள் இறங்கி வருவார்கள். அவர்களுள் ஒருவர், "அல்லாஹ்வே ! செலவு செய்பவருக்கு பின்னர் அவர்கள் செலவு செய்ததை வழங்குவாயாக" என்பார். மற்றையவர், "அல்லாஹ்வே ! செலவு செய்யாது, தடுத்துக் கொள்பவருக்கு அழிவை ஏற்படுத்துவாயாக என்பார்."** (முஸ்லிம்)

பிறருக்கு வழங்கிய தர்மங்கள் தான் உண்மையில் நிரந்தரமானவை என்பதையும் ஹதீஸ் குறிப்பிடுகின்றது.

**"அடியான், "எனது செல்வம், எனது செல்வம்" என்கின்றான். உண்மையில் அவனது செல்வம் மூன்றுதான். அவன் சாப்பிட்டழித்தது; உடுத்துக் கிழித்தது ; கொடுத்துச் சேர்த்தது. அவை தவிர உள்ளவை எல்லாம் போய்விடும். அவை ஏனைய மனிதர்களுக்கு விட்டுச் செல்வதாக அமையும்."** (முஸ்லிம்)

"ஆயிஷா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒரு முறை ஆடொன்று அறுக்கப்பட்டது. அப்போது நபியவர்கள். **"அதில் எது எஞ்சியிருக்கின்றது?" எனக் கேட்க, அதில் தோற்பகுதி மாத்திரமே எஞ்சியுள்ளது என்றார்கள்.**

**அதற்கு நபி (ஸல்) அவர்கள், "தோற்பகுதி தவிர மற்றையவைதான் எஞ்சியுள்ளன" எனக் கூறினார்கள்.** (திர்மிதி)

பிறருக்கு செல்வத்தை வழங்கும் போது மிக இரகசியமாக வழங்குவதே சிறந்தது என்ற கருத்தை இஸ்லாம் முன்வைக்கின்றது.

**"(நீங்கள் செய்யும்) தானங்களை நீங்கள் வெளியாக்கினால் அதுவும் நன்றே. (ஏனெனில் அது பிறரையும் தானம் செய்யும்படி தூண்டக்கூடிய) ஆயினும் அதனை நீங்கள் மறைத்து, அதுவும் ஏழைகளுக்குக் கொடுப்பது உங்களுக்கு மிகவும் நன்மை (பயக்கும்)."** (2 : 271)

**"நற்செயல்கள் மோசமான இறுதிவிளைவுகளை விட்டும் பாதுகாக்கும். இரகசியமான ஸதகாக்கள் இறைவனின் கோபத்தை அணைக்கும். குடும்ப உறவைப் பேணுதல் வாழ்நாளை அதிகரிக்கும்."** (தபரானீ)

நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் மிக அதிகமாக கொடை கொடுக்கும் பண்பைக் காண முடியும். அவர் மிக எளிமையாக வாழ்ந்த போதிலும் கிடைக்கும் செல்வத்தை எல்லாம் நல்வழியிலும் துன்பப்படுவர்களுக்கும் வழங்குபவராக இருந்தார்கள். றமழான் காலங்களில் இந்தச் செயற்பாடு மிகத் தீவிரமாக இருந்தது.

**தியாகம்**

ஒரு தனிமனிதன், குடும்பம், சமூகம் என்பவற்றின் உயர்ச்சியும் வளர்ச்சியும் அவர்களின் தியாகத்திலேயே தங்கியுள்ளது. தனது நேரத்தையும், உழைப்பையும், செல்வத்தையும், செல்வாக்கையும் தியாகம் செய்வதனூடாகவே நல்விளைவுகள் ஏற்படுகின்றன.

அல்-குர்ஆன் தியாகத்தின் பெறுமதியையும் அதன் விளைவுகளையும் எமக்குக் கற்றுத் தருகின்றது.

**"தங்கள் வீடுகளை விட்டும், தங்கள் பொருட்களை விட்டும் (அக்கிரமமாக) வெளிப்படுத்தப்பட்டு (மக்காவிலிருந்து) ஹிஜ்ரத் செய்து வந்த (முஹாஜிர்களிலுள்ள) ஏழைகளுக்கும் (அதில் பங்கு உண்டு).**

**அவர்கள் அல்லாஹ்வுடைய அருளையும் (அவனுடைய) திருப் பொருத்தத்தையும் அடையக் கருதி, அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் உதவி செய்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் தாம் உண்மையானவர்கள் (விசுவாசிகள்)"** (59 : 08)

**"அல்லாஹ் விசுவாசிகளுடைய உயிர்களையும் பொருள்களையும் நிச்சயமாக அவர்களுக்குச் சுவனபதி தருவதாக(க்கூறி) மெய்யாகவே விலைக்கு வாங்கிக் கொண்டான். அவர்கள் அல்லாஹ்வுடைய பாதையில் யுத்தம் புரிந்து, அவர்கள் (விரோதிகளை) வெட்டுவார்கள். (அல்லது) வெட்டப்பட்டு (இறந்து) விடுவார்கள்."** (9 : 111)

மனித இன வரலாற்றில் இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகங்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. அதனால்தான் அந்தத் தியாகச் செயற்பாடுகளை அல்லாஹ் ஹஜ் கிரியைகளாக அமைத்து வைத்துள்ளான்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்கும் பரப்புவதற்கும் செய்த தியாகங்கள் அபரிமிதமானவை. மக்காக் காலப்பகுதியில் எதிர்கொண்ட கொடுமைகள், தமது சொந்த மண்ணைத் துறந்து மதீனாவிற்கு தமது எல்லா வளங்களையும் விட்டுச் சென்றமை, அறப் போராட்டங்கள், சூழ்ச்சிகள் என எல்லாவற்றையும் தியாகத்துடன் எதிர்நோக்கினார்கள். சஹாபாக்களும் அவ்வழியிலேயே தமது வாழ்வை அமைத்தனர். அந்தத் தியாகமே இன்று இஸ்லாம் வானளாவப் பரந்து, கிளை பரப்பி, நிமிர்ந்து நிற்கும் ஆலவிருட்சமாக வளர்ந்திருப்பதற்குக் காரணமாக அமைந்தது என்பது மிகைப்படுத்தப்பட்ட கூற்றன்று.

### மன்னிப்பு

மன்னிப்பு என்ற நற்குணம் உயர் மனப்பான்மை கொண்டவர்களிடமுள்ள சிறப்பான பண்பாகும். இந்தப் பண்பு கொண்டவரை அல் குர்ஆன் சிறந்த பண்பாளர் எனவும் அல்லாஹ்வின் அன்பைப் பெற்றவர் எனவும் சித்தரிக்கின்றது.

**"அவர்கள் எத்தகையோரென்றால் செல்வ நிலைமையிலும் வறுமை நிலைமையிலும் தானம் செய்து கொண்டேயிருப்பார்கள். கோபத்தை**

**விழுங்கி விடுவார்கள். மனிதர்களை மன்னித்து விடுவார்கள். அல்லாஹ் இத்தகைய நல்லோரையே நேசிக்கின்றான்."** (3 : 134)

இஸ்லாமிய குற்றவியல் சட்டத்தில் "கிஸாஸ்" குற்றங்களுக்குரிய தண்டனை பழிக்குப் பழி என்றிருப்பினும் கூட, குற்றவாளியை மன்னித்து விடுதல் மிகச் சிறந்தது என அல் குர்ஆன் (42 : 39 - 43) கூறுகின்றது.

மன்னிக்கும் பண்பு அல்லாஹ்வின் பண்புகளுள் ஒன்றாகும். அக்கருத்தை வெளிப்படுத்த அல்லாஹ் நான்கு சொற்களைப் பயன்படுத்தியுள்ளான். கபூர், கப்பார், தவ்வாப், அபுவ்வு. இந்த நான்கு பிரயோகங்களும் மன்னிப்பதில் அவன் மிகைத்தவன் என்பதைக் காட்டுகின்றன. அதே பண்பு மனிதர்களிடமும் ஏற்பட வேண்டும் என அல்லாஹ் எதிர்பார்க்கின்றான்.

**"அவர்களை நீங்கள் சகித்துப் புறக்கணித்து, மன்னித்து வந்தால் நிச்சயமாக அல்லாஹ்வும் மிக்க மன்னிப்போனும் கிருபையுடை யோனுமாக இருக்கின்றான்."** (64 :14)

நபி (ஸல்) அவர்களுடைய வாழ்விலும் இப்பண்பு மிகத் தெளிவாக இருந்த ஒன்றாகும். தாயிப் பிரதேசத்திற்கு த.்வா செய்வதற்குப் போய், கடுமையாக காயமுற்ற பின்பும், அவர்களைத் தண்டிப்பதற்கு ஜிப்ரீல் (அலை) அனுமதி கோரிய போது அதனை நபியவர்கள் மறுத்தமை, தனக்கு நஞ்சூட்டிய யூதப் பெண்ணை மன்னித்தமை, மக்கா வெற்றியின் போது பெரும்பாலானவர்களுக்கு மன்னிப்பு வழங்கியமை போன்றவற்றை உதாரணமாகக் கூற முடியும்.

### நல்லடியார்களின் பண்புகள்

இஸ்லாம் நற்குணங்களையும், நல்ல பண்புகளையும் மனிதர்களிடத்தில் வலியுறுத்துகின்றது. இவ்வகையில் சிறந்த நல்லடியார்களுக்குரிய பண்புகளை அல்-குர்ஆன் பின்வருமாறு வர்ணிக்கின்றது.

"அர்ரஹ்மானுடைய அடியார்கள் எத்தகையோரெனில் அவர்கள் பூமியில் பணிவாக நடப்பார்கள். மூடர்கள் வேண்டாதவற்றை பேச முற்பட்டால் உன்மீது சாந்தி உண்டாகட்டும் எனக் கூறி அவர்களை விட்டு விலகி

விடுவார்கள். இன்னும் அவர்கள் எத்தகையோரெனில் தங்கள் இரட்சகனை சிரம் பணிந்தவர்களாகவும் நின்றவர்களாகவும் அல்லாஹ்வின் வழிப்பாட்டில் இரவைக் கழிப்பார்கள். "இன்னும் எங்கள் இரட்சகனே! நரகத்தின் வேதனையை விட்டும் எங்களைத்திருப்பி விடுவாயாக! ஏனென்றால் நிச்சயமாக அதன் வேதனை நிலையானதாகும்" என்று பிரார்த்தனை செய்து கூறுவார்கள். நிச்சயமாக அது நிலையாகத் தங்குவதற்கோ சிறிது நேரம் தங்குவதற்கோ மிகக்கெட்டது. இன்னும் அவர்கள் எத்தகையோர் எனில் செலவு செய்தால் வீண்விரயம் செய்யமாட்டார்கள். ஒரே அடியாக சுருக்கிக் கொள்ளவும் மாட்டார்கள். அவ்வாறு செலவு செய்வதானது அவ்விரண்டு நிலைகளுக்கு மத்தியிலிருக்கும். இன்னும் அவர்கள் அல்லாஹ்வுடன் வேறு ஒருவரை அழைக்கமாட்டார்கள். அல்லாஹ் தடுத்திருக்கும் எந்த உயிரையும் அவர்கள் உரிமையின்றி கொலை செய்யமாட்டார்கள். அவர்கள் விபச்சாரமும் செய்ய மாட்டார்கள். எவரேனும் இவைகளை செய்ய முற்பட்டால் அவர் தண்டனையைச் சந்திப்பார்." (25 : 63-75)

**அல்-குர்ஆன் நல்லடியார்கள் பற்றி மேலும் கூறுகையில்----**

விசுவாசிகள் திட்டமாக வெற்றி அடைந்து விட்டனர். அவர்கள் எத்தகையோரென்றால் அவர்கள் தொழுகையில் மிகவும் உள்ளச்சமுடைய வர்கள். மேலும் வீணானவற்றை புறக்கணித்து இருப்பவர்கள். மேலும் அவர்கள் ஸகாத்தை முறைப்படி செய்து விடுகின்றவர்கள். மேலும் அவர்கள் தங்கள் மர்மஸ்தலங்களை விபசாரத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வார்கள். ஆனால், (தங்கள் மனைவியினரிடமோ, தங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக்கொண்ட அடிமைப்பெண்களிடமோ தவிர) இவர்களோடு உள்ள உறவில் நிச்சயமாக அவர்கள் நிந்திக்கப்படுபவர்கள் அல்லர். ஆகவே எவர்கள் இதனைத்தவிர வேறு தவறான வழிகளைத் தேடுகின்றார்களோ அவர்கள் தாம் வரம்பு மீறியவர்கள். இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால் தங்களுடைய அமானிதங்களையும் வாக்குறுதிகளையும் காப்பாற்றுபவர்கள். மேலும் தங்கள் தொழுகைகளையும் பேணி வருபவர்கள். அத்தகையோர்தான் சுவனத்தை அனந்தரம் கொள்பவர்கள். பிர்தௌஸ் எனும் மேலான சுவனத்தில் நிலைத்திருப்பார்கள்." (23 : 01-11)

## முஸ்லிம்களிடம் இருக்க வேண்டிய முக்கிய சில பண்புகள்

### அன்பு காட்டுவது தொடர்பான பண்புகள்

அன்பும் பாசமும் அல்லாஹ்வின் பண்புகளோடு தொடர்பான ஒரு பண்பாகும். அன்புடன் தொடர்பான அளவற்ற அருளாளன், (அர்ரஹ்மான்) மிக இரக்கமுடையவன் (அர்-ரஹீம்) என்ற இரண்டு பண்புகள் அவனுக்குண்டு.

அன்பு என்ற இந்நற்குணத்தின் பல்வேறு பகுதிகளையும் இப்பகுதியில் நாம் அவதானிப்போம்.

### அல்லாஹ்வின் மீது அன்பு கொள்ளல்

ஓர் அடியான் தனக்கு மிகவும் அன்பு கொள்ளத் தகுதியானவனாக, தன்னைப் படைத்து, உருவாக்கி, சகல வசதிகளையும் ஏற்படுத்தித் தந்துள்ள அல்லாஹ்வையே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அல்லாஹ் மனிதனை ஏனைய எல்லா உயிரினங்களை விடவும் மிக உயர்ந்தவனாகப் படைத்து, அவனுடைய பிரதிநிதியாகவும் ஆக்கி, பகுத்தறிவையும் வழங்கியுள்ளான். அத்தோடு உலகிலுள்ள அனைத்தையும் அவனுக்கு வசப்படுத்திக் கொடுத்துள்ளதுடன் அவனுக்கு நேர்வழி காட்டுவதற்கு ரசூல்மார்களையும் நபிமார்களையும் அனுப்பி வைத்தான். அதற்கு உறுதுணையாக வேதங்களையும் வழங்கியுள்ளான். இந்த வகையில் இப்பாரிய அருட்கொடைகளுக்கும் வேறு உதவிகளுக்கும் அவன் நன்றியுடையவனாகவும் அளவற்ற நேசம் கொண்ட வனாகவும் மாறுதல் வேண்டும்.

அல்லாஹ்வின் மீது கொள்கின்ற அன்பை (மஹப்பத்) ஈமானின் சுவையைத் தருகின்ற ஓர் அம்சமாக ஹதீஸ்கள் விளக்குகின்றன. **"மூன்று விடயங்கள் யாரிடம் இருக்கின்றனவோ, அவர் ஈமானின் சுவையைப் பெற்றுக் கொள்வார். அவை : அல்லாஹ்வும் அவனது தூதரும் அவர்களல்லாதவர்களைவிட மிகவும் விருப்புக்குரியவர்களாக இருத்தல்........."** (புகாரி, முஸ்லிம்)

ஒரு தாய் தனது பிள்ளையின் மீது கொண்டுள்ள பாசத்தைவிட அல்லாஹ் தன் அடியார்கள் மீது மிகவும் அன்பு கொண்டவனாக இருக்கின்றான். அத்தகைய ஈடிணையற்ற அன்பு கொண்டுள்ள அல்லாஹ்விற்கு நாம் நன்றியுடையவர்களாக இருத்தல் வேண்டும். நாம் நிறைவேற்றும் வணக்க வழிபாடுகளும் ஏனைய செயற்பாடுகளும் அவனுக்காகவே அமைவதோடு அவனின் மீது கொண்ட உச்ச அன்பின் காரணமாக அவை செய்யப்படுதல் வேண்டும். நபி (ஸல்) அவர்கள் இரவு நேரங்களில் கால்கள் வீங்குமளவு வணக்கத்திலீடுபட்டமையும், அதிக நோன்பிருந்தமையும், பல்வேறு தியாகங்கள் செய்தமையும் இந்த அன்பின் காரணமாகவே இடம்பெற்றன.

நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் மீது கொள்ளும் அன்பை ஈமானின் வெளிப்பாடாக எடுத்துரைக்கின்றார்கள். "உங்களில் ஒருவருக்கு அல்லாஹ்வும் அவனது தூதரும் ஏனைய எல்லோரையும் விட அன்புக்குரியவர்களாக இருக்காதவரை அவர் ஈமான் கொண்டவராகமாட்டார்." (புஹாரி, முஸ்லிம்)

ஒருவர் அல்லாஹ்வின் மீது தான் கொண்டிருக்கும் அன்பை பல்வேறு வழிகளில் வெளிப்படுத்த முடியும். அல்லாஹ்வுடைய வேதங்கள், ரசூல்மார்கள், மலக்குகள், பள்ளிவாயில்கள் போன்றவற்றைக் கண்ணியப்படுத்துதல், அல்லாஹ்வுடைய அருட்கொடைகளை நன்றியுடன் நினைவுகூர்தல், எப்போதும் இறை எண்ணத்துடன் இருத்தல், அல் குர்ஆனுடன் மிக நெருங்கிய தொடர்பு வைத்திருத்தல் போன்றன அவற்றுள் சில. முஹம்மத் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றுவதும் இதிலடங்கும். **"(நபியே! மனிதர்களை நோக்கி) நீர் கூறும் "நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால், நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள். உங்களை அல்லாஹ் நேசிப்பான். உங்களது பாவங்களையும் உங்களுக்காக அல்லாஹ் மன்னித்து விடுவான். அல்லாஹ் மிக்க மன்னிப்போனும் மிகவும் இரக்கமுடையோனுமாக இருக்கின்றான்."** (3 : 31)

எனவே, அல்லாஹ்வை நேசித்தல் என்பதன் மூலம் முஹம்மத் (ஸல்) அவர்களை அடியொட்டி வாழ்ந்து, அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவதோடு, எமது பாவங்களையும் அகற்றிக் கொள்வோமாக.

## முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்ளல்

இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்வதும் ஒரு முஸ்லிமின் பிரதான பண்புகளுள் ஒன்றாகும். ஏனைய மனிதர்களை விரும்புவதை விட நாம் அண்ணல் நபி (ஸல்) அவர்களை அளவுக்கதிகமாக விரும்ப வேண்டும்.

நபிமார்களின் வரிசையில் இறுதியாக வந்த முஹம்மத் (ஸல்) அவர்கள் தனது சமூகத்தின் உயர்விற்காகவும், மேம்பாட்டுக்காகவும் பல்வேறு தியாகங் களைச் செய்துள்ளார்கள். அவர்களது வாழ்வு முழுவதும் அல்லாஹ்வின் திருப்தியை நாடி, தனது சமூகத்தின் எழுச்சியை நோக்காகக் கொண்டிருந்தது. அவர்கள் மூலம்தான் இறுதி வேதம் அல்-குர்ஆன் எமக்குக் கிடைத்தது. அவர்கள்தான் அல்-குர்ஆனை எவ்வாறு அமுல்படுத்துவது எனக் காட்டித் தந்தார்கள். அதற்காகவே அவர்களது வாழ்வு முழுவதையும் அப்படியே தியாகம் செய்தார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக மிகச் சிறந்த, மேன்மை மிக்க வாழ்வுமுறை ஒன்றை அவர்கள் எமக்குக் காட்டித் தந்துள்ளார்கள். இவை போன்றவற்றுக்காக நாம் அவர்கள் மீது நேசம் கொண்டவர்களாக மாறுதல் வேண்டும்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் முழு மனித சமுதாயத்தாலும் அன்பு வைக்க அருகதை உடையவர்கள் என்பதைக் கீழ்வரும் விடயங்கள் மூலம் விளங்கலாம்.

1. நபி (ஸல்) அவர்கள் பின்பற்றத் தக்கவர்கள் என அல்லாஹ்வே தனது திருமறையில் எடுத்தியம்புகின்றான். **“விசுவாசிகளே! நீங்கள் (மெய்யாகவே) அல்லாஹ்வுக்கும் வழிப்படுங்கள், (அவனுடைய) தூதருக்கும் வழிப்படுங்கள். (அவர்களுக்கு மாறு செய்து) உங்களுடைய (நன்மையான) செயல்களை நீங்கள் வீணாக்கி விடாதீர்கள்.”** (47 : 33)

2. **“ஆகவே, (நம்முடைய) தூதர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் (மனம் விரும்பி) எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதனை உங்களுக்குத் தடுத்துக் கொண்டாரோ அதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்....”** (59 : 07)

3. அல்லாஹ்வை விரும்புவதற்குரிய அடையாளமாக அல்குர்ஆன் நபியைப் பின்பற்றுவதைப் பிரஸ்தாபிக்கின்றது. **"(நபியே! மனிதர்களை நோக்கி) நீர் கூறும்: "நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களா யிருந்தால், நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள், உங்களை அல்லாஹ் நேசிப்பான்; உங்கள் பாவங்களையும் உங்களுக்காக அவன் மன்னித்துவிடுவான்..."** (3 : 31)

4. மனிதர்கள் நபியவர்கள் மீது அன்பு வைப்பதற்கான தகைமை நபி (ஸல்) அவர்களுக்கு இருக்கின்றது. மனிதர்களின் தனிமனித, குடும்ப, சமூக, பொருளாதார, அரசியல், ஆன்மீக, லௌகீக வாழ்க்கை முழுவதற்கும் அவர்களது வாழ்வு முன்மாதிரியாக அமைந்திருந்தது.

   **"அல்லாஹ்வையும் இறுதி நாளையும் உறுதியாக நம்புகின்றவர் களுக்குரிய அழகிய முன்மாதிரி, நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடமே உங்களுக்கு இருக்கின்றது. அவர்கள், (அவரைப் பின்பற்றி) அல்லாஹ்வை அதிகமாக நினைத்து (துதி செய்து) கொண்டிருப்பார்கள்."** (33 : 21)

எல்லாவற்றுக்கும் மேலாக நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு காட்டுவது ஈமானில் பிரிக்க முடியாத ஒரு அங்கமாக அல்குர்ஆனும் அல் ஹதீஸும் எடுத்துக்காட்டுகின்றன.

5. **"எனது ஆன்மா எவனது கைவசம் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக உங்களுள் ஒருவருக்கு தனது பிள்ளை, பெற்றோர், ஏனைய எல்லா மக்களையும் விட நான் மிகவும் நேசத்திற்குரிய வராக மாறாத வரையில் அவர் ஈமான் கொண்டவராகமாட்டார்."** (புகாரி, முஸ்லிம்)

6. **"ஒரு நாட்டுப்புற அறபி இறைதூதர் (ஸல்) அவர்களிடம் "மறுமை நாள் எப்போது வரும்?" எனக் கேட்டார். அதற்கு ரசூல் (ஸல்) அவர்கள், "நீர் அதற்காக எதனை தயார்படுத்தி வைத்துள்ளீர்?" எனக் கேட்க, "அல்லாஹ்வின் மீதும் அவனது தூதரின் மீதும்**

**கொண்டுள்ள அன்பு" எனப் பதிலளித்தார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "நீ யாரை நேசிக்கின்றாயோ அவரோடு (மறுமை நாளில்) இருப்பாய்."** என்றார்கள். (இந்த ஹதீஸை அறிவிக்கும்) அனஸ் (றழி) அவர்கள் கூறினார்கள், "நான் அல்லாஹ்வையும் அவனது தூதரையும், அபூபக்கரையும், உமரையும் நேசிக்கின்றேன். அவர்களைப் போன்று நல்லமல்கள் செய்யாவிடினும் அவர்களோடு (மறுமையில்) இருக்க ஆசைப்படுகின்றேன்." என்று கூறினார்கள். (முஸ்லிம்)

7. நபி (ஸல்) அவர்களின் தோழர்களும் மனைவிமார்களும் அவர்கள் மீது அளவற்ற அன்பு வைத்திருந்தார்கள். தமது உயிர் போனாலும் பரவாயில்லை ; நபி (ஸல்) அவர்களின் மீது ஒரு முள் கூடக் குத்துவதை அவர்கள் சகிக்காதவர்களாக இருந்தார்கள். அவர்களை அதிகமாக நேசித்ததன் காரணமாக நபியவர்களின் சுன்னாவை அணுவணுவாகப் பின்பற்றுகின்ற மனப்பாங்கும் அதனைப் பாதுகாக்கின்ற மனோநிலையும் வாய்க்கப் பெற்றிருந்தார்கள்.

8. நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்வதென்பது பல்வேறு செயற்பாடுகளை கொண்டு இடம்பெறலாம்.

9. நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு மிகத் தூய்மை யாகப் பல்வேறு சாதனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, அதனைப் படிப்பதற்கு ஆர்வம் காட்டுதல் வேண்டும்.

10. வாழ்வின் ஒவ்வொரு விடயத்திலும் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையைப் பின்பற்றுதல் வேண்டும்.

11. நபி (ஸல்) அவர்களின் மீது அதிகமதிகமாக ஸலவாத்துச் சொல்லுதல் வேண்டும். **"நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் நபியின் மீது ஸலவாத்துச் சொல்கின்றனர். (ஆகவே) விசுவாசிகளே! நீங்களும் அவர் மீது ஸலவாத்தச் சொல்லி, ஸலாமும் கூறிக் கொண்டிருங்கள்."** (33, 56)

12. அவர் வாழ்ந்த இடங்கள், அவரின் பாதங்கள் பயணித்த பிரதேசங்களைத் தரிசித்தல் வேண்டும். இது இன்னும் அன்பை அதிகரிக்கச் செய்யும். அல்லாஹ்வின் தூதர் மீது அன்பு காட்டி, அவரது வாழ்வை முழுமையாக எடுத்து நடப்போமாக.

## நபி (ஸல்) அவர்களின் கிளையார்கள், தோழர்கள் மீது அன்பு கொள்ளல்

முஹம்மத் (ஸல்) அவர்களோடு சேர்ந்திருந்தோர் நபித் தோழர்களாவர். அவர்கள் முஸ்லிம் சமூகத்தின் உயர்ந்த வழிகாட்டிகளாவர். நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தை எத்திவைத்தபோது அவர்களுக்கு முற்று முழுதாக உறுதுணையாக இருந்தவர்கள் சஹாபாக்களாவர். நபியவர்களை பாதுகாப்பதிலும், அவர்களது தூதினைப் பரப்புவதிலும், அடுத்த சந்ததியினருக்கு எத்தி வைப்பதிலும் நபித் தோழர்கள் ஆற்றிய பணி அளப்பரியது. அவர்கள் அதற்காகச் செய்த தியாகங்கள் அளவிட முடியாதவை. இதன் காரணமாக நாம் அவர்களை மிகவும் அதிகமாக நேசிக்க வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள், தனது தோழர்களை விரும்புவது அல்லாஹ் வுடைய அன்பை பெற்றுத்தரும் என்ற கருத்தை பின்வரும் ஹதீஸில் குறிப்பிட்டுள்ளார்கள். **“அவர்களை (நபித் தோழர்களை) யார் என் மீதுள்ள அன்பின் காரணமாக விரும்புகின்றார்களோ (அல்லாஹ்வும்) அவர்களை விரும்புவான்.”** (திர்மிதி)

அல் குர்ஆன் சஹாபாக்களுடைய சிறப்புப் பண்புகளை பல்வேறு இடங்களில் சிலாகித்துக் கூறுகின்றது. “முஹம்மத் (ஸல்) அல்லாஹ்வின் திருத்தூதராக இருக்கின்றார்கள். அவருடன் இருப்பவர்கள் நிராகரிப்போர் விஷயத்தில் கண்டிப்பானவர்களாகவும் தங்களுக்குள் மிக்க அன்புடையவர் களாகவும் இருப்பார்கள். குனிந்து சிரம் பணிபவர்களாகவும் அவர்களை நீர் காண்பீர். அல்லாஹ்வின் அருளையும் திருப்பொருத்தத்தையும் (எந்நேரமும்) விரும்பியவர்களாக இருப்பார்கள்” (48 : 29)

**“முஹாஜிர்களிலும் அன்சாரிகளிலும் (இஸ்லாத்தில்) யார் முதலாவதாக முந்திக் கொண்டார்களோ அவர்களையும் நற்கருமங்களில் அவர்களை பின்பற்றியவர்களையும் பற்றி அல்லாஹ் திருப்தியடைகின்றான். அவர்களும் அல்லாஹ்வைக் கொண்டு திருப்தியடைகின்றனர்.”** (9 : 100)

அவர்கள் மீது பற்றுக் கொள்வது என்பது அவர்களின் சிறப்பை நம்புவதும் கௌரவிப்பதும் ஆகும். அத்தோடு நபி (ஸல்) அவர்களோடு இணைந்திருந்தவர்கள் என்ற வகையில், அவர்களிடமிருந்து வந்துள்ள அல்-குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் உடன்பாடான விடயங்களை ஏற்று நடப்பதுமாகும். மேலும் அவர்களை குறை கூறாதிருப்பதோடு அவர்கள் மத்தியில் இடம்பெற்ற கருத்து வேறுபாடுகளையும் சர்ச்சைகளையும் பற்றி தர்க்கிக்காமல் இருப்பதுமாகும். உம்மஹாதுல் முஃமினீன்களான நபியவர்களின் மனைவிமார்கள் அனைவரினதும் கௌரவத்தை ஏற்றுக்கொள்வதோடு அவர்கள் பரிசுத்தமானவர்கள் என்றும் நம்புதலாகும்.

எனவே, நாம் ஸஹாபாக்களுக்கு உரிய அந்தஸ்தை வழங்கி, கௌரவித்து நடப்போமாக.

### இமாம்கள், நல்லடியார்கள் மீது அன்பு கொள்ளல்

எமக்கு முன் வாழ்ந்த ஸலபுஸ் ஸாலிஹீன்களான இமாம்கள், அறிஞர்கள், நல்லடியார்கள் மீதும் நாம் அன்பு வைக்க வேண்டும். அல்லாஹ் அறிவை அடிப்படையாகக் கொண்டு மனிதர்களுக்கு உயர்வை வழங்கியிருக்கின்றான். ஆதம் (அலை) அவர்கள் மலக்குகளை விடவும் ஏனைய படைப்பினங்களை விடவும் உயர்வு பெறுவதற்கு அறிவே காரணம் என அல் குர்ஆன் எடுத்துக் கூறுகின்றது.

**“உங்களிலுள்ள விசுவாசிகளுக்கும் கல்வி ஞானம் உடை யோருக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான்…” (58:11)**
**(நபியே ! நீர்கேளும்) “அறிந்தவர்களும் அறியாதவர்களும் சமமா வார்களா?”** (39 : 9)

மேலுள்ள கருத்துக்களின் அடிப்படையில் அறிவு பெற்ற இமாம்கள், அதனடிப்படையில் செயல்பட்ட நல்லடியார்கள் கௌரவத்துக்கும் மதிப்புக்கும் உரியவர்களாவர். அதன் காரணமாக நாம் அவர்கள் மீது அன்பு காட்டுதல்

வேண்டும். அத்தோடு அவர்களை கௌரவித்து அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்ய வேண்டும். அவர்களின் சிறந்த முன்மாதிரிகளை பின்பற்றுவதோடு அவர்களின் குறைபாடுகளைப் பகிரங்கப்படுத்தாதிருத்தல் வேண்டும்.

ஆகவே, இமாம்கள், நல்லடியார்களை கௌரவித்து நடப்போமாக.

**அநாதைகள், விதவைகள், அங்கவீனர்கள் மீதும் அன்பு கொள்ளல்**

"எவர்கள் அநாதைகளின் பொருள்களை அநியாயமாக விழுங்கி விடுகிறார்களோ, அவர்கள் தங்கள் வயிறுகளில் நிச்சயமாக நெருப்பையே கொட்டிக்கொள்கின்றார்கள்." (4 : 10)

"நபியே! அநாதைகளைப் (பரிபாலிப்பதைப்) பற்றியும் உம்மிடம் கேட்கிறார்கள். (அதற்கு) நீர் கூறுவீராக! அவர்களைச் சீர்திருத்துவது மிகவும் நன்றே. மேலும் நீங்கள் அவர்களுடன் கலந்(து வசித்)திருக்க நேரிட்டால், (அவர்கள்) உங்களுடைய சகோதரர்களே ! (ஆதலால் அவர்களுடைய சொத்திலிருந்து அவசியமான அளவு உங்களுக்காகவும் செலவு செய்து கொள்ளலாம்.) ஆனால் நன்மை செய்வோம் என்று (கூறித்) தீமை செய்வோரை அல்லாஹ் நன்கறிவான் (2 : 220)

நானும், அநாதைகளைப் பராமரிப்பவரும் இவ்வாறு சுவனத்தில் மிக நெருக்கமாக இருப்போம் என்று நபி (ஸல்) அவர்கள் தனது இரு விரல்களையும் இணைத்துக்காட்டி காட்சிப்படுத்திக் கூறியதாக அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (முஸ்லிம்)

அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் "மனிதனை அழிக்கும் ஏழு விடயங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்" என றசூல் (ஸல்) அவர்கள் "கூற யாரசூலல்லாஹ்! அவை எவை?" என கேட்டதற்கு, நபி அவர்கள் "அல்லாஹ்வுக்கு இணை வைத்தல், சூனியம் செய்தல், மார்க்கத்தால் வழங்கப்பட்ட உரிமையின்றி அல்லாஹ் தடுத்துள்ள ஓர் உயிரை கொலை செய்தல், வட்டி சாப்பிடுதல், அநாதைகளின் சொத்துக்களை அபகரித்தல், யுத்தத்தில் புறமுதுகு காட்டி ஓடுதல், கற்புள்ள பெண்கள் மீது அவதூறு சொல்லல் என்பனவாகும்" எனக் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

உஸாமா இப்னு ஸைத் (ரழி) அறிவிக்கின்றார்கள் : “சொர்க்கத்தின் வாசலில் நான் நின்றிருந்தேன். அதனுள் நுழைபவர்களுள் பெரும்பாலானோர் ஏழைகளாகவே இருந்தார்கள். வசதியானவர்கள் வாசலிலே தடுக்கப்பட்டிருந்தார்கள். எனினும் அவர்களிலுள்ள நரக வாசிகள் நரகத்திற்கு கொண்டு செல்லப்பட கட்டளையிடப் பட்டிருந்தனர்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

மேற்கண்ட நபி மொழிகள் அநாதைகள் ஏழைகளிலுள்ள விதவைகள், அங்கவீனர்கள், போன்ற வாழ்வில் துன்பங்களை அனுபவிப்பவர்கள் மீது அல்லாஹ்வுக்காக அன்பு காட்டுவது உயர்ந்த இஸ்லாமிய நல்லொழுக்கம் என ஆர்வமூட்டும் மணிமொழிகளாக விளங்குகின்றன.

மனித சமூகத்தைப்படைத்த அல்லாஹ், அவர்களில் பலமுள்ளவர்களையும், பலவீனர்களையும் படைத்திருப்பதோடு மனித குல வேறுபாடுகளில் இறை அத்தாட்சி இருப்பதாகவும் அல் குர்ஆனில் பல இடங்களில் முன்மொழியப் பட்டுள்ளன. “அவன் விரும்புவது போன்று படைப்பான்” என்ற குர்ஆனிய கூற்றுக்கு இணங்க அங்கவீனர்கள் அல்லாஹ்வின் சக்திக்கும் அவனது அத்தாட்சிக்கும் ஆதார பூர்வமான அடையாளப்புருஷர்களாக திகழ்கிறார்கள் என்பதே இஸ்லாத்தின் நியதிக்கோட்பாடாக விளங்குகிறது.

அங்கவீனர்கள் என்று அவர்களை அழைப்பது அத்தகையோரை அவமரியாதை செய்வதாக அமையலாம் என சமூகவியலாளர்கள் கருதுவதால் இடைக்காலத்தில் அவர்கள் “வலது குறைந்தோர்” எனவும், நவீன காலத்தில் “மாற்றுத்திறனுடையோர்” எனவும் அழைக்கப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போது உலகு எங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட 13 வகைப் பிரிவினர் மாற்றுத்திறனுடையோராக இனங்காணப்பட்டுள்ளனர். அப்பிரிவினர் பின்வருமாறு:

- ❖ மீத்திறனும் விஷேட நிபுணத்துவமும்
- ❖ கற்றல் இயலாமைகள்
- ❖ மொழிதலும் மொழிக்குறைபாடும்
- ❖ மெதுவாக உள வளர்ச்சி அடைதல்
- ❖ உக்கிர மனவெழுச்சிப்பிரச்சினை

- பலவித இயலாமைகள்
- உடலியல் குறைபாடுகள்
- வேறு சுகாதாரக் குறைபாடுகள்
- கேட்டல் குறைபாடுகள்
- பார்வைக் குறைபாடு
- குருடு, செவிட்டுத்தன்மை
- நற்சிந்தனை
- மூளையில் ஏற்படுகின்ற பாதிப்பு

**பிற முஸ்லிம்கள் மீது அன்பு கொள்ளல்**

இஸ்லாம் என்பது ஒரு வாழும் கொள்கையாகும். அக் கொள்கையை ஏற்றுக்கொண்டவர்கள் சமமாக மதிக்கப்படுவதோடு சகோதரர்களாகவும் கருதப்படுகின்றனர். இதனை அல் குர்ஆன், **“விசுவாசிகள் (யாவரும்) நிச்சயமாக சகோதரர்கள்”** (49 : 10) எனக் கூறுகின்றது.

ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமின் விடயத்தில் எவ்வளவு தூரம் கவனம் செலுத்த வேண்டும்? அதற்கும் ஈமானுக்கும் இடையிலான தொடர்பு என்ன? என்பது பற்றி நபி (ஸல்) அவர்கள் கீழ்வரும் ஹதீஸ்களில் எடுத்துக் காட்டுகிறார்கள். **“உங்களுள் ஒருவர் தனக்கு விரும்புவதை தனது சகோதரனுக்கும் விரும்பாதவரையில் ஈமான் கொண்டவராக மாட்டார்.** (புகாரி, முஸ்லிம்) **“யார் அல்லாஹ்வுக்காகவே அன்பு வைத்து, வெறுத்து, அவனுக்காகவே கொடுத்து, தடுத்துக் கொள்கின்றாரோ அவருடைய ஈமான் பூரணமாகிவிட்டது.”** (அபூ தாவூத்)

**“எனது ஆன்மா யாரின் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக, நீங்கள் ஈமான் கொள்ளும் வரை சுவர்க்கம் நுழைய மாட்டீர்கள். நீங்கள் பரஸ்பரம் அன்பு கொள்ளும் வரை ஈமான் கொள்ளமாட்டீர்கள்.”** (முஸ்லிம்)

பிற முஸ்லிம்களை சந்திக்கும் போது ஸலாம் கூறுதல், கைலாகு கொடுத்தல், நோய் விசாரித்தல், சுக துக்கங்களில் கலந்து கொள்ளல், அனைவரையும் சமமாக மதித்தல், உதவி செய்தல் போன்றன அவர்கள் மீது கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடுகளாகும்.

பிற முஸ்லிம்களோடு அன்பு கொள்வதையும், சகோதர வாஞ்சையோடு நடப்பதையும் தடுக்கின்ற அனைத்து அம்சங்களையும் இஸ்லாம் தடை செய்துள்ளது. பெருமை, பொறாமை, கர்வம், சர்ச்சை, வீண் தர்க்கம் புரிதல், அநியாயம் இழைத்தல், ஏற்றத்தாழ்வு காட்டுதல் போன்ற அனைத்தும் பிற முஸ்லிம்கள் மீது கொண்டுள்ள அன்பை பாதிப்பனவாகும். அதனால் அவை தடுக்கப்பட்டுள்ளன. அதனால்தான் நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம் களை ஓர் உடலுக்கு ஒப்பிட்டு விளக்கினார்கள். **“முஸ்லிம்கள் தங்களுக்கிடையே கொண்டுள்ள அன்பு, பாசம், இரக்கம் என்பவற்றுக்கு உதாரணம் ஓர் உடலைப் போன்றதாகும். அதில் ஓர் அங்கம் நோவினைப்படும் போது ஏனைய அங்கங்களும் தூக்கமின்மையையும் உஷ்ணத்தையும் உணர்கின்றன.”** (புகாரி)

எனவே முஸ்லிம்கள் அனைவரையும் சகோதரர்கள் எனக் கருதி, அவர்கள் மீது அன்பு காட்டி வாழ்வோமாக.

## முஸ்லிம் அல்லாதோர் மீது அன்பு காட்டுதல்

அல்லாஹ், இப்பிரபஞ்சத்தில் மனிதர்கள் உட்பட ஏனைய அனைத்து ஜீவராசிகளினதும் இறைவனாவான். அவன்தான் அனைத்தையும் படைத்து, பரிபாலித்து, வசதிகளை ஏற்படுத்தி, வாழ்வளித்துள்ளான். எனவே, அல்லாஹ்வின் படைப்பினம் என்ற வகையில் எல்லாப் படைப்பினங்களையும் மதித்தல் வேண்டும். குறிப்பாக எல்லா மனிதர்கள் மீதும் மதிப்பு இருப்பது அவசியமாகும். அதனால்தான் நபி (ஸல்),

**“யார் பூமியிலுள்ளோர் மீது இரக்கம் காட்டவில்லையோ அல்லாஹ் அவன்மீது அன்பு காட்டமாட்டான்.”** (புகாரி) எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

காபிர்களாக இருக்கிறார்கள் என்பதற்காக அவர்களுடன் அநீதியாக நடப்பதை அல்லாஹ் விரும்பவில்லை. “(விசுவாசிகளே) மார்க்க விஷயத்தில் உங்களுடன் எதிர்த்து யுத்தம் புரியாதவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளிப்படுத்தாதவர்களுக்கும் நீங்கள் நன்றி செய்ய வேண்டாம் என்றும் அவர்களுடன் நீங்கள் நீதமாக நடந்துகொள்ளக் கூடாது என்றும் அல்லாஹ் உங்களை தடுக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதவான்களை நேசிப்பவனாகவே இருக்கின்றான்.” (60 : 9)



6-CM14794

முஸ்லிம் அல்லாதவர்கள் மீது அநியாயம் இழைப்பதையும், அக்கிரமம் புரிவதையும் இஸ்லாம் மிகக் கடுமையாகக் கண்டிக்கிறது.

**"என் அடியார்களே! நான் என்மீது அநியாயத்தை ஹராமாக்கிக் கொண்டேன். அதனை உங்கள் மத்தியிலும் ஹராமானதாகவே ஆக்கியுள்ளேன். எனவே, நீங்கள் அநியாயம் செய்யாதீர்கள்."** (முஸ்லிம்) **"யார் ஒரு "திம்மி" க்கு தீங்கிழைக்கிறாரோ, மறுமையில் அவருக்கு எதிராக நான் இருப்பேன்."** (முஸ்லிம்) **"அநியாயம் இழைக்கப்பட்டவனின் பிரார்த்தனை அவன் காபிராயினும் அதற்குத் திரை கிடையாது."** (அஹ்மத்) போன்ற ஹதீஸ்கள் இதற்கு நல்ல சான்றுகளாகும்.

"பிற முஸ்லிம்கள் மீது அன்பு காட்டுதல்" எனும்போது பொதுவாக அவர்களுக்கு உதவி செய்தல், நோய் விசாரித்தல், மனம் நோகாது நடந்துகொள்ளல், அவர்களுக்கு நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல், நேர்வழிக்காக அவர்களது ஹிதாயத்துக்காக பிரார்த்தித்தல், நன்மையான கருமங்களில் அவர்களோடு ஒத்துழைத்தல் போன்ற அம்சங்களைக் குறிக்கும்.

இந்த அடிப்படையில் அந்நியர்களையும் மனிதர்கள் என்ற அடிப்படையில் நோக்கி, அவர்களையும் மதித்து வாழ்வோமாக.

### பிற உயிர்கள் மீது அன்பு வைத்தல்

இப்பிரபஞ்சத்தில் படைக்கப்பட்டுள்ள அனைத்து உயிரினங்களும் அல்லாஹ்வுடைய படைப்பினங்களாகும். அந்த வகையில் அனைத்து உயிரினங்கள் மீதும், அவை மிருகங்கள், பறவைகள், ஊர்வன, பூச்சிகள் என எப்படியிருப்பினும் அவற்றின் மீது அன்பு காட்டுதல் அவசியமாகும். இதனை நபி (ஸல்) அவர்கள் கீழ்வருகின்ற ஹதீஸ்களில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

**"ஒரு மனிதன் மிகக் கடுமையான தாகத்தோடு நடந்து சென்று ஒரு கிணற்றுக்குள் இறங்கி தண்ணீரைக் குடித்துவிட்டு வெளியேறினான். அப்போது அங்கே ஒரு நாய், தாகத்தின் காரணமாக நாக்கைத் தொங்க விட்டுக்கொண்டு மண் துகள்களை சாப்பிட்டுக் கொண்டிருந்தது. அம்மனிதன் தனக்குள், "இது எனக்கு ஏற்பட்ட நிலையைப் போன்று அடைந்துள்ளது" எனக் கூறிக் கொண்டு, மீண்டும் இறங்கி தனது பாதணியை நீரினால் நிறைத்து மேலேறி வந்து நாய்க்கு நீர் கொடுத்தான். அதனால் அல்லாஹ் அவருக்கு நன்றி பாராட்டியதோடு அவரின் பாவங்களையும் மன்னித்துவிட்டான்." (புகாரி, முஸ்லிம்)**

**“ஒரு விபசாரப் பெண், ஒரு நாய் உஷ்ணமான ஒரு நாளில் கிணறொன்றைச் சுற்றி வருவதைக் கண்டாள். அது தாகத்தின் காரணமாக தனது நாக்கை தொங்க விட்டுக் கொண்டிருந்தது. அப்போது அவள் தனது பாதணியை கழற்றி நீரை எடுத்து அதற்கு நீர் ஊட்டினான். அதனால் அல்லாஹ் அவளது பாவங்களை மன்னித்துவிட்டான்.”** (முஸ்லிம்)

இஸ்லாம் பிராணிகளைத் துன்புறுத்தவதை மிகக் கடுமையாகக் கண்டிப்பதோடு அதனைத் தடுத்தும் இருக்கின்றது. **“யார் ஒரு குருவியை எந்தவித தேவையும் இன்றி அறுத்தாரோ அல்லது கொன்றுவிட்டாரோ அதுபற்றி அல்லாஹ் மறுமையில் அவரிடம் விசாரணை செய்வான்.”** (அஹ்மத்)

**“உயிருள்ள எதனையும் குறி எல்லையாக எடுத்துக் கொள்பவனை அல்லாஹ் சபிக்கின்றான்.”** (புஹாரி, முஸ்லிம்) என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டதோடு அவ்வாறு செய்வதையும் தடுத்திருக்கிறார்கள். **ஒரு முறை ஒரு சஹாபி பறவைக்குஞ்சுகளை எடுத்ததனால் தவித்துக் கொண்டிருந்த தாய்ப் பறவையிடம் அவற்றை மீண்டும் வைத்துவிடுமாறு அவருக்குக் கட்டளை பிறப்பித்தார். இன்னொரு முறை எரிக்கப்பட்டிருந்த ஓர் எறும்புப் புற்றைக் கடந்து சென்ற நபி (ஸல்) அவர்கள், “இறைவனைத் தவிர வேறு யாரும் நெருப்பினால் வேதனை செய்யக் கூடாது என்றார்கள்.”** (அபூதாவூத்)

ஒரு பூனையைத் துன்புறுத்திய பெண் நரகம் நுழைந்த கதையையும் நபி (ஸல்) அவர்கள் விபரித்தார்கள். **“ஒரு பெண் ஒரு பூனை விடயத்தில் நரகம் நுழைந்தாள். அவள் அதற்கு உணவளிக்காமல் கட்டி வைத்திருந்தாள். பூமியிலுள்ள பூச்சிகளை சாப்பிடுவதற்கு அவள் அதனை விடவுமில்லை.”** (புஹாரி)

இஸ்லாம் சில மிருகங்களையும் பறவைகளையும் சாப்பிடுவதற்கு அனுமதித்துள்ளது. அப்பிராணிகளைப் படைத்துள்ள அல்லாஹ்வே அவ்வனுமதியை எமக்குத் தந்துள்ளான். மனித வாழ்வு நிலைத்திருப்பதற்கு இத்தகைய உணவொழுங்கு அவசியமாகின்றது. எனினும் அளவுக்கதிகமாக வீண்விரயத்தோடு விலங்குகளை தேவையின்றி அறுப்பதை கண்டிக்கின்ற இஸ்லாம், தேவையின் போது மாத்திரம் பிராணிகளை அறுத்துப் புசிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது. அப்போதுகூட ஜீவகாருண்யமிக்க அறுப்பு முறையை இஸ்லாம் அறிமுகப்

படுத்தியுள்ளது. அதனை இறுதித் தூதர் (ஸல்) அவர்கள் இரத்தினச் சுருக்கமாகக் கூறினார்கள்.

**“நீங்கள் அறுப்பதாயின் சிறந்த முறையில் அறுங்கள், அறுக்கப்பட்ட பிராணியை நன்கு துடிக்கவிடவும். கத்தியை நன்றாகத் தீட்டிக் கொள்ளவும்.”** (முஸ்லிம்)

## பிற முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகள்

ஒரு முஸ்லிம் அடுத்த முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் அதிகமுள்ளன. நன்றி பாராட்டுதல், கண்ணியப்படுத்துதல், நீதியாக நடந்து கொள்ளல், குறைகளை மறைத்தல், மூன்று நாளைக்கு மேல் பேசாதிருப்பதைத் தவிர்த்தல், பொறாமை, தீய எண்ணம் கொள்ளாதிருத்தல், ஏமாற்று, வஞ்சகம் செய்யாதிருத்தல் போன்றன அவற்றுள் சிலவாகும். நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களில் பிற முஸ்லிமுக்குச் செய்யவேண்டிய கடமைகள் எனத் தனியாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றைக் கீழ்வருமாறு நோக்குவோம்.

### ஸலாம் கூறுதல்

ஒவ்வொரு சமயத்தவருக்கும் ஒரு தனியான முகமன் முறை உண்டு. அச்சமூக அங்கத்தவர்கள் பரஸ்பரம் சந்திக்கும் பொழுது அதனைக் கூறி, பேச்சை ஆரம்பிப்பர். இஸ்லாம் மிகப் பூரணமான, எந்நேரமும் உரைக்க முடியுமான, அனைவருக்கும் தேவையான கருத்தை உள்ளடக்கிய ஒரு முகமனை எமக்கு அறிமுகப்படுத்தி யுள்ளது. அதுதான் “அஸ்ஸலாமு அலைக்கும்” (உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) என்ற ஸலாமாகும். “அஸ்ஸலாம்” என்பது அல்லாஹ்வின் திருநாமங்களுள் ஒன்று என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

குர்ஆன் பொதுவாக முகமன் கூறுவது பற்றிக் குறிப்பிடுகின்றது. **“உங்களுக்கு முகமன் கூறப்பட்டால் (அதற்குப் பிரதியாக) அதை விட அழகானதைக் கூறுங்கள், அல்லது அதனையே திருப்பிச் சொல்லுங்கள்.”** (4 : 86)

“அல்லாஹ் முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்களைப் படைத்து, “அங்கு போய் அவர்களுக்கு - (சில மலக்குகள்) ஸலாம் சொல்வீராக ; அவர்கள் எதனைத் திருப்பிச் சொல்கிறார்கள் என்பதையும் காது தாழ்த்திக் கேட்பீராக. அதுதான் உமதும் உமது பரம்பரையினதும் முகமனாகும்.” எனக் கூறினான். அப்போது அவர், “அஸ்ஸலாமு அலைக்கும்” எனக் கூற, அவர்கள், “அஸ்ஸலாமு அலைக்க வரஹ்மதுல்லாஹ்” என “வரஹ்மதுல்லாஹ்” வை அதிகப்படுத்திக் கூறினார்கள்.” (புஹாரி, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, **“இஸ்லாத்தில் சிறந்தது எது?” எனக் கேட்டதற்கு, “நீர் உணவளிப்பதும் தெரிந்தவருக்கும் தெரியாதவருக்கும் ஸலாம் உரைப்பதுமாகும்” எனப் பதில் கூறினார்கள்.** (புஹாரி, முஸ்லிம்)

காரூண்ய நபி (ஸல்) அவர்கள் ஸலாம் உரைப்பது சுவர்க்கத்துக்கு இட்டுச் செல்லும் ஒரு நற்பழக்கம் என விபரித்தார்கள். **“நீங்கள் ஈமான் கொள்ளும் வரை சுவர்க்கம் நுழைய மாட்டீர்கள். நீங்கள் பரஸ்பரம் அன்பு கொள்ளும் வரை ஈமான் கொண்டவர்களாக ஆகமாட்டீர்கள். உங்களுக்கு ஒரு விடயத்தைக் காட்டித் தரட்டுமா? அதனைச் செய்தீர்களாயின் பரஸ்பரம் பாசம் கொள்வீர்கள். உங்களுக்கு மத்தியில் ஸலாத்தை பரப்புங்கள்.”** (முஸ்லிம்)

ஸலாம் சொல்வதற்குரிய ஒழுங்குகளை இறைதூதர் (ஸல்) அவர்கள் அதிகமாக ஹதீஸ்களில் விளக்கியுள்ளார்கள்.

முழுமையாக ஸலாம் உரைத்தல் வேண்டும். **“அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு” எனக் கூறுதல் 30 நன்மைகளைப் பெற்றுத் தரும்.”** என (அபூ தாவூத், திர்மிதி) ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளது.

**“வாகனத்தில் இருப்பவர் நடந்து செல்பவர் மீதும், நடந்து செல்பவர் அமர்ந்திருப்பவர் மீதும், குறைந்த எண்ணிக்கையானோர் கூடிய எண்ணிக்கையானோர் மீதும் ஸலாம் சொல்லல் வேண்டும்.”** (புஹாரி, முஸ்லிம்)

ஸலாம் சொல்வதற்கு முந்திக் கொள்ள வேண்டும். பதில் சொல்வதற்கு தாமதிக்கவோ தடுத்துக் கொள்ளவோ கூடாது.

எனவே, ஸலாத்தைப் பரப்பி, சுவனம் நுழைவோமாக.

**நலம் விசாரித்தல்**

ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமின் இன்பத்தில் மாத்திரமின்றி துன்பத்திலும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக இப்பண்பை இஸ்லாம் ஊக்குவிக்கின்றது.

பிற முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகளுள் ஒன்றாக இஸ்லாம் இப்பண்பை விளக்குகின்றது.

> **“ஒரு முஸ்லிமின் மீது அடுத்த முஸ்லிமுக்கு ஐந்து கடமைகள் உண்டு. ஸலாத்துக்கு பதில் சொல்லல், நோய் விசாரித்தல், ஜனாஸாவைப் பின் தொடர்ந்து செல்லல், அழைப்புக்குப் பதிலளித்தல், தும்மியவருக்குப் பதில் கூறுதல்.”** (புஹாரி, முஸ்லிம்)

> **“நோயாளியை நலம் விசாரிக்கச் செல்லுங்கள்; பசித்தவனுக்கு உணவளியுங்கள்; கைதிகளை விடுதலை செய்யுங்கள்.”** (புஹாரி, முஸ்லிம்)

> நோய் விசாரிக்கச் செல்வதன் மூலம் ஏற்படும் நன்மைகள் பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு எடுத்தியம்பினார்கள். **“நிச்சயமாக ஒரு முஸ்லிம், தனது முஸ்லிம் சகோதரரை நோய் விசாரிக்கச் சென்று, திரும்பும் வரை சுவனத்தின் கனிகளைப் பறித்துக் கொண்டிருக்கின்றார்.”** (முஸ்லிம்)

> **“ஒரு முஸ்லிம், சகோதர முஸ்லிமை நலம் விசாரிக்கக் காலையில் செல்வாரேயானால்; எழுபதாயிரம் மலக்குகள் அவருக்காக மாலை வரை துஆச் செய்வார்கள். அவர் மாலையில் நலம் விசாரிக்கச் சென்றால் காலை வரை எழுபதாயிரம் மலக்குகள் அவருக்காக துஆச் செய்வார்கள். அவருக்கென சுவனத்தின் கனிகள் தயாராக வைக்கப்படும்.”** (திர்மிதி)

நபி (ஸல்) அவர்கள், முஸ்லிமாயினும் முஸ்லிம் அல்லாதவராயினும் சரி நலம் விசாரிக்கச் செல்லும் வழக்கம் கொண்டவர்களாக இருந்தார்கள். முஸ்லிம் அல்லாதவராயின் அவரிடம் இஸ்லாத்தை எடுத்துச் சொல்வதற்கு அவர்கள்

மறக்கமாட்டார்கள். முஸ்லிமிடம் சென்றால் அவரது தலைமாட்டில் உட்கார்ந்து, தடவிக் கொடுத்து, ஆறுதல் வார்த்தைகள் கூறி, துஆச் செய்பவர்களாக இருந்தார்கள் என்பதை பல்வேறு ஹதீஸ்களினூடாக அறிய முடிகின்றது.

"நோய் விசாரிக்கச் செல்லல்" எனும் அருகி வரும் நற்பழக்கத்தை எமது வாழ்வில் கடைபிடித்தொழுகுவோமாக.

### ஜனாஸாவைப் பின்தொடர்தல்

ஒரு முஸ்லிம் மரணித்துவிட்டால் அவருக்குரிய கடமைகளை நிறைவேற்ற முன்னிற்பதோடு, மிக முக்கியமாக ஜனாஸாவைப் பின் தொடர்ந்து செல்வதிலும் ஈடுபட வேண்டும். பர்ரா.:. இப்னு ஆஸிப் (ரழி) அவர்கள் கூறினார்கள். **"இறைதூதர் (ஸல்) அவர்கள், நோயாளிகளை நலம் விசாரித்தல், ஜனாஸாவைப் பின் தொடர்தல், தும்மியவருக்கு பதிலளித்தல், பலவீனனுக்கு உதவி செய்தல், அநீதி இழைக்கப்பட்டவனுக்கு உதவி செய்தல், ஸலாத்தைப் பரப்புதல், சத்தியம் செய்தவருக்கு உபகாரம் செய்தல் என ஏழு விடயங்களைக் கொண்டு எமக்குக் கட்டளை பிறப்பித்துள்ளார்கள்."** (புஹாரி, முஸ்லிம்)

ஜனாஸாவைப் பின்தொடர்ந்து செல்லல் என்பது அதனை அடக்கம் செய்யும்வரை இருப்பதைக் குறிக்கின்றது. **"எவர் ஜனாஸா தொழ வைக்கப்படும் வரை ஜனாஸாவில் பங்கெடுத்துக் கொள்கிறாரோ அவருக்கு ஒரு "கீராத்" நன்மை கிடைக்கும். எவர் அடக்கம் செய்யப்படும் வரை பங்கெடுத்துக் கொள்கின்றாரோ அவருக்கு இரண்டு "கீராத்" நன்மை கிடைக்கும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூற, "இரண்டு கீராத்" என்றால் என்ன எனத் தோழர்கள் வினவினர். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "அது இரண்டு பெரிய மலைகளுக்கு ஒப்பானது"** என்று கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

மரணமடைந்தவரின் வீட்டுக்குச் சென்று ஆறுதல் கூறுவதனால் குடும்பத்தினர் ஆறுதல் அடைவதற்கும் பொறுமை காப்பதற்கும் வழியேற்படுவதோடு சகோதர வாஞ்சை வளர்வதற்கும் துணை செய்யும். ஜனாஸாவைப் பின்தொடர்ந்து செல்வதால் மரணத்தின் ஞாபகமும் மறுமையின் எண்ணமும் ஏற்பட வாய்ப்பேற்படும். ஆகவே, இப்பண்பையும் வாழ்வில் எடுத்து நடப்போமாக.

## தும்மியவருக்கு பதிலளித்தல்

தும்மலுக்குப் பதில் கூறுவதும் ஓர் இஸ்லாமியப் பண்பாகும். சகோதரத்துவத்தின் ஓர் அம்சமாக இது மதிக்கப்படுகின்றது.

> **"உங்களுள் ஒருவர் தும்மி "அல்ஹம்துலில்லாஹ்" என்று கூறினால், அவரது சகோதரர் அவருக்கு "யர்ஹமுகல்லாஹ்" எனக் கூறட்டும். அவர் அவ்வாறு கூறினால், அவருக்கு அவர் (தும்மியவர்) "யஹ்தீகல்லாஹு வயுஸ்லிஹுபாலக" எனக் கூறட்டும்"**. (புஹாரி)

> தும்மும்போது கைக்கொள்ள வேண்டிய ஒழுங்கையும் நபி (ஸல்) அவர்கள் செய்து காட்டினார்கள். நபி (ஸல்) **தும்மும் போது தனது கரத்தை அல்லது உடையை வாயில் வைத்து, சப்தத்தைத் தாழ்த்திக் கொள்வார்கள்,** (புஹாரி, முஸ்லிம்)

பிறர் மனம் புண்படா வண்ணம் எவ்வாறு தும்முவது என்பதற்கு, நபி (ஸல்) அவர்கள் சொன்ன ஹதீஸும் வழிமுறையும் வழிகாட்டலாக அமைந்துள்ளன. இந்த ஒழுக்கங்களை பேணிக் கொள்வோமாக.

## தேவையை நிறைவேற்றல்

ஒரு முஸ்லிம் ஏனைய முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகளுள் அவனது தேவையை நிறைவேற்றி, உதவி ஒத்தாசை புரிவதும் ஒன்றாகும். **ஒவ்வொரு மு.்.மினும் ஒன்றோடொன்று இணைந்த கட்டிடத்தைப் போன்றவர்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் பலத்தை வழங்கு கின்றனர்"** (புஹாரி, முஸ்லிம்) என்ற நபி (ஸல்) அவர்களின் கூற்றுக்கேற்ப, அடுத்த முஸ்லிம்களது இயலாமை, துன்பம், துயரம் போன்ற இடர்பாடுகளின்போது கவனம் செலுத்தி, முடியுமானளவு அவற்றை நீக்கப் பாடுபடுதல் வேண்டும்.

பிறரின் தேவையை நிறைவேற்றுவதன் மூலம், தனது தேவை அல்லாஹ்வினால் நிறைவேற்றப்படும் என்பதை இறைதூதர் (ஸல்) அவர்கள் விளக்கினார்கள். **"ஓர் அடியான் தனது சகோதரனின் தேவையை நிறைவேற்றும் காலமெல்லாம் அல்லாஹ் அவருடைய தேவையை நிறைவேற்றுவான்."** (தபரானீ). **"ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு**

**சகோதரர் ஆவார். அவருக்கு அநீதியிழைக்கமாட்டார். அவரை விரோதியிடம் ஒப்படைக்கவும் மாட்டார். எவர் தனது சகோதரரின் தேவையை நிறைவேற்றுவதில் ஈடுபடுகின்றாரோ அல்லாஹ் அவருடைய தேவையை நிறைவேற்றுவதில் ஈடுபடுகின்றான். எவர் முஸ்லிமின் ஒரு துன்பத்தைப் போக்கினால் (அதற்குக் கூலியாக) அல்லாஹ், அவரது மறுமையின் துன்பங்களில் ஒரு துன்பத்தை அகற்றுகின்றான். எவர் ஒரு முஸ்லிமின் குறைகளை மறைக்கின்றாரோ அல்லாஹ், மறுமை நாளில் அவரது குறைகளை மறைக்கின்றான்."** (புகாரி, முஸ்லிம்)

**"ஒரு மு.ஃமினின் ஒரு துன்பத்தை போக்கினால் (அதற்குக் கூலியாக) அல்லாஹ் அவரது மறுமையின் துன்பங்களில் ஒரு துன்பத்தை அகற்றுகின்றான். ஒரு வறியவரின் சுமையை எளி தாக்கினால் அல்லாஹ் அவருக்கு இம்மை மறுமையின் காரியங்களை எளிதாக்குகின்றான்."** (முஸ்லிம்)

சமூகத்தில் இருக்கும் தேவைகளையும் இடர்பாடுகளையும் நீக்கிக்கொள்ள ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையை வளர்க்கும் இஸ்லாம், "இ.ஃதிகா.ஃப்" (அல்லாஹ்வுக்காக மஸ்ஜிதில் தரித்திருத்தல்) இருப்பதைவிட தனது சகோதரனின் தேவையை நிறைவேற்றுவதற்காக சில எட்டுகள் நடப்பதை சிறந்ததாக்கியுள்ளது. **"எவர் தனது சகோதரனின் தேவையை நிறைவு செய்வதற்காக நடக்கிறாரோ; அது அவர் பத்து ஆண்டுகள் "இ.ஃதிகா.ஃப்" இருப்பதைவிட மேலான தாகும்...."** (தபரானி)

அவ்வாறே, மக்களுக்கு உதவி செய்ய வசதி வாய்ப்புகள் இருந்தும் அதில் அலட்சியமாக இருப்பவருக்கு அல்லாஹ் அந்த அருட்கொடையை நீக்கிவிடுவான் என நபி (ஸல்) எச்சரித்துள்ளார்கள். **"அல்லாஹ் ஓர் அடியானுக்கு அதிகமாக அருள் செய்கின்றான். பின்பு மக்களின் தேவைகளில் சிலவற்றை அவனளவில் சாட்டுகின்றான். அப்போது அந்த மனிதன் சலிப்படைந்தான். அப்போது அவன் அல்லாஹ்வின் அந்த அருளை நீங்க வைத்து விட்டான்."** (தபரானீ)

எனவே, பிறரின் தேவைகளை அறிந்து அவர்களுக்கு உதவி வாழ்வோமாக.

**வஸதிய்யா - நடுநிலை பேணல்**

முஸ்லிம் சமூகத்தினதும் அதில் வாழும் ஒவ்வொரு தனிமனிதனதும் சிறப்புப் பண்புகளுள் நடுநிலை பேணுவதும் ஒன்றாகும். **"(விசுவாசிகளே!) அவ்வாறே (ஏற்றத் தாழ்வற்ற) நடுநிலையான சமுதாயத்தினராகவும், நாம் உங்களை ஆக்கினோம்........."** (2 : 143)

நடுநிலை பேணுவது என்பது இஸ்லாமிய ஷரீஅத் விபரிக்கின்ற ஓர் அடிப்படை அம்சமாகும். எந்த ஒரு விடயத்திலும் அளவு மீறிச் சென்றுவிடாமலும்; அறவே ஈடுபாடு காட்டாமலும் இருக்கும் நிலைமைகளுக்கு மத்தியிலான நன்னிலையே நடுநிலைமையாகும்.

உலக வாழ்வு, மறுமை வாழ்வு என்பதில் இஸ்லாம் நடுநிலை பேணுமாறு எம்மைப் பணிக்கின்றது. மறுமை வாழ்வை மறந்து உலக வாழ்வில் முழுமையாக மூழ்கிவிடுவதைக் கண்டிக்கும் இஸ்லாம், மறுமை வாழ்வுக்காக உலக வாழ்வைத் துறந்து, வாழ்வதையும் அங்கீகரிக்கவில்லை. மறுமையில் வெற்றி பெறுவதற்கு உலக வாழ்வே சாதனம் என்றவகையில் உலக வாழ்வு முக்கியமானது. அதேவேளை, மறுமை வாழ்வோடு ஒப்பிடும்போது இவ்வுலக வாழ்வு அற்பமானது; பெறுமதியற்றது. இந்த நடுநிலைமையான நிலைப்பாட்டிலேயே ஒரு முஸ்லிமின் செயற்பாடு அமைந்திருக்கும். **"அல்லாஹ் உனக்களித்திருப்பதில் (தானம் செய்து) மறுமை வீட்டைத் தேடிக்கொள். இம்மையில் உனது பாகத்தையும் மறந்துவிடாதே!...."** (28 : 77) என்று கூறும் அல் குர்ஆன், இம்மை, மறுமை இரண்டிற்காகவும் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றது. **"அன்றி, "எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மையளிப்பாயாக, மறுமையிலும் நன்மையளிப்பாயாக, (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ இரட்சிப்பாயாக"! எனக்கோருவோரும் மனிதர்களில் உண்டு."** (2 : 201)

இந்தப் பண்பு; ஒழுக்க மாண்புகள் அனைத்திலும் கலந்திருப்பதை நாம் அவதானிக்கலாம். செலவளித்தல் என்ற பண்பை எடுத்துக் கொண்டால் அளவுக்கதிகமாக செலவு செய்தால் அதனை ஆடம்பரம், வீண்விரயம் எனத் தடுக்கும் இஸ்லாம், தேவையான இடத்தில் செலவளிக்காதிருத்தலை கஞ்சத்தனம் எனக் கண்டிக்கின்றது.

உண்பதிலும், குடிப்பதிலும் கூட இந்நடுநிலைமை அவதானிக்கப்படுகின்றது. ஒரு முஸ்லிம் உணவைப் பேராசையுடன் அணுகமாட்டார். வீண்விரயம் செய்யமாட்டார். அளவு மீறி உண்ணவோ, பருகவோமாட்டார். அவற்றை முற்று முழுதாகக் குறைத்துவிடவும் மாட்டார். அவர் அல்லாஹ்வை நின்று, நிமிர்ந்து வணங்குவதற்கு அவரது உடம்பு வலிமையாகவும், ஆரோக்கியமாகவும், உற்சாகமாகவும் அமைந்திருக்க வேண்டும். அதற்கேற்றவாறுதான் அவரது உணவுப் பழக்கம் அமைந்திருக்கும்.

கோபப்படுதல் என்ற பண்பை எடுத்துக் கொண்டாலும் இதே நிலைப்பாடுதான் உள்ளது. எடுத்ததற்கெல்லாம் கோபப்படுவதும்; எரிந்து விழுவதும் ஒரு முஸ்லிமின் பண்பன்று. சத்தியம், நீதி புறக்கணிக்கப்படும் போது, தவறுகள் நிகழும் போது, மானம் பறிபோகும் போது, போராட்டங்களில் ஈடுபடும் போது கோபமும் ஆவேசமும் காணப்படுதல் வேண்டும்.

இந்த நடுநிலைப் பண்புக்கு நல்ல முன்மாதிரியாக நபி (ஸல்) அவர்களின் வாழ்வு அமைந்திருந்தது. அவரது வாழ்வின் ஒவ்வொரு பகுதியும் நடுநிலைமைப் பண்புடையதாக காணப்பட்டது. அவரது ஆன்மீக வாழ்வு பூரணமாக இருந்தது. கால்கள் வீங்குமளவு இரவு வணக்கத்தில் ஈடுபட்டார்கள், அதிகமாக நோன்பு நோற்றார்கள், திக்ர் செய்தார்கள் என்றவாறு இறைவனோடுள்ள பிணைப்பு மிக இறுக்கமாக இருந்தது. அதேவேளை, லௌகீக வாழ்வில் தனிமனித, குடும்ப, பொருளாதார, அரசியல் துறைகளில் மிகச் சிறப்பாக பணியாற்றினார்கள். அவர்களின் குடும்ப வாழ்வும், சமூக வாழ்வும் நடுநிலைப்பண்புடையதாகக் காணப்பட்டது. சமூகச் செயற்பாட்டுக்காக குடும்பத்தை இழந்தோ, குடும்பச் செயற்பாடுகளுக்காக சமூகத்தின் மீது கரிசனை செலுத்தாமலோ அவர் வாழவில்லை. ஏககாலத்தில் இரு பகுதிகளிலும் ஈடுபாடு காட்டினார்கள்.

எனவே, மிதமிஞ்சிய போக்கைக் கடைப்பிடிக்காமல் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி எந்த விடயத்திலும் நடுநிலைமையோடு நடந்து கொள்வோமாக.

## அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகள்

ஒரு முஸ்லிம் அன்றாட வாழ்வில் செயற்படுத்த வேண்டிய அநேக நற்பண்புகள் காணப்படுகின்றன. அவற்றுள் முக்கியமான சிலவற்றை நோக்குவோம்.

### உண்மை பேசுதல்

உண்மை பேசுதல் போன்று, சமூகத்தின் ஸ்திரத்தன்மையையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தும் வேறு எந்தப் பண்பும் கிடையாது. இதனால்தான் உண்மையுரைத்தல் என்ற பண்பு சமூகங்களைக் கட்டியெழுப்பும் அடிப்படைப் பண்பாகக் கருதப்படுகின்றது.

ஒரு முஸ்லிம் எப்போதும் உண்மையாளராகத் திகழ்வார். இஸ்லாம்; உண்மை பேசுவது நற்குணங்களுள் அடிப்படையானது எனக் கற்றுத் தருகின்றது. உண்மை, அதன் சொந்தக்காரனை சுவனத்தின்பால் இட்டுச்செல்லும் நன்மைகளைச் செய்யத் தூண்டுகின்றது. அவ்வாறே பொய் நரகத்தின்பால் சேர்த்து வைக்கும் பாவங்களைச் செய்யத் தூண்டுகின்றது.

இதனை நபி (ஸல்) மிகத் தெளிவாகக் கூறினார்கள். **“நிச்சயமாக உண்மை நற்செயல்களின்பால் வழிகாட்டும். நற்செயல் சுவனத்தில் சேர்த்துவிடும். நிச்சயமாக உண்மையையே பேசுகின்றவர்; அல்லாஹ்விடம் அவர் உண்மையாளர் என எழுதப்படுவார். பொய் பாவங்களின் பால் வழி காட்டும். ஒரு மனிதன் பொய்யுரைத்தால் இறுதியில் அல்லாஹ்விடம் அவன் பொய்யன் என எழுதப்படுகின்றான்.”** (புஹாரி) அல்லாஹ்வின் சமூகத்தில் “உண்மையாளர்” என எழுதப்படுவது மிக உயர்ந்த அந்தஸ்தாகும். “பொய்யன்” எனக் குறிக்கப்படுவது மிகவும் இழிவான நிலையாகும்.

அல் குர்ஆனும், சுன்னாவும் உண்மை பேசுவதன் சிறப்பையும்; முக்கியத்துவத்தையும் பல இடங்களில் விளக்கியுள்ளன. அவற்றுள் சிலவற்றை அவதானிப்போம்.

உண்மையுரைத்தல் நபிமார்களின் சிறப்புப் பண்பு என அல் குர்ஆன் விபரிக்கின்றது. **“(நபியே!) இவ்வேதத்தில் இப்ராஹீமைப் பற்றியும் (சிறிது) கூறும். நிச்சயமாக அவர் உண்மையாளராகவும் நபியாகவும் இருந்தார்.”** (19 : 41) **இதே போன்று இத்ரீஸ் (அலை), இஸ்மாயீல் (அலை)** போன்றவர்களைப் பற்றியும் இதே கருத்தை அல் குர்ஆன் முன்வைக்கின்றது.

இறுதி நபி (ஸல்) அவர்களுக்கு நபித்துவம் கிடைக்கு முன்பே அவர் பெற்றிருந்த சிறப்புப் பெயர்களுள் “அஸ்-ஸாதிக்” - உண்மையாளர் என்பதுவும் ஒன்றாகும். நபித்துவம் கிடைத்த பின்பும் கூட எதிரிகளில் யாரும் அவரைப் “பொய்யர்” எனக் கூறியது கிடையாது. எல்லாவற்றுக்கும் மேலாக உண்மை யுரைத்தல் என்பது அல்லாஹ்வின் பண்பாகவும் அல் குர்ஆன் சித்தரிக்கின்றது. **“எவர்கள் விசுவாசங் கொண்டு நற்கருமங்கள் செய்கின்றார்களோ அவர்களை, (மறுமையில்) நாம் சுவனபதிகளில் புகுத்துவோம். அவற்றில் நீரருவிகள் சதா ஓடிக்கொண்டே இருக்கும். அவர்கள் அவற்றில் என்றென்றுமே தங்கிவிடுவார்கள். அல்லாஹ்வுடைய (இவ்) வாக்குறுதி (முற்றிலும்) உண்மையானதே ! அல்லாஹ்வை விட உண்மை சொல்பவர் யார்?”** (4 : 122)

சுவர்க்கத்தை அடைவதை உத்தரவாதப்படுத்தும் ஒன்றாக நபி (ஸல்) அவர்கள் உண்மையுரைத்தலை எடுத்துக் காட்டியுள்ளார்கள். **“நீங்கள் ஏழு விடயங்களை (கடைப்பிடிப்பதாக) எனக்கு உத்தரவாதமளியுங்கள். நான் உங்களுக்கு சுவர்க்கம் கிடைக்கும் என உத்தரவாதப்படுத்து கின்றேன். நீங்கள் பேசினால் உண்மையையே பேசுங்கள், வாக்குறுதியளித்தால் நிறை வேற்றுங்கள். நம்பப்பட்டால் அதனைச் சரியாக நிறைவு செய்யுங்கள்; உங்களது மர்மஸ்தானங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுங்கள்; கரங்களை கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்”.** (அஹ்மத்)

**“யார் தனது தாடைகளுக்கிடையேயுள்ளதையும் (நாவு), தனது இரு தொடைகளுக்கிடையேயுள்ளதையும் (பாலுறுப்பு) பாதுகாத்துக் கொள்வதாக உத்தரவாதப்படுத்துகின்றாரோ அவருக்கு நான் சுவர்க்கத்தை உத்தரவாதப்படுத்துகின்றேன்.”** (புகாரி)

நடைமுறையில் எப்போதும் உண்மையுரைப்பது, மன நிம்மதியையும் ஆறுதலையும் தரும் என்பதையும், பொய்யுரைப்பது கலக்கத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தும் என்பதையும் நபி (ஸல்) அவர்கள் இரத்தினச் சுருக்கமாக பின்வரும் ஹதீஸில் விளக்கியுள்ளார்கள். **“நிச்சயமாக உண்மையுரைத்தல் அமைதியாகும். பொய்யுரைத்தல் சந்தேகமாகும்.”** (திர்மிதீ, அஹ்மத்)

உண்மை பேச வேண்டிய முக்கியமான இடங்களுள் ஒன்று வியாபாரம் செய்யும் போதாகும். அதன் பெறுமதியை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு

விளக்கினார்கள். **“உண்மை பேசுகின்ற, நாணயமாக நடக்கின்ற வியாபாரி மறுமை நாளில் நபிமார்களோடும் உண்மையாளர் களோடும் உயிர்த்தியாகிகளோடும் இருப்பார்.”** (இப்னு மாஜா), **“தக்வாவோடும், நன்மை செய்வதோடும், உண்மையோடும் இருந்த வர்களைத் தவிர மற்ற வியாபாரிகள் மறுமை நாளில் பாவிகளாகவே எழுப்பப்படுவர்.”** (திர்மிதீ, இப்னு மாஜா), **“இரு வியாபாரிகள் (விற்போனும் வாங்குவோனும்) இடத்தை விட்டும் பிரியும் வரையில் தெரிவுச் சுதந்திரம் உடையவர்கள். அவர்கள் உண்மையுரைத்து, தெளிவாகவும் இருந்தால் அவர்களது வியாபாரத்தில் அபிவிருத்தி (பரக்கத்) செய்யப்படும். அவர்கள் பொய் பேசி, (குறையை) மறைத்திருந்தால் அவர்கள் சிலவேளை இலாபமடையலாம். ஆனால் அவர்களின் வியாபாரத்தில் அபிவிருத்தி (பரக்கத்) இருக்காது.”** (மிஷ்காத்)

உண்மையுரைத்தலில் பல்வேறு வகைகள் உண்டு. அவற்றுள் மிகப் பிரதானமான மூன்று பிரிவுகளை இங்கு அவதானிப்போம்.

**1. எண்ணம்**

உள்ளத்தில் தூய எண்ணம் கொள்வது இவ்வகையாகும். ஒரு விடயத்தை நல்ல நோக்கத்துடனும் அல்லாஹ்வுக்காகவும் அமைத்துக் கொள்வதோடு தன்னிடம் (இல்லாவிட்டாலும்), இருந்தால் நற்பணி புரிவதாக எண்ணுவதும் இவ்வகையைச் சேரும். (“இக்லாஸ்” என்ற பாடத்தில் இது பற்றி விரிவாக விளக்கியுள்ளோம். அதிலுள்ள விடயங்களோடு மேலும் சில விடயங்களை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.)

இவ்வகையான எண்ணம் சாதாரண செயலையும் இபாதத்தாக்கும் வல்லமை கொண்டதாகும். ஒரு முஸ்லிம் ஹலாலாக சம்பாதிக்க வேண்டும், தனது மனைவி, பெற்றோர், பிள்ளைகளுக்கும் ஹலாலாக உணவளிக்க வேண்டும், நற்காரியங்களில் செலவழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொருளீட்டலில் ஈடுபட்டால் அது இபாதத்தாக மாறிவிடுகின்றது.

தன்னால் செய்ய முடியாத விடயங்களுக்கான உயர்வான கூலியை வெறும் எண்ணத்தினாலேயே பெற்றுவிட முடியும் என்ற கருத்தை பல

ஹதீஸ்கள் விபரிக்கின்றன. **"யார் தனக்கு உயிர்த் தியாகம் (ஷஹாதத்) கிடைக்க வேண்டுமென்று உண்மையாகவே வேண்டுகின்றாரோ, அவருக்கு அல்லாஹ் உயிர்த் தியாகிகளுடைய அந்தஸ்த்துகளை அவர் தனது விரிப்பில் மரணித்தாலும் கூட வழங்குகின்றான்."** (முஸ்லிம், அபூ தாவூத், இப்னு மாஜா)

**"......... ஒரு மனிதர் அல்லாஹ் அவருக்கு அறிவுச் செல்வத்தை வழங்கியுள்ளான். பணம் அவருக்கு வழங்கப்படவில்லை. அவர் உண்மையான எண்ணத்தோடு "எனக்குப் பணமிருக்குமாயின் நான் அந்த நபர் போன்று அமல் செய்வேன்" என்று கூறுகின்றார். அவர் உண்மையான எண்ணம் கொண்டதால் அவ்விருவரின் கூலியும் சமமானதாக அமைந்துவிடும்."** (திர்மிதீ, அஹ்மத்)

**2. சொல்**

எமது சகல உரையாடல்களும், பேச்சுக்களும் உண்மையாக அமைவது இதிலடங்கும். இதனைப் பற்றி முன்னுள்ள பகுதிகளில் விளக்கியுள்ளோம்.

**3. செயல்**

செயல் ரீதியாக உண்மையை வெளிப்படுத்துதல் இவ்வகையாகும். அமானிதத்தைப் பேணுவதும், வாக்குறுதியை நிறைவேற்றுவதும், இஸ்லாமிய வாழ்க்கை முறையை எல்லா இடங்களிலும் சரியாக வெளிப்படுத்துவதும் செயல் ரீதியாக உண்மையுரைத்தலாகும்.

உண்மையுரைத்தலுக்கு முரணாக பொய் பற்றியும் அதன் கேடுகள் பற்றியும் அநேக நபிமொழிகள் காணப்படுகின்றன. அவற்றுள் முக்கியமான சிலவற்றை நோக்குவோம்.

ஆயிஷா (றழி) அவர்கள் கூறுகின்றார்கள், **"அல்லாஹ்வின் தூதரிடம் பொய் பேசுவதைப் போன்று மிக வெறுப்புக்குரிய செயல் வேறு எதுவும் இருக்கவில்லை. யாராவது ஒருவரிடம் அவர்கள் அதனைக் கண்டு கொண்டால் அவர் பாவமன்னிப்புக் கேட்டு மீண்டுவிட்டார் என்று அறியும்வரை அவரது உள்ளத்திலிருந்து அவர் வெளியேறி விடுவார்."** (அஹ்மத்) இதேபோன்ற ஒரு ஹதீஸ் இப்னு ஹிப்பானிலும் பதிவாகியுள்ளது.

**“மு.ஃ.மின் ஒருபோதும் பொய்யுரைப்பவனாக இருக்க முடியாது” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். “மு.ஃ.மின் கோழையாக இருப்பானா? “என அல்லாஹ்வின் தூதரிடம் வினவப்பட்டது. அதற்கு “ஆம்” என்றார்கள், “மு.ஃ.மின் கஞ்சனாக இருப்பானா?” எனக் கேட்க, “ஆம் என்றார்கள், “மு.ஃ.மின் பொய்யனாக இருக்க முடியுமா?” எனக் கேட்க, “முடியாது” எனக் கூறினார்கள்.”** (மாலிக்)

பொய்யுரைப்பது ஈமானையே பாதித்துவிடும் எனவும் அது முனாபிக்குடைய பண்பு எனவும் இறைதூதர் (ஸல்) விபரிக்கின்றார்கள். “முனாபிக்கின் பண்புகள் மூன்று. அவன் பேசினால் பொய் பேசுவான் ; வாக்களித்தால் மாறு செய்வான், நம்பினால் மோசடி செய்வான்.” (புஹாரி, முஸ்லிம்)

பொய் பேசுவது மலக்குகளே வெறுத்தொதுக்குகின்ற பண்பு என்பதைக் கீழ்வரும் ஹதீஸ் கூறுகின்றது. **“ஓர் அடியான் பொய்யுரைத்தால் அவனுக்கு நியமிக்கப்பட்டுள்ள மலக்கு அவன் கொண்டு வந்த துர்நாற்றத்தால் ஒரு மைல் அளவு தூரமாகி விடுகின்றார்.”** (திர்மிதீ)

பொய் அதிகரிப்பது மறுமைக்குரிய அடையாளமாகும். **“மறுமை ஏற்படுவதற்குரிய சிறிய அடையாளங்களுள் பொய் அதிகரிப்பதும் ஒன்றாகும்.”** (அஹ்மத்)

**“தொடர்ந்து பொய்யுரைப்பது பெரும் பாவமாகும்”** என இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் கூறுவர். அவ்வளவுதூரம் பாரதூரமான ஒரு தீய பண்பு பொய்யுரைத்தலாகும்.

சிறுவர்களிடம் கூறும் பொய்களும் பொய்யாகவே கருதப்படும். அப்துல்லாஹ் பின் ஆமிர் (ரழி) கூறுகின்றார்கள். **“ஒரு நாள் இறைதூதர் (ஸல்) எமது வீட்டில் உட்கார்ந்திருக்கும் போது எனது தாயார் என்னை அழைத்தார்கள். “இங்கு வா, உனக்குத் தருகின்றேன்” என்றார். அவரை நோக்கி நபி (ஸல்) அவர்கள், “அவருக்கு எதனைக் கொடுக்க நீ நாடினாய்?” எனக் கேட்க, “சில பேரீச்சம் பழங்களைக் கொடுக்க நாடினேன்” எனப் பதிலளித்தார்கள். “நீ அதனைக் கொடுக்காதிருந்தால்**

**உன் மீது ஒரு பொய் பேசியதாக எழுதப்படும்" என நபியவர்கள் கூறினார்கள்." (அபூ தாவூத்) "யார் ஒரு சிறுவனிடம், "இங்கே வா, இதனைத் தருகின்றேன்" எனக் கூறிவிட்டு, பின்னர் கொடுக்காதிருந்தால் அது ஒரு பொய்யாகும்."** (அஹ்மத்)

விளையாட்டுக்காகவும் பரிகாசத்திற்காகவும் பொய்யுரைப்பதும் பாவமானதேயாகும். "மக்கள் சிரிப்பதற்காக ஒரு செய்தியைச் சொல்லிப் பொய்யுரைப்பவனுக்குக் கேடு உண்டாகட்டும்; அவனுக்குக் கேடு உண்டாகட்டும்; அவனுக்குக் கேடு உண்டாகட்டும்." (திர்மிதீ), "பரிகாசத்திற்காகவேனும் பொய் பேசாது அதனை விட்டுவிட்டவனுக்கு சுவர்க்கத்தின் மத்தியில் ஒரு வீடு கிடைப்பதனை உறுதிப்படுத்துகின்றேன்." (பைஹகீ), "பரிகாசம் செய்வதில் பொய் பேசுவதை விடும்வரை, உண்மையாளனாக இருப்பினும் வாதாடுவதை விடும்வரை ஓர் அடியான் முழுமையான ஈமான் கொண்டவனாகமாட்டான்." (அஹ்மத்)

நபி (ஸல்) அவர்களின் மீது பொய்யுரைப்பது பொய்களிலே மிகவும் மோசமானதும் பாரதூரமானதுமாகும். அவர் சொல்லாத ஒன்றை அவர் சொன்னதாகக் கூறுவது மிகவும் பயங்கரமான பொய்யாகும். **"என்மீது பொய் சொல்வது உங்களுள் ஒருவர் மீது பொய் சொல்வது போன்றதன்று. யார் என்மீது வேண்டுமென்றே பொய்யுரைக்கின்றாரோ அவர் தனது தங்குமிடத்தை நரகிலேயே எடுத்துக் கொள்ளட்டும்."** (புஹாரி) **"யார் என்னைத் தொட்டும் ஒரு ஹதீஸை அது பொய்யென்று அறிந்தும் அறிவிக்கின்றாரோ அவரும் ஒரு பொய்யரேயாவார்."** (இப்னு மாஜா, அஹ்மத்)

பொய் பொதுவாக பிரச்சினைகளிலிருந்து தப்புவதற்காகவும் தனக்கு ஒரு இலாபத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும், பிறரைத் துன்புறுத்துவதற்காகவும், (பொய் பேசி) இன்புறுவதற்காகவும் பேசப்படுகின்றது.

எனவே, உண்மை பேசி, பொய்யை முற்று முழுதாகத் தவிர்த்து, நல்ல மு.்.மின்களாக வாழ முனைவோம்.



7-CM14794

**வாக்குறுதியை நிறைவேற்றல்**

முஸ்லிம் எப்போதும் தனது வாக்குறுதியை நிறைவேற்றுவார். வாக்குறுதியை நிறைவேற்றுவது கடமை மட்டுமன்றி, இஸ்லாமிய நற்பண்புகளுள் பிரதானமான ஒன்றாகும். ஒருவனுடைய ஈமான் சீரானது என்பதற்கு இது ஒரு சான்றாக உள்ளது. வாக்குறுதிக்கு மாறு செய்வது நயவஞ்சகத்தின் அடையாளமாகும்.

அல்லாஹ் தனது அருள்மறையில் வாக்குறுதியை நிறைவேற்றுவது தொடர்பாகவும், ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்வது தொடர்பாகவும் முஸ்லிம்களை அறிவுறுத்துகின்றான்.

**“விசுவாசிகளே ! நீங்கள் (உங்கள்) உடன்படிக்கைகளை பூரணமாக நிறைவேற்றுங்கள்.”** (5 : 1)

**“வாக்குறுதியை நீங்கள் பரிபூரணமாக நிறைவேற்றுங்கள். ஏனென்றால் (மறுமையில்) வாக்குறுதியைப்பற்றி (உங்களிடம் நிச்சயமாக) கேள்வி கேட்கப்படும்.”** (17 : 34)

உண்மையில் மனித வாழ்வு என்பது அல்லாஹ்வோடு செய்து கொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இடம்பெறுவதாக அல் குர்ஆன் இயம்புகின்றது. மனிதன் அல்லாஹ்வை மாத்திரம் “ரப்”பாக (வணக்கத்திற்குரியவனாக) ஏற்று, அவனுக்கு மாத்திரமே வணக்கம் புரிவதாகவும் ஷைத்தானை வழிபடுவதில்லை என்பதாகவும் அந்த ஒப்பந்தம் அமைந்துள்ளது. சூரதுல் அ.்.ராப் 172 ஆவது வசனத்தில் அல்லாஹ் இதனை விளக்குகின்றான். அத்தோடு **“ஆதமுடைய சந்ததிகளே ! “நீங்கள் ஷைத்தானை வணங்கக் கூடாது. நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான விரோதி” என்று நான் உங்களிடம் உறுதிமொழி வாங்க வில்லையா?”** (36 : 60) என்ற கேள்வியும் இதனைத் தெளிவுபடுத்துகின்றது.

இறைதூதர் (ஸல்) அவர்கள் இதனடிப்படையில் மு.்.மின்களிடம் சத்தியப் பிரமாணம் வாங்குபவர்களாக இருந்தார்கள். பைஅதுல் அகபா இதற்கு நல்ல சான்றாகும்.

முஸ்லிம்கள் தாம் செய்து கொண்ட ஒப்பந்தங்களின் நிபந்தனைகளை அவ்வாறே நிறைவேற்றுவார்கள் என்ற கருத்தை, **“முஸ்லிம்கள் தமது நிபந்தனைகளிடம் கட்டுப்பட்டவர்கள்”** (புஹாரி) என்ற ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது.

நபி (ஸல்) அவர்கள், “வாக்குறுதியை நிறைவேற்றாதிருப்பது முனாபிக்கின் பண்பு” எனத் தெளிவாகக் கூறியுள்ளார்கள், **“நயவஞ்சகனின் அடையாளம் மூன்றாகும். அவன் பேசினால் பொய்யுரைப்பான்; வாக்களித்தால் மாறு செய்வான்; நம்பினால் மோசடி செய்வான்”.** (புஹாரி, முஸ்லிம்) ஸஹீஹ் முஸ்லிமில் வந்துள்ள மற்றொரு அறிவிப்பில் **“அவன் நோன்பிருந்தாலும் தொழுதாலும் அவன் தன்னை ஒரு முஸ்லிம் எனக் கூறிக் கொண்டாலும் சரியே”** என வந்துள்ளது.

வாக்குறுதிக்கு மாறுசெய்பவனுக்கான தண்டனை பற்றி பின்வரும் ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது. **“ஒரு மனிதன், ஒரு பெண்ணை சிறிதோ பெரிதோ ஒரு தொகையை மஹராகத் தருவதாகக் கூறி மணமுடித்தான். அவளுடைய உரிமையைக் கொடுக்கும் எண்ணம் அவனது உள்ளத்திலில்லை. அவ்வாறெனில் அவன் அவளை ஏமாற்றிவிட்டான். அவன் அவளுடைய உரிமையைக் கொடுக்காத நிலையிலேயே மரணமாகிவிட்டால் மறுமை நாளில் அவன் விபசாரி என்ற நிலையிலேயே அல்லாஹ்வைச் சந்திப்பான். ஒரு மனிதன் ஒரு கடன் பெற்றான். கடன் பெற்றவருக்கு அவரது கடனை - திருப்பி கொடுக்கும் எண்ணம் இவனிடமில்லை. அப்பணத்தைக் கொடுக்கும் வரை அவன் அவரை ஏமாற்றிவிட்டான். கடனைக் கொடுக்காமலேயே அவன் மரணித்துவிட்டால் அல்லாஹ்வை அவன், திருடன் என்ற நிலையிலேயே சந்திப்பான்.”** (தபரானீ)

வாக்குறுதி, ஒப்பந்தம், கடன் உடன்படிக்கை எனும்போது அங்கு முஸ்லிம், காபிர் என்ற வேறுபாடு பார்ப்பதில்லை. யாருடன் ஒப்பந்தம் செய்திருப்பினும் - அவன் முஸ்லிமல்லாதவனாக இருப்பினும் - அவனுடைய ஒப்பந்தத்தை பூரணமாக நிறைவேற்றுதல் வேண்டும். இப்பண்பையும் பேணி நடப்போமாக.

**நம்பிக்கையாக நடத்தல்**

அமானிதம் பேணுதல் என்ற நற்பண்பும் ஒரு முஸ்லிமிடம் காணப்பட வேண்டிய பிரதான பண்புகளுள் ஒன்றாகும். பாதுகாத்துத் தரும்படி வழங்கப்பட்ட ஒரு பொருளை அப்படியே திருப்பிக் கொடுப்பது என இதனைக் குறிப்பிட்டாலும் இதன் பொருள் மிக விரிந்ததாகும். ஒரு மனிதன் தன்னிடம்

ஒப்படைக்கப்பட்ட எந்த விடயத்தையும் - பொருள், பதவி, இரகசியம், உடலுறுப்புக்கள் போன்ற - பொறுப்புணர்வோடு செயற்படுத்துவதும் அல்லாஹ்விடம் பதில் சொல்ல வேண்டும் என எண்ணுவதுமாகும். **“உங்களுள் ஒவ்வொருவரும் பொறுப்பாளராவார். அவரது பொறுப்பு பற்றி (மறுமையில்) விசாரிக்கப்படுவார். ஆட்சியாளர் ஒரு பொறுப் பாளர். அவரது பொறுப்பு தொடர்பாகக் கேட்கப்படுவார். ஓர் ஆண் தனது குடும்பத்தின் மீது பொறுப்புடையவன்; அது பற்றி அவன் வினவப்படுவான். மனைவி தனது கணவனின் வீட்டுக்குப் பொறுப் புடையவள். பணியாள் அவனது எஜமானனின் பொருளுக்குப் பொறுப்பாளி. அது பற்றி அவனிடம் கேட்கப்படும்.”** (புகாரி)

அமானிதம் என்பதை அல்குர்ஆன் விரிந்த பொருளிலேயே கையாளுகின்றது. **“விசுவாசிகளே ! நீங்கள் அல்லாஹ்வுக்கும் (அவனுடைய) தூதருக்கும் மோசம் செய்யாதீர்கள். தவிர நீங்கள் (செய்வது அக்கிரமம் என) அறிந்து கொண்டே உங்களிடம் உள்ள அமானிதங்களிலும் மோசம் செய்யாதீர்கள்.”** (8 : 27).

அல்லாஹ்வுடைய கட்டளைகளுக்கு மாறு செய்தல், அல்லாஹ்வுக்கு மோசடி செய்வதாகவும் ; அல்லாஹ்வின் தூதரை ஏற்று, அவரைப் பின்பற்றாமல், அவரது சுன்னாவைப் பரப்பாமல் இருப்பது, அவருக்கு மோசடி செய்வதாகவும் கூறிவிட்டு, அமானிதங்களைப் பாழ்ப்படுத்திவிடக் கூடாது எனப் பன்மையாகக் கூறியிருப்பது அவதானிக்கத்தக்கது. அதே போன்று, **“நிச்சயமாக அல்லாஹ் அமானிதங்களை அவற்றின் சொந்தக்காரரர் களிடம் ஒப்படைத்து விடும்படியும் மனிதர்களுக்கிடையில் நீங்கள் தீர்ப்புக் கூறினால் நீதமாகவே தீர்ப்பளிக்கும்படியும் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான்...”** (4 : 58)

நம்பிக்கை, நாணயத்தோடு நடப்பதன் முக்கியத்துவத்தை நபி (ஸல்) அவர்கள் பல இடங்களில் விளக்கியுள்ளதோடு, ஜாஹிலிய்யாக் கால மக்கள் கூட அவரை அன்போடு “அல்-அமீன்” என அழைத்ததை நாம் வரலாற்றில் பார்க்கின்றோம். அவர் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செல்லும் போது மக்காவாசிகள் தம்மிடம் ஒப்படைத்திருந்த அமானிதப் பொருட்களைத் திருப்பிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்துவிட்டே சென்றார்கள்.

**“அமானிதம் இல்லாதவனுக்கு ஈமானே கிடையாது. வாக்குறுதி பேணாதவனுக்கு மார்க்கமே கிடையாது.”** (அஹ்மத்) என ஈமானோடும் சத்திய மார்க்கத்தோடும் தொடர்புபடுத்தி நபியவர்கள் இதனை விளக்கியுள்ளார்கள்.

ஒரு பதவியை அல்லது பொறுப்பைச் சுமக்கும்போது பெற்றிருக்க வேண்டிய மிகப் பிரதான இரு தகுதிகளை யூசுப் (அலை) வாயிலாக அல் குர்ஆன் கூறுகின்றது. **“(அதற்கு) அவர் “தேசியக் களஞ்சியங்களின்**

**நிர்வாகியாக என்னை ஆக்கிவிடும். நிச்சயமாக நான் (அவற்றைப்) பாதுகாக்க நன்கறிந்தவன்," என்று சொன்னார் (**12 : 55). அமானிதத்தைப் பாதுகாக்கும் திறனும், அறிவுப் பலமும் பொறுப்பைச் சுமப்பதற்கு அவசியமானவை என அல்குர்ஆன் விளக்குகின்றது.

உண்மை பேசுதல் என்ற பகுதியில் சுட்டிக்காட்டிய சுவர்க்கத்தை உத்தரவாதப்படுத்தும் ஆறு விடயங்களுள், வாக்குறுதியளித்தால் நிறைவேற்றல், நம்பப்பட்டால் பூரணமாக நிறைவேற்றல் என்பன இரு அம்சங்களாகும் (அஹ்மத்) என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நம்பிக்கைக்கு மோசடி செய்தல் முனாபிக்கின் பண்புகளுள் ஒன்று என்பதையும் மேலே குறிப்பிடப்பட்ட ஹதீஸ் ஒன்றில் கண்டோம்.

அமானிதத்தை நிறைவேற்றாமலிருப்பது மறுமை நெருங்கி விட்டது என்பதற்கான அடையாளங்களுள் ஒன்றாகும். **"ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து "எப்போது மறுமை ஏற்படும்?" எனக் கேட்க, அமானிதம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டால் மறுமையை எதிர் பாருங்கள்" என்றார்கள். அதற்கவர், "அது எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்படும்? எனக் கேட்க, "அதிகாரம் தகுதியில்லாதவரிடம் ஒப்படைக்கப்பட்டால் மறுமையை எதிர்பாருங்கள்"** என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

நம்பிக்கையாய் நடத்தல் பல்வேறு வகைகளைக் கொண்டது அவற்றுள் பிரதானமானவற்றை நோக்குவோம்.

### 1. பணம், பொருளை பாதுகாத்து வழங்கல்

தன்னிடம் பாதுகாப்புக்காகத் தரப்பட்ட பணத்தை, பொருட்களை உரியவர் கேட்கும்போது அப்படியே திருப்பி ஒப்படைப்பது இவ்வகையாகும். நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்தின்போது அலி (ரலி) அவர்களை மக்காவில் விட்டுவிட்டு, தன்னிடம் பாதுகாப்பிற்காகத் தரப்பட்டிருந்த பொருட்களை உரியவர்களிடம் திருப்பி ஒப்படைக்காமல் மதீனா வரக்கூடாது எனக் கூறிவிட்டுச் சென்றமை இதற்கு நல்ல உதாரணமாகும்.

### 2. விற்றல், வாங்குதலில் அமானிதம் பேணுதல்

வியாபாரி தனது பொருளை விற்கும் போது குறைபாடுகளை மறைக்காது, வாங்க வந்தவனை ஏமாற்றாது நடத்தலை இது குறிக்கும். **உண்மை பேசுகின்ற நாணயமான வியாபாரி மறுமையில் நபிமார்களோடும், உண்மையாளர்களோடும், ஷஹீதுகளோடும் இருப்பார்."** (இப்னு மாஜா) ஒரு வியாபாரிக்கு மறுமையில் இத்தகைய உயர் பாக்கியம் கிடைப்பதற்கு

அவரது உண்மைத் தன்மையும் நம்பிக்கையுமே காரணமாகும். வியாபாரியைப் போன்றே ஏனைய தொழில் துறைகளில் ஈடுபடுபவர்களிடமும் நம்பிக்கையும் நாணயமும் எதிர்பார்க்கப்படுகின்றன.

### 3. பதவியையும் பொறுப்பையும் சீராக நிறைவு செய்தல்

ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பதவியும் பொறுப்பும் அமானிதங்களாகும். அவற்றை அவர் சீராக நிறைவேற்றுதல் வேண்டும். அதனால்தான் இஸ்லாம், பதவிகள் மிகவும் பொருத்தமானவர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

"அபூதர் (ரழி) கூறுகின்றார்கள் **"அல்லாஹ்வின் தூதரே! என்னை நீங்கள் ஆளுனராக நியமிக்கக்கூடாதா? எனக் கேட்டேன். அதற்கவர்கள் என் தோளில் தனது கரத்தால் தட்டிவிட்டு, "அபூதர்ரே, நீர் பலவீனமானவர். அது ஓர் அமானிதம். அது இறுதித் தீர்ப்பு நாளில் இழிவாகவும் கைசேதமாகவும் அமைந்துவிடும். எனினும் அதனை உரிய முறையில் எடுத்து, உரிய வகையில் நிறைவேற்றியவரைத் தவிர"** எனக் கூறினார்கள் (முஸ்லிம்). தகுதியற்றவரிடம் பதவிகள் ஒப்படைக்கப்படுவது மறுமை நாளுக்கு அடையாளம் எனக் குறிப்பிடும் ஹதீஸும் இதற்காதாரமாகும்.

### 4. இரகசியம் பேணல்

இப்பண்பு சமூகவியலில் எதிர்பார்க்கப்படும் ஒருமுக்கிய பண்பாகும், அதேவேளை, சிவில் நிர்வாக பொதுப்பணிகளிலும் இரகசியம் பேணல் கண்டிப்பான விடயமாகும்.

மற்றவர்களின் இரகசியங்களும் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமானிதங்களாகும். அவற்றைப் பிறரிடம் அம்பலப்படுத்தாமல் நாம் பாதுகாத்தல் வேண்டும். **"ஒரு மனிதன் ஒரு செய்தியைக் கூறி, பின்னர் திரும்பிப் பார்த்தானாயின் (அச்செய்தி) ஓர் அமானிதமாகிவிடும்."** (அபூதாவூத், திர்மிதீ, அஹ்மத்) ஒரு மனிதனின் மானம், மரியாதை, ஆளுமை, கௌரவம், என்பவற்றைப் பாதுகாப்பதில் ரகசியம் பேணல் முக்கிய செல்வாக்குச் செலுத்துகிறது.

### 5. தாம்பத்திய வாழ்வு ஓர் அமானிதம்

ரகசியம் பேணலில் தாம்பத்திய வாழ்வின் நடைமுறைகளும் தொடர்கின்றன. "கணவன் மனைவிக்கு ஆடையாகவும், மனைவி கணவனுக்கு ஆடையாகவும் திகழவேண்டுமென்ற குர்ஆனுடைய உருவகம், தாம்பத்திய வாழ்வு பரஸ்பரம்

மானம், மரியாதை, ஒழுக்கம் என்பவற்றில் தொடர்புறுவதை உணர்த்துகின்றது. கணவன் - மனைவி பரஸ்பரம் பாசம், அன்பு நேசம் கொண்டவர்களாக மரணிக்கும் வரை திருப்திகரமாக வாழ்வதன் மூலம் மறுமையில் சுவனத்தில் அவ்விருவரும் கணவன் மனைவியாக வாழ்வதே தாம்பத்திய வாழ்வின் அமானிதத்தின் யதார்த்த நிலையாக கருதப்படுகின்றது. கணவன் - மனைவியின் அந்தரங்க வாழ்க்கையின் புனிதத்துவத்தைப் பாதுகாக்கும் நோக்கில், தனது மனைவியுடன் இணைந்து, அவளுடன் உறவாடி தாம்பத்திய உறவின் இரகசியங்களை வெளியே சொல்லாமல் பாதுகாப்பதும் அமானிதமாகக் கருதப்படுகின்றது.

**"இறுதித் தீர்ப்பு நாளில் மிகப் பெரிய சுரண்டல் பேர்வழியாக இறைவன் முன்நிற்பவன் யார் தெரியுமா?" எனக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், கீழ்வருமாறு பதிலையும் சொன்னார்கள். "ஒருவன் தன் மனைவியை அதிகமாக நேசிப்பான்; அதேபோல் அவனுடைய மனைவியின் இரகசியங்களை அடுத்தவர்களிடம் சொல்வான்." (முஸ்லிம்) "மறுமை நாளில் அல்லாஹ்விடத்தில் மிகப் பெரிய அமானிதமாக நோக்கப்படுவதில் ஒரு மனிதன் தனது மனைவியிடம் கதைத்து, அவளும் உரையாடி, பின்னர் அவன் அவளது இரகசியத்தைப் பரப்புவதும் ஒன்றாகும்."** (முஸ்லிம், அபூதாவூத்)

### 6. உடலுறுப்புக்களும் அமானிதமாகும்

அல்லாஹ் மனிதனுக்கு நல்லசெயல்களுக்காகப் பயன்படுத்தத் தந்திருக்கும் அவயவங்களும் ஓர் அமானிதமாகும். அவை சீராகப் பயன்படுத்தப்பட்டனவா? என்ற கேள்வி மறுமை நாளில் உண்டு. **"நிச்சயமாக காது, கண், இருதயம் ஆகிய இவை ஒவ்வொன்றுமே (அதனதன் செயலைப் பற்றி மறுமையில்) கேள்வி கேட்கப்படும்."** (17 : 36)

### 7. இஸ்லாத்தைச் சுமந்திருப்பதும் ஓர் அமானிதமாகும்

மேற்கூறப்பட்ட அமானிதத்தின் வகைகளுள், இது மிகவும் முக்கியமானதாகும். ஒரு முஸ்லிம் தான் ஏற்றுக் கொண்டுள்ள இஸ்லாத்தைப் பற்றி மறுமையில் வினவப்படுவான். அதனை சரிவர அமுல்படுத்தியமை, பிறருக்கு எத்தி வைத்தமை, பாதுகாக்கப்பாடுபட்டமை தொடர்பான எல்லாவற்றிற்கும் விசாரணை இருக்கின்றது. **"(விசுவாசிகளே!) நன்மையான காரியங் களைச் (செய்யும்படி மனிதர்களை) ஏவி, பாவமான காரியங்களி லிருந்து (அவர்களை) விலக்கி, மெய்யாகவே அல்லாஹ்வை விசுவாசிக்கின்ற நீங்கள் தாம், மனிதர்களில் தோன்றிய சமுதாயத்தவர் களிலெல்லாம் மிக்க மேன்மையானவர்கள்."** (3 : 110)

## 8. ஏனைய அமானிதங்கள்

மேலுள்ளவை தவிர பொதுவான பல்வேறு அமானிதங்கள் உண்டு. அவற்றை ஒழுங்காக நிறைவேற்றுவது அவசியமாகும். அந்தவகையில் குழந்தைகள், பெற்றோர், கல்வி, திறமைகள், ஆரோக்கியம், ஓய்வு, நேரம் போன்ற அனைத்தும் அமானிதமாக நோக்கப்படுதல் வேண்டும். அவற்றைப் பேணி நடப்போமாக.

## பிறருக்கு இடர் செய்யாதிருத்தல்

இஸ்லாத்தின் கொள்கைகளால் வார்க்கப்பட்ட ஒரு முஸ்லிம் பிறருக்கு எப்போதும் பயனளிப்பவராக இருக்க வேண்டும். தீங்கிழைப்பவராக இருந்துவிடக் கூடாது.

இதன் அடிப்படைத் தத்துவத்தை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். "ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அடுத்த முஸ்லிமின் உயிர், உடைமை, மானம் என்பன ஹராமானவையாகும்." பிற முஸ்லிமுடைய உயிரை, உடைமையை, மானத்தைப் பாதிக்கும் விதத்தில் எந்தச் செயற்பாட்டையும் அடுத்த முஸ்லிம் செய்யக்கூடாது என்பதையும், அது அடுத்தவரின் உரிமையில் அத்துமீறித் தலையிடுவது என்பதையும் மேலுள்ள ஹதீஸ் விளக்குகின்றது. இக்கருத்தை நபி (ஸல்) அவர்கள் பிறிதொரு ஹதீஸில் பின்வருமாறு விளக்கினார்கள். **"மு∴மின்கள் தங்களது உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் யாரிடமிருந்து பாதுகாப்புப் பெறுகின்றனரோ அவரே உண்மையான மு∴மினாவான்."** (அஹ்மத், திர்மிதீ, ஹாகிம்)

யாருடைய தீங்குகளிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் பிறர் பாதுகாப்புப் பெற்றவர்களாக, நிம்மதியாக வாழக்கிடைக்கின்றதோ உண்மையில் அவர்தான் நல்ல ஒரு முஸ்லிம் என்ற கருத்தை இறைதூதர் (ஸல்) அவர்கள் விபரித்தார்கள். **"எவருடைய நாவு, கரத்திலிருந்து முஸ்லிம்கள் நிம்மதி பெறுகின்றார்களோ அவரே முஸ்லிமாவார்."** (புஹாரி)

நபி (ஸல்) அவர்கள், அமர்ந்து கொண்டிருந்த சில மனிதர்களருகே நின்று, **"நான் உங்களில் உள்ள தீயவர்களிலிருந்து உங்களில் உள்ள நல்லவர்களைப் பற்றி அறிவித்துத் தரட்டுமா?" என்றார்கள். கூட்டத்தினர் மௌனமாக இருந்தனர். நபி (ஸல்) அவர்கள் மூன்று முறை அவ்வாறு**

**கேட்டார்கள். அப்போது கூட்டத்திலிருந்து ஒருவர், "அல்லாஹ்வின் தூதரே! அறிவித்துத் தாருங்கள்." என்றார்கள். நபி (ஸல்) அவர்கள், "எவர் நன்மை செய்பவர் என எதிர்பார்க்கப்பட்டு, அவரது தீமையி லிருந்து மக்கள் அச்சமற்று இருக்கிறார்களோ அவரே உங்களுள் சிறந்தவர். உங்களில் எவரிடமிருந்து நன்மை எதிர்பார்க்கப்பட்டு, ஆனால் அவரது தீமையிலிருந்து மக்கள் நிம்மதி அடையவில்லையோ அவரே உங்களில் மிகக் கெட்டவர்"** என்று கூறினார்கள். (அஹ்மத்)

"அதிக இபாதத்துக்கள் செய்தும், அடுத்த வீட்டாரை தனது நாவினால் துன்புறுத்துகின்ற பெண் நரகிற்கே செல்வாள்" (அஹ்மத்) என்ற கருத்தை விளக்குகின்ற ஹதீஸும் இதற்கு தக்க சான்றாகும்.

பிறருக்கு இடர்பாடுகளை ஏற்படுத்தல் என்பது மிகச் சிறியளவில் கூட இடம் பெறக் கூடாது என்பதை, **"ஒரு முஸ்லிம் அவனது சகோதரனை நோவினைப்படுத்தும் வகையில் ஒரு பார்வை பார்ப்பதும் ஆகுமானதன்று."** (அஹ்மத்) **"ஒருவன் தனது சகோதரனை நோக்கி இரும்பொன்றைக் காட்டினால், அவன் அதிலிருந்து தவிர்ந்து கொள்ளும்வரை மலக்குகள் அவனுக்கு சாபமிடுகின்றனர். அவன் உடன்பிறந்த சகோதரனாயினும் சரியே"** (முஸ்லிம்) என்ற ஹதீஸ்கள் தெளிவுபடுத்துகின்றன.

ஒரு முஸ்லிம் தனது சமூகத்தாருக்கு நன்மையை மட்டுமே முன்வைப்பார். அது இல்லாதபோது தீமை செய்வதிலிருந்து தன்னைத் தடுத்துக் கொள்வார். அதுவே ஒரு தர்மமாக மாறிவிடும் என்ற கருத்தைப் பின்வரும் நபிமொழி விளக்குகின்றது.

அபூ மூஸா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **"ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் தர்மம் செய்வது கடமையாக இருக்கின்றது" என நபி (ஸல்) அவர்கள் கூறியபோது, நபித் தோழர்கள் வினவினர். "அவர் வசதி பெற்றிருக்கவில்லையெனில் என்ன செய்ய வேண்டுமெனக் கருதுகின்றீர்கள்?". நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். "அவரது இரு கரத்தால் உழைத்து, தானும் பயனடைந்து, பிறருக்கும் தர்மம் செய்ய வேண்டும்." தோழர்கள் கேட்டார்கள். "அதற்கு சக்திபெற வில்லையானால்; "தேவையுடைய பலவீனருக்கு உதவி செய்யட்டும்" என்று கூறினார்கள். "அதையும் செய்ய முடியவில்லையானால்" என**

**நபித்தோழர்கள் வினவ, "நன்மையை ஏவட்டும்" என்றார்கள். "பிறருக்குக் கெடுதி விளைவிப்பதிலிருந்து தன்னைத் தடுத்துக் கொள்ளட்டும். அது அவருக்கு தர்மமாகும்."** (புகாரி, முஸ்லிம்)

எனவே, இக்கருத்துக்களை அனுசரித்து, நம்மால் பிறருக்கு நன்மை செய்ய முடியாவிட்டாலும், ஆகக் குறைந்தது எமது நாவாலோ கரங்களாலோ ஏனைய உறுப்புக்களாலோ அவர்களுக்கு தீங்கு செய்யாதிருப்போமாக.

**உதவி செய்தல்**

மனிதன் ஒரு சமூகப்பிராணி என்ற வகையில் அவனால் சமூகத்தில் தனித்து வாழ முடியாது. சமூகத்தில் இரண்டறக் கலந்து அவன் வாழ நிர்ப்பந்திக்கப் படுகிறான். இவ்வாறான கட்டத்தில் அவனால் தனக்குரிய சகல வேலைகளையும் தனித்து நின்று செய்யமுடியாத நிலை தோன்றுவதால் பிற சகோதரர்களுடைய உதவி அவனுக்குத் தேவைப்படுகிறது.

**"ஒரு மு.ஃ.மின் இன்னொரு மு.ஃ.மினுக்கு ஓர் உடம்பை ஒத்தவன், ஒரு கட்டிடத்தைப் போன்றவன்"** என்ற கருத்தைக் கூறுகின்ற ஹதீஸ்களின் அடிப்படையில் ஒரு முஸ்லிம் பிற முஸ்லிமோடுள்ள இறுக்கமான தொடர்பின் காரணமாக அவனுக்கு எப்போதும் உதவி, ஒத்தாசை புரிபவனாகவே இருப்பான். இதனைக் கீழ்வரும் ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது.

**"ஒரு முஸ்லிம் அடுத்த முஸ்லிமின் சகோதரனாவான். அவன் அவனுக்கு அநியாயமிழைக்கவோ அவனைக் கைவிடவோமாட்டான். யார் தனது சகோதரனின் தேவையை நிறைவேற்றுகின்றாரோ அல்லாஹ் அவரது தேவையை நிறைவேற்றுகின்றான். யார் ஒரு முஸ்லிமின் ஒரு துன்பத்தை நீக்கிவிடுகின்றாரோ, அல்லாஹ் அதன் மூலம் மறுமையின் துன்பங்களிலொன்றை நீக்கிவிடுவான். யார் ஒரு முஸ்லிமின் குறையை மறைத்து விடுகின்றாரோ; அல்லாஹ் மறுமை நாளில் அவரது குறையை மறைத்துவிடுவான்."** (புஹாரி, முஸ்லிம்)

பிறருக்கு உதவி செய்தல் என்பது அவருக்குப் பணம், பொருள், வழிகாட்டல், கல்வி, உடலுதவி போன்றவற்றால் உதவி செய்வதோடு அவருடைய தீங்கைத் தடுத்துவிடுவதையும் ஓர் உதவியாக இஸ்லாம் கருதுகின்றது. **"உனது சகோதரன் அநியாயக்காரனாக இருப்பினும்**

**அநியாயமிழைக்கப்பட்டவனாயிருப்பினும் அவனுக்கு உதவி செய்" என நபி (ஸல்) அவர்கள் கூற, "அநியாயமிழைக்கப்பட்டவருக்கு உதவலாம். அநியாயம் செய்பவனுக்கு எப்படி உதவுவது" எனக் கேட்டனர். அதற்கு நபியவர்கள் "அவன் அநியாயம் செய்யாமல் தடுத்துவிடுவது அவனுக்கான உதவியாகும்."** எனக் கூறினார்கள் (புகாரி)

அநியாயத்திற்குட்பட்ட ஒருவருக்கு உறுதுணையாக இருப்பதும் மறுமையில் நன்மையைப் பெற்றுத் தரக்கூடியது என்பதைப் பின்வரும் ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது. **"எவர் அநீதிக்குட்பட்ட ஒருவருடன், அவருடைய உரிமையை நிலைநாட்டும்வரை நடந்து செல்கின்றாரோ அவரது பாதங்களை மறுமை நாளில் பாதங்கள் நழுவிவிடக்கூடிய "ஸிராத்" பாலத்தில் அல்லாஹ் ஸ்திரப்படுத்துவான்."** (தபரானீ)

ஒருவர் துன்பத்துக்குள்ளாகும் போது அதனைத் தடுக்காது; பார்த்திருப்பதும் மோசமான செயல் என இஸ்லாம் எச்சரிக்கின்றது. **"ஒரு மனிதன் அநியாயமாக அடிக்கப்படும் இடத்தில் உங்களுள் ஒருவர் நின்று பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம். அதனைத் தடுக்காத போது அங்கு இருந்தவர்களின் மீதும் சாபம் இறங்கும்."** (தபரானீ)

எனவே, எங்களால் முடியுமானளவு பிறருக்கு உதவி வாழ்வோமாக.

## தாராளத் தன்மை

ஒரு முஸ்லிம் தாராளத் தன்மை கொண்டவராக இருப்பார். அவரது வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் இது தெளிவாக வெளிக்காட்டப்படும்.

அவர் தனது குடும்பத்தினருக்காகச் செலவிடும்போது கஞ்சத்தனம் காட்டமாட்டார். குடும்பத்தினருடைய தேவைகளை நிறைவேற்றுவதில் தாராளத் தன்மையைக் காட்டுவார்.

சமூகத்தின் தேவைகளுக்காகவும், அனர்த்தங்களின் போதும் முஸ்லிமின் உதவிக் கரங்கள் தாரளமாக நீளும். அப்போதெல்லாம் தன்னால் முடியுமான அனைத்து உதவிகளையும் அவர் செய்வார். குறிப்பாக அடுத்த வீட்டாரோடும் தாராள மனப்பான்மையோடு விட்டுக் கொடுத்து நடந்து கொள்வார்.

தாரளமாக செலவிடுவது தொடர்பாக "ஈகை" என்ற தலைப்பில் நாம் விரிவாகப் பார்த்துள்ளோம். தாராளத் தன்மை என்பது உலோபித்தனமின்றியும் வீண்விரயம், ஆடம்பரம், படாடோபமின்றியும் வாழ்தலாகும்.

**நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல்**

உண்மையான ஒரு முஸ்லிமின் பண்புகளுள் இதுவும் ஒன்றாகும். அவர் எப்போதும் பிறர் நலன் பேணுபவராக இருப்பார். அதனை உண்மைப்படுத்தும் விதமாக அவர் பிறருக்கு நன்மையை ஏவுபவராகவும்; தீமையை விட்டும் தடுப்பவராகவும் இருப்பார்.

முஹம்மத் (ஸல்) அவர்களின் உம்மத்தவரின் சிறப்புத் தன்மை இதுவென அல்-குர்ஆன் பறைசாற்றுகின்றது. **"(விசுவாசிகளே!) உங்களில் ஒரு கூட்டத்தார் தோன்றி அவர்கள் (மனிதர்களை) நன்மையின் பால் அழைத்து, நல்லதை ஏவித் தீய செயல்களிலிருந்து (அவர்களை) விலக்கிக் கொண்டுமிருக்கவும். இத்தகையோர்தான் வெற்றி பெற்றோர்."** (3 : 104)

முஸ்லிம் சமூகத்திற்குள் "நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கும் ஒரு குழுவினர் சதாவும் இருக்க வேண்டும்" என அல்குர்ஆன் வலியுறுத்துகின்றது.

பிறர் நலன் நாடுவதும், நன்மையை ஏவித் தீமையைத் தடுத்துவிடுவதும் அநீதியிழைப்பவனுக்கு முன்னால் சத்தியத்தை உரத்துச் சொல்வதற்கான துணிவை முஸ்லிமுக்கு வழங்குகின்றது. **"அறப் போராட்டத்தில் மிக உயர்ந்தது எது?"** என நபியவர்களிடம் வினவப்பட்ட போது, **"அநியாயக்கார அரசனின் முன்னால் சத்தியத்தை எடுத்துக் கூறுதல்"** எனப் பதிலளித்தார்கள். (பஸ்ஸார்) **"அநியாயக்காரனிடம் நீ அநியாயக்காரன்" என்று சொல்ல அஞ்சுபவர்களாக எனது உம்மத்தினரைக் கண்டால் நீ அவர்களிலிருந்து விலகிக் கொள்."** (அஹ்மத்)

சிறந்த மனிதருக்குரிய பண்புகளுள் நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பதும் ஒன்றாகும். நபி (ஸல்) அவர்கள் மிம்பரில் இருந்தபோது ஒரு மனிதர் எழுந்து வினவினார். **"அல்லாஹ்வின் தூதரே! மனிதர்களில்**

**சிறந்தவர் யார்?" நபி (ஸல்) அவர்கள் "மனிதர்களில் சிறந்தவர், அவர்களுள் நன்கு அல்குர்ஆன் ஓதுபவர், மிகுந்த இறையச்சமுடையவர், அவர்களுள் மிக அதிகம் நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பவர், அவர்களில் மிக அதிகமாக இனபந்துக்களோடு இணைந்திருப்பவர்" என்று கூறினார்கள்.** (அஹ்மத்)

ஒரு முஸ்லிம், சமூகத்தின் மத்தியில் அநீதமும், அட்டுழியமும், தீமைகளும் பரவுவதை ஒருபோதும் பார்த்துக் கொண்டிருக்கமாட்டார். அவ்வாறு தீமைகளைத் தடுக்காதிருந்தால் அல்லாஹ்வின் வேதனை பார்வையாளர்களையும் பீடிக்கும் என்பதை அவன் நன்கு உணர்ந்து கொள்வான்.

அபூபக்கர் ஸித்தீக் (ரழி) அவர்கள் கலீபாவாகப் பொறுப்பேற்ற போது மிம்பரில் ஏறி, அல்லாஹ்வைப் புகழ்ந்த பின்னர் கூறினார்கள், **"நம்பிக்கையாளர்களே! நீங்கள் (தவறான வழியில் செல்லாது) உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். நீங்கள் நேரான வழியில் சென்றால் வழிதப்பிய எவனுடைய தீங்கும் உங்களைப் பாதிக்காது. நீங்கள் அனைவரும் அல்லாஹ்விடமே செல்ல வேண்டியிருக்கின்றது. நீங்கள் (இங்கு) செய்து கொண்டிருப்பவைகளைப் பற்றி (அச்சமயம்) அவன் உங்களுக்கு அறிவித்து விடுவான்." (5 : 105) என்ற திருவசனத்தை ஓதுகின்றீர்கள். நீங்கள் அந்த வசனத்திற்கான பொருளை உரிய வகையில் விளங்கிக் கொள்வதில்லை. நிச்சயமாக நான், நபி (ஸல்) அவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். "மனிதர்கள் தீமைகளைக் காணும் போது அதைத் தடுக்காமல் இருந்தால் வெகு விரைவில் அல்லாஹ்வின் வேதனை அவர்கள் அனைவரையும் சூழ்ந்துகொள்ளும்."** (அபூதாவூத்)

நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பதற்குரிய வழிமுறையையும் ஒழுங்கையும் நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தருகின்றார்கள். "உங்களில் ஒருவர் வெறுக்கத்தக்கதைக் கண்டால் அதை தனது கரத்தால் மாற்றட்டும். அதற்கு சக்தி பெறவில்லையெனில் தனது நாவால் மாற்றட்டும். அதற்கும் சக்தி பெறவில்லையாயின் தனது மனதால் வெறுக்கட்டும். இது ஈமானின் பலவீனமான நிலையாகும்." (முஸ்லிம்)

ஆகவே, சமுதாய மக்களுக்கு நன்மையான விடயங்களை ஏவி, தீமையான விடயங்களைத் தடுத்து, நன்மக்களாக வாழ்வோமாக.

# ஆன்மீக வளர்ச்சிக்குரிய உளப் பண்புகள்

**ஆன்மீக வளர்ச்சியின் முக்கியத்துவமும் பயன்பாடும்**

ஆன்மீகத்தையும் உலகியலையும் உள்ளடக்கி நடுநிலைப்போக்கை கடைப்பிடிப்பது இஸ்லாத்தின் சிறப்பம்சமாகும். ஆன்மீகவியலுக்கு அடிப்படையாக உள்ளம் அமைகிறது. இஸ்லாமிய பரிபாசையில் உள்ளம் - கல்பு, நப்ஸ், ரூஹ் என்ற அறபு மொழிப் பிரயோகங்களில் பாவிக்கப்பட்டு வருகின்றது. இதனை "தஸ்கியதுன் நப்ஸ்" என இஸ்லாமிய அறிஞர்கள் பெயரிட்டுள்ளனர். சுருக்கமாக "தஸ்கியா"என வழங்குவர். இதன் வளர்ச்சிப் பரிமாணத்தில் "தஸவ்வுப்" என்ற ஆன்மீக கலை தோன்றியதாக இமாம் கஸ்ஸாலி (ரஹ்), அபூதாலிப் அல் - மக்கீ (ரஹ்) போன்ற அறிஞர்கள் நிறுவுகின்றனர்.

ஒரு முஸ்லிம் தனது ஆத்மாவை ஒழுங்குபடுத்திக்கொள்வதற்கு அல்குர்ஆன், அஸ்ஸுன்னா என்பன எந்தெந்த வழிமுறைகளைக் குறித்துக்காட்டுகின்றனவோ அவ்வழி முறைகளையே அவன் பின்பற்ற வேண்டும். இம்மை, மறுமை என்றோ, உடல், ஆத்மா என்றோ வேறுபடுத்தி நோக்காமல், அவற்றை இணைத்துச் செல்ல இஸ்லாம் அறிமுகப்படுத்திய வழிமுறைகளை ஒவ்வொரு முஸ்லிமும் பின்பற்றல் வேண்டும். இல்லாவிட்டால் ஆத்ம பரிபக்குவம் என்று கருதக்கூடிய விடயங்களில் பாதிப்புக்கள் ஏற்படலாம். இதனை "அம்ராழுல் கல்ப்" (உள்ளத்தின் நோய்கள்) என்று ஆன்மிகவியலாளர்கள் அழைக்கின்றார்கள்.

இந்த அத்தியாயத்தில் நாம் முதலில் ஆன்மீக முன்னேற்றத்துக்கு உந்து சக்தியாக அமையும் தக்வா, ஸுஹ்த், வரஉ, குஷுஉ, குழூஉ, முஹாஸபா, முராகபா என்பவற்றை மேலோட்டமாக நோக்குவோம்.

**"தஸ்கியதுன் நப்ஸ்" பற்றி அல்குர்ஆன்**

> **"கல்வி அறிவில்லாத (அரபு) மக்களில் அவர்களில் உள்ள ஒருவரை அவன் (தன்னுடைய) தூதராக அனுப்பி வைத்தான். அவர்கள் இதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டிலிருந்தபோதிலும், அத்தூதர் அவர்களுக்கு அல்லாஹ்வுடைய வசனங்களை ஓதிக்காண்பித்து அவர்களை பரிசுத்தமாக்கி வைத்து அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக்கொடுக்கின்றார்."** (62 : 2)

**தஸ்கியதுன் நப்ஸ் பற்றி அல்-ஹதீஸ்**

"நிச்சயமாக ! அறிந்து கொள்ளுங்கள். உடம்பிலே ஒரு சதைப்பிண்டம் இருக்கின்றது. அது சீர் பெற்றுவிட்டால் உடல் முழுவதும் சீர் பெற்றுவிடும். அது சீர்கெட்டு விட்டால் உடல் முழுவதும் சீர் கெட்டுவிடும். அது தான் மனிதனின் உள்ளம் (புஹாரி, முஸ்லிம்)

**தக்வா**

தக்வா என்ற சொல் இறையச்சம், அல்லாஹ்வுக்கு அஞ்சுதல், பயபக்தி, இறையுணர்வு என்ற அர்த்தங்களில் இஸ்லாமிய பரிபாஷையில் வழங்கப்படுகின்றது.

**இதுபற்றி அல் - குர்ஆன்**

**"இறை விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்சினால், உங்களுக்கு அவன் நேர்வழியைக் காட்டுவான். உங்களை விட்டும் உங்கள் தீமைகளை அழிப்பான். உங்களை மன்னிப்பான். அல்லாஹ் மகத்தான கருணை யுடையவன் ஆவான்."** (8 : 29) எனக் கூறுகின்றது.

**இது பற்றி அல் - ஹதீஸ் பின்வருமாறு கூறுகிறது**

அபூஸயீத் அல்- குத்ரி (ரழி) அறிவிக்கின்றார்கள். **"நிச்சயமாக! உலகம் இனிமையானதாகவும் செழுமையானதாகவும் உள்ளது. நிச்சயமாக அல்லாஹ் இதில் உங்களை பிரதிநிதியாக ஆக்கி உள்ளான். நீங்கள் என்ன செய்கிறீர்கள் எனப் பார்ப்பான். எனவே, உலகைப் பயந்து கொள்ளுங்கள். மேலும் பெண்களைப் பயந்து கொள்ளுங்கள். பனீ இஸ்ரவேலர்களிடம் ஏற்பட்ட குழப்பத்தில் முதன்மையானது, பெண்கள் விடயத்தில்தான் ஏற்பட்டது"** என நபி (ஸல்) கூறினார்கள் (முஸ்லிம்)

தக்வாவை அருளுமாறு கேட்டு இறை தூதர் (ஸல்) அவர்கள் பின்வருமாறு அடிக்கடி துஆ செய்தார்கள்.

**இறைவா! உன்னிடம் நேர்வழியையும் இறையச்சத்தையும், பத்தினித்தன்மையையும் மற்றும் (போதுமென்ற) செல்வத்தையும் கேட்கின்றேன்.** (முஸ்லிம்)

## தக்வாவின் விளைவுகள்

இப்னு அப்பாஸ் (ரழி) இது பற்றிக் கூறுகையில்

1. அல்லாஹ்வின் கட்டளைகளை வாழ்வில் இயலுமானளவு பின்பற்றுதல்
2. அவன் விலக்கியவற்றை முழுமையாகத் தவிர்த்து வாழுதல்.
3. இம்மையை மறுமையின் ஈடேற்றத்துக்காகப் பயன்படுத்துதல்.
4. உள்ளதைக் கொண்டு போதுமாக்கிக் கொள்ளும் நற்பண்பு.
   ஆதாரம் (தப்ஸீர் இப்னு கஸீர்)

## தக்வாவின் அடையாளங்கள் பற்றி அல்-குர்ஆன்

1. "அல்லாஹ்வுக்கு உண்மையில் நீங்கள் அஞ்சி நடவுங்கள். (அப்போது) அல்லாஹ் உங்களுக்குக் கற்பிப்பான். (2 : 282)

2. "யார் அல்லாஹ்வுக்கு (உண்மையிலேயே) அஞ்சிவாழ்கிறாரோ, அவருக்கு அல்லாஹ் நினையாப் புறத்திலிருந்து வாழ்வியல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பான். (65 : 3 - 3)

3. "நம்பிக்கை கொண்டோரே ! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள். மேலும், முஸ்லிம்களாக அன்றி நீங்கள் மரணிக்க வேண்டாம். (3 : 102)

## தக்வாவின் அடையாளங்கள் பற்றி அல்-ஹதீஸ்

1. "நீங்கள் எங்கிருந்தாலும் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். ஒரு பாவத்தைத் தொடர்ந்து ஒரு நன்மையைச் செய்து விடுங்கள். அந்நன்மை அப்பாவத்தை அழித்துவிடும்." (திர்மிதி)

2. "இறையச்சம் இங்குதான் இருக்கின்றது." என மும்முறை ரசூல் (ஸல்) தனது நெஞ்சை சுட்டிக்காட்டிக் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

3. யாரிடம் பின்வரும் மூன்று நற்பண்புகள் இருக்கின்றனவோ, அவர் ஈமானிய சுவையை அனுபவித்து விட்டார்.

1. ஏனைய எல்லோரையும் விடவும் அல்லாஹ்வும் அவனது றஸுலும் அவருக்கு மிகவும் அன்புக்குரியவராக மாறுதல்.
2. ஒரு மனிதரை நேசிப்பதாக இருந்தால் அல்லாஹ்வுக்காகவே அவரை நேசித்தல்.
3. குப்ரிலிருந்து மீண்ட பின்னர் குப்ருக்கு மீண்டும் திரும்புவதை தான் நரகில் தூக்கி வீசப்படுவது போல வெறுத்தல்.

**தக்வாவை உறுதிப்படுத்தவும், பாதுகாக்கவும் பின்வரும் விடயங்கள் துணை புரிகின்றன.**

1. அல்-குர்ஆனை ஓதுதல், அல்லாஹ்வை திக்ரு செய்தல்.
2. அல்லாஹ்வின் மார்க்கத்தின் பால் மக்களை அழைத்தல்.
3. தொழுகையை உரிய நேரத்தில் நிறைவேற்றல்.
4. பர்ளான, சுன்னத்தான நோன்புகளை நோற்றல்.
5. ஸகாத், ஸதகா, நன்கொடைகள் வழங்கல்.
6. அல்லாஹ்வின் படைப்புக்களைப் பற்றிச் சிந்தித்தல்.
7. அல்லாஹ்வை நினைவூட்டும் சபைகளில் கலந்து கொள்ளல்.
8. கூட்டான கடமைகளை கூட்டாகவே நிறைவேற்றல்.
9. ஆலிம்கள், பெற்றோர், ஆசிரியர்களின் புத்திமதிகளை மதித்து அவர்களைக் கண்ணியப்படுத்தல்.
10. நல்ல நண்பர்களோடு பழகுதல்.
11. நல்ல நூல்களை, சஞ்சிகைகளை வாசித்தல்.
12. பல்லின சமூகங்களின் மத்தியில் வாழும்போது அவர்களுடன் நட்புறவைப் பேணுவதோடு, ஈமானில் உறுதியாக இருத்தல்.
13. பொதுச் சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்யாது அவற்றைப் பொறுப்புடன் பராமரித்தல்.
14. கொடுக்கல், வாங்கல், வர்த்தக நடவடிக்கைகளில் ஏமாற்று, லஞ்சம், மோசடி போன்ற அநீதிகள் ஏற்படாத வகையில் பல்லின மக்களுடன் நடந்து கொள்ளல்.
15. பொதுசனத் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தும் போது மனம்போன போக்கில் அவற்றைப் பார்க்காமல் இஸ்லாமிய வரையறைகளோடு அவற்றைப் பயன்படுத்தல்.
16. மரணத்தின் பின்னுள்ள வாழ்வு பற்றி நினைத்தல்.



8-CM14794

## ஸுஹ்த் - பற்றற்ற வாழ்வு

இஸ்லாம் ஒரு நடுநிலையான மார்க்கம். அது துறவறத்தை ஆதரிக்கவில்லை. மாறாக, உலகியல், ஆன்மீகவியல் ஆகிய இரண்டையும் இணைத்து உலக சுக போகத்தில் மூழ்கிவிடாமல் இருக்க "ஸுஹ்த்" எனப்படும் பற்றற்ற வாழ்வை இஸ்லாம் ஊக்குவிக்கின்றது.

இஸ்லாம் இறை விசுவாசிக்கு உலக விவகாரங்களிலும் அதன் நிகழ்வுகளிலும் ஆன்மீகப் பரிமாணத்தை வழங்குவதற்குத் தவறவில்லை. உதாரணமாக திருமணம் செய்து வாழ்வது ஒரு உலகக் காரியமாக கருதப்பட்டாலும், அதற்கு இஸ்லாமிய வரையறைகளாக ஈஜாப், கபூல், இரண்டு சாட்சிகள், வலி, மஹர் போன்ற அம்சங்களை இஸ்லாம் ஏற்படுத்தி வைத்திருப்பது இஸ்லாமியப் பின்னணியை உடையதாக அது அமைய வேண்டுமென்பதை எடுத்துக் காட்டுவதற்கே ஆகும்.

## ஸுஹ்த் பற்றி அல் - குர்ஆன்

1. "மனிதர்களே ! நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானதாகும். இவ்வுலக வாழ்க்கை உங்களை ஏமாற்றிவிட வேண்டாம். ஏமாற்றுகின்றவனும் (ஷைத்தானும்) அல்லாஹ்வைப் பற்றி விஷயத்தில் உங்களை ஏமாற்றி விட வேண்டாம், (35 : 5)

2. "(ஆகவே) பொருளும் மக்களும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய அலங்காரங்களே (அன்றி நிலையானவையல்ல.) என்றுமே நிலையான நற்செயல்கள் தாம் உங்கள் இறைவனிடத்தில் நற்கூலி கிடைப்பதற்கு மிக சிறந்ததும், நல் ஆதரவு வைப்பதற்கு மிக சிறந்ததும் ஆகும்." (18 : 46)

## ஸுஹ்த் பற்றிய ஹதீஸ் ஆதாரங்கள்

1. மரணித்தவரை மூன்று விஷயங்கள் பின் தொடர்கின்றன. அவை :
   - ❖ அவனது குடும்பம்
   - ❖ அவனது சொத்து
   - ❖ அவனது செயல்கள்

   நல்லடக்கம் முடிந்ததும் அவனது குடும்பமும், அவனது சொத்தும் திரும்பி விடுகின்றன. அவனது செயல் தங்கி விடுகிறது." என றசூல் (ஸல்) கூறினார்கள் (புஹாரி, முஸ்லிம்)

2. மறுமை விஷயத்தில் இவ்வுலகம் என்பது மிக அற்பமானது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

3. "உங்களுக்குக் கீழே (வசதி வாய்ப்பில் குறைவாக) உள்ளவர்களைப் பாருங்கள். உங்களுக்கு மேலே உள்ளவர்களைப் பார்க்காதீர்கள். உங்களுக்கு அல்லாஹ் அளித்த நன்கொடைகளை நீங்கள் குறைவாக மதிக்காமல் இருக்க, இது மிகவும் பொருத்தமாக இருக்கும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

4. நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வும் என்னை நேசித்து, மனிதர்களும் என்னை விரும்பக்கூடிய செயலொன்றை எனக்குக் காட்டித் தாருங்கள்!" என்று வினவினர். அதற்கு நபியவர்கள், "உலகில் பற்றற்றவனாக இரு. அல்லாஹ் உன்னை நேசிப்பான். மனிதர்களிடம் உள்ளவற்றை விட்டும் தேவையற்றவனாக இரு" என விடை பகர்ந்தார்கள்.

நபி (ஸல்) தமது வாழ்நாளில் மக்களுக்குச் செய்த உபதேசங்களில் இரண்டு மகத்தான உபதேசங்களை இந்த ஹதீஸ் உள்ளடக்கியிருப்பதை அவதானிக்கலாம்.

1. இவ்வுலகில் ஒரு மனிதன் பற்றற்ற முறையில் தன் வாழ்வை அமைத்துக் கொள்ளல் வேண்டும். இது அவனுக்கு அவனது இறைவனின் அன்பைப் பெற்றுக் கொடுக்கும்.

2. பிற மனிதர்களிடமுள்ளவற்றில் ஆசைகொள்வதை விட்டொழிப்பது. இது அவர்களது அன்பையும், நேசத்தையும் எவ்வாறு பெற்று சமூகத்திற்கிடையிலான தொடர்பு எப்படி அமைய வேண்டும் என்பதை விளக்குகின்றது.

### ❖ ஸுஹ்தின் யதார்த்த நிலை.-

"உலகில் பற்றற்ற நிலையில் வாழ வேண்டும்" எனும் போது "உலகத்தை முற்றாகத் துறந்து, அதன் பொருட்களையும் அப்படியே ஒதுக்கி விட வேண்டும்" என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. அது போன்றே, அதில் வாழ்கின்ற வாழ்வையும் வேண்டுமென்றே கஷ்டங்கள் மிக்கதாக, கரடு முரடானதாக ஆக்கிக் கொள்ளுதல் என்ற கருத்தையும் தராது. அவ்வாறு செய்வது "ஸுஹ்த்" - பற்றற்ற வாழ்வு என்ற நிலையை விட்டும் "ரஹ்பானியத்" என்ற துறவற நிலைக்கு இட்டுச் சென்று விடும். முதலாவது நிலையை இஸ்லாம் வரவேற்கின்ற அதே வேளை, இரண்டாவது நிலையோ இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்டிருக்கிறது.

“ஈமான் கொண்டோரே ! அல்லாஹ் உங்களுக்கு ஆகுமாக்கி வைத்திருக்கும் நல்லவற்றை நீங்கள் ஆகாதவைகளாக கொள்ளாதீர்கள். அன்றி, நீங்கள் ஆகாதவைகளாக வரம்பு மீறியும் செல்லாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை. (5 : 87)

“இஸ்லாத்தில் துறவறம் கிடையாது” என்ற நபிவாக்கு அஹ்மத் என்ற கிரந்தத்தில் பதிவாகியுள்ளது. இதுவும் கூட ஸுஹ்தின் யதார்த்த நிலைக்குப் போதுமான சான்றாகும்.

எனவே, பற்றற்ற வாழ்வு என்ற போர்வையில் அழுக்கான ஆடைகள் அணிந்து கொண்டு எவ்விதமான உழைப்பிலும், சம்பாத்தியத்திலும் ஈடுபடாமலும் இஸ்லாத்திற்கும், இஸ்லாமிய சமூகத்திற்கும் உயர்வு தருகின்ற வேறு ஆக்கபூர்வமான பணிகள் எதிலும் ஈடுபடாமலும் மக்களின் தானதர்மங்களின் மூலம் வாழ்ந்து வருகின்ற வெறுமனே வணக்க வழிபாடுகளில் மட்டும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற நிலையை இஸ்லாம் வரவேற்பதில்லை. இதனால்தான் ஸஹாபாக்களின் நடவடிக்கைகளை அவதானித்த நவீன கால இஸ்லாமிய அறிஞர் ஒருவர் பின்வருமாறு வர்ணிக்கின்றார்.

“ஸஹாபாக்கள் இராக்காலங்களில் இபாதத்துக்களில் ஈடுபட்டு துறவிகள் போல காட்சியளிப்பர். அதே வேளை, பகற்காலங்களில் அவர்கள் ஜிஹாதில் ஈடுபடும் குதிரை வீரர்களாகச் செயற்படுவர்”. எனவே, இந்தப் பின்னணியில் தான் பற்றற்ற வாழ்வு இஸ்லாத்தில் நோக்கப்படுகின்றது.

## ஸுஹ்த் பற்றி இஸ்லாமிய அறிஞர்கள்

1. யூனூஸ் இப்னு முயஸ்ஸரா (ரஹ்) :- உலகில் பற்றற்று வாழ்தல் என்பது ஹலாலை ஹராமாக்குவதோ, செல்வத்தை வீணடிப்பதோ அல்ல, மாறாக பற்றற்ற வாழ்வென்பது உன் கையில் இருப்பதை விட அல்லாஹ்விடம் இருப்பதில் நீ கூடுதலான நம்பிக்கை வைப்பதும்; துன்பத்தில் நீ பீடிக்கப்படுவதும் பீடிக்கப்படாமல் இருப்பதும் சமமே என்ற மனோ நிலை ஏற்படுவதும், உண்மையின் விடயத்தில் உன்னைப் புகழ்பவர்களும், இகழ்பவர்களும் சமமானவர்களாக உனக்குத் தென்படுவதுமாகும்.

2. ஸுப்யான் இப்னு உயைனா (ரஹ்) விடம் “உலகில் பற்றற்றவன் யார்? என்று வினவப்பட்டது. அதற்கவர், “எவர் மீது அருள் புரியப்பட்டால் அவர் நன்றி செலுத்துகின்றாரோ, எவர் சோதனைக்குட்பட்டால் பொறுமையைக் கடைப்பிடிக்கின்றாரோ அவரே” என்றார்கள்.

3. சுப்யானுஸ் ஸௌரி (ரஹ்) :- பற்றற்ற வாழ்வு என்பது ஆசையைச் சுருக்கிக் கொள்வதாகும் ; மாறாகக் கடினமானவற்றைச் சாப்பிடுவது அல்ல.

## வரஉ - பேணுதல்

"உனக்குச் சந்தேகம் ஏற்படக்கூடியதை விட்டுவிட்டுச் சந்தேகம் ஏற்படாததை பின்பற்றுவாயாக" என றசூல் (ஸல்) அவர்கள் கூறியதை, தான் மனதில் பதிவு செய்து கொண்டதாக அல் - ஹஸன் இப்னு அலி (ரழி) அறிவிக்கின்றார்கள்.

இஸ்லாம் வலியுறுத்தும் உயர் பண்பான பேணுதல், "அல் - வரஉ" பற்றிய கருத்துக்கு அடிப்படையாக இந்த ஹதீஸ் கொள்ளப்படுகின்றது.

## வரஉ - பேணுதலுக்கு வழிகாட்டும் குர்ஆன் ஆதாரங்கள்

1. "நீங்கள் உண்மையை அறிந்து கொண்டே அதனை மறைத்துப் பொய்யை உண்மையென புரட்டிவிட வேண்டாம். (2:42)

2. "(நபியே!) நீங்கள் அறியாத யாதொரு விஷயத்தையும் நீங்கள் பின் தொடராதீர்கள். ஏனென்றால், நிச்சயமாக காது, கண், உள்ளம் ஆகிய இவை ஒவ்வொன்றுமே (அவற்றின் செயலைப்பற்றி மறுமையில்) கேள்வி கேட்கப்படும் (17 : 36)

## வரஉவிற்கு வழிகாட்டும் ஹதீஸ் ஆதாரங்கள்

1. "நிச்சயமாக ஹலால் தெளிவானது, ஹராமும் தெளிவானது. இவ்விரண்டிற்கும் இடையே சந்தேகத்துக்குரிய அம்சங்களும் இருக்கின்றன. அவற்றை அதிகமாக மக்கள் அறியமாட்டார்கள்." (புகாரி, முஸ்லிம்)

2. "குற்றமுள்ளது நிகழ்ந்து விடுமோ? எனும் பயத்தால் குற்றமில்லாததை விடுகின்ற தன்மை (அதாவது பேணுதல்) உருவாகாதவரை, ஓர் அடியான் முத்தகீன்களில் ஒருவராக மாற முடியாது" (திர்மிதி)

## பேணுதலின் மூன்று படித்தரங்கள்

1. அல்லாஹ், மலக்குகள், மனிதர்கள் ஏனைய படைப்பினங்கள் என்பவற்றில் களங்கம் ஏற்படாதவாறு உள்ளத்தைப் பாதுகாக்கும் நிலையைப் பெறல்.



9-CM14794

2. நன்மைகளைப் பேணும் பேற்றைப் பெறல், அதாவது தீமைகள் செய்யும் நேரத்தை நன்மைகள் செய்வதற்குப் பயன்படுத்தல். தீமைகளால், தாம் செய்த நன்மைகள் குறையாவண்ணம் கவனமாக இருத்தல்.

3. ஈமானைப் பாதுகாக்கும் சந்தர்ப்பம் கிட்டல். ஏனெனில், ஈமான், நன்மை செய்யும்போது கூடவும், பாவம் செய்யும் போது குறையவும் செய்கின்றது.

உண்மையில் பேணுதல் எனும் பண்பு ஒருவரில் அமைந்துவிடும்போது, அவரது அனைத்து நடவடிக்கைகளும் சீராகி விடும் என்பதில் ஐயமில்லை. ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் அபூஹுரைரா (ரழி)வுக்குக் கீழ்வருமாறு கூறினார்கள். "அபூஹுரைராவே! பேணுதல் உடையவராக இருப்பீராக. அப்போது நீரே மனிதர்களில் பெரும் வணக்கவாளியாக இருப்பீர்". இப்பண்பின் முக்கியத்துவத்தை உணர்ந்த நபித்தோழர்கள், இதனை எவ்வளவு தூரம் கடைப்பிடித்தார்கள் எனின், அவர்களில் சிலர் ஒரு ஹராம் நிகழ்ந்து விடுமோ என அஞ்சி அனுமதிக்கப் பட்டவைகளைக்கூட தவிர்ப்போராய் இருந்து வந்துள்ளனர்.

## பொதுச் சொத்துக்களைக் கையாள்வதில் குலபாஉர் ராஷிதீன்களின் பேணுதல்

ஒரு தடவை அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் உணவு உட்கொள்ள ஆரம்பித்ததும், தனது பணியாளரிடம் இவ்வுணவு எங்கிருந்து கிடைத்தது? என வினவினார். அதற்கு பணியாள், உங்கள் மீது அன்பு கொண்ட ஓர் அடிமை இவ்வுணவை உங்களுக்கு வழங்கியிருந்தார் எனக் கூற, சந்தேகத்துக்கிடமான நிலை கலீபாவுக்கு ஏற்பட்டதன் விளைவாக, அவ்வுணவை உண்பதை நிறுத்தி வாந்தி எடுக்க ஆரம்பித்தார்கள்.

இதனைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர், “அல்லாஹ் தங்களுக்குக் கிருபை செய்வானாக. ஒரு பிடி உணவுக்காக இவ்வளவு சிரமத்தை சகித்துக் கொள்கிறீர்களே! என்று கேட்டதற்கு, “என்னுடைய உயிருடன் தான் அந்த ஒரு கவள உணவு வெளிவருமென்றிருந்தாலும் அப்பொழுதும் அதனை வெளியில் எடுத்தே தீருவேன்.” ஏனெனில் “ஹராமான பொருளினால் வளர்க்கப்படக்கூடிய உடல் நரக நெருப்புக்கு மிகத் தகுதியானதாகும்” என நபி (ஸல்) கூற நான் செவியுற்றுள்ளேன்.” என தனது பேணுதலின் உச்சத்தை கலீபா அபூபக்கர் (ரலி) வெளிப்படுத்தினார். (ஹயாதுஸ் ஸஹாபா)

அமீருல் மு.ஃமினீன் கலீபா உமர் (ரலி) அவர்களை சந்திக்க ஒரு பிரஜை அவர் சமூகம் வந்தபோது அவரை உட்காரவைத்த கலீபா அதுவரை எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்துவிட்டார். வந்தவர் வியப்படைந்து “ஏன்?

விளக்கை அணைத்தீர்கள்"என்று கேட்டபோது, நீர் இங்கு வரும் வரை நான் அரச பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். அதற்காக அரச செலவில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. நீர் வந்ததும், தனிப்பட்ட விடயம் கதைக்க வேண்டியிருப்பதால் அரச விளக்கை பயன்படுத்தாமல் எனது தனிப்பட்ட விளக்கை ஏற்றுவதற்காகவே அவ்வாறு நான் செய்தேன் என்று கூறினார்கள். (ஹயாதுஸ் ஸஹாபா) இதிலிருந்து உமர் (ரலி) பொதுச் சொத்தில் எந்தளவு பேணுதலாக இருந்தார் என்பதை புரிந்துகொள்ள முடிகிறது.

**குஷூஉ, குழூஉ - உள்ளச்சமும், பணிவும்**

இஸ்லாமிய இபாதத்துக்களை நிறைவேற்றும்போது இறையடியார்கள் உள்ளச்சத்துடனும், பணிவுடனும் அவற்றை மேற்கொள்ள வேண்டுமென இஸ்லாம் உபதேசிக்கின்றது. முகஸ்துதி, புகழ், தற்பெருமை போன்ற தீய பண்புகள் ஏற்படாமல் இருக்க இந்த குஷூஉம், குழூஉம் தடுப்பரண்களாக அமைவதாக இஸ்லாமிய அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

(உ-ம்) இஸ்லாமிய கடமைகளில் தூணாகவும், முதுகெலும்பாகவும் உள்ள தொழுகையை நிறைவேற்றும் மு∴மீன்கள் வெற்றியடைந்து விட்டனர் என அருள்மறை அல் - குர்ஆன் பின்வருமாறு பறை சாற்றுகிறது.

"மு∴மீன்கள் வெற்றி பெற்று விட்டனர். அவர்கள் எத்தகையோரென்றால் தமது தொழுகைகளை உள்ளச்சத்துடன் நிறைவேற்றியவர்கள். (23 : 01)

மேலும், தொழுகையில் தேவையற்ற ஆர்ப்பரிப்பு, அளவு கடந்த அமைதி அவசியமற்றது. மாறாக நடுநிலைப்போக்கு வரவேற்புக்குரியது என்பதை பின்வரும் குர்ஆன் வசனம் உறுதி செய்கின்றது.

"நபியே ! உங்களது தொழுகையில் (அளவு கடந்து) சத்தமிட வேண்டாம். (அளவு கடந்து) அமைதி பேணவும் வேண்டாம். நடுநிலைப் போக்கை கைக் கொள்ளவும்." (17 : 110)

(பெரியார் லுக்மானுல் ஹகீம் தனது மகனுக்குச் செய்த உபதேசத்தில்) "நீ நடக்கும்போது நடுத்தரத்தைக் கடைப்பிடி. உமது குரலைத் தாழ்த்திக் கொள். குரல்களில் மிகவும் வெறுக்கத்தக்கது கழுதையின் குரலாகும் " (31 : 19 )

**குஷூஉ , குழூஉவுக்கு வழிகாட்டும் ஹதீஸ் ஆதாரங்கள்**

1. "நிச்சயமாக அல்லாஹ் உங்கள் உருவங்களையோ, செல்வங்களையோ பார்க்க மாட்டான். என்றாலும் உங்கள் உள்ளங்களையும், செயல்களையுமே பார்க்கிறான்". (முஸ்லிம்)
2. நபி (ஸல்) படுக்கைக்கு வந்ததும் பின்வரும் துஆவை ஓதிக் கொண்டு தூங்குவார்கள்.

"இறைவா! என்னை உன்னிடம் ஒப்படைத்தேன். என் முகத்தை உன்னிடம் திருப்பிவிட்டேன். என் காரியத்தை உன்னிடம் ஒப்படைத்துவிட்டேன். என் முதுகை உன் பக்கமே சாய்த்து விட்டேன். உன்னைப் பயந்தும், உன்னிடம் ஆதரவு வைத்தும் இவ்வாறு செய்தேன்". (புஹாரி, முஸ்லிம்)

**அல் - முராகபா வல் முஹாஸபா**

**கண்காணித்தலும், சுய விசாரணையும்**
**அல்குர்ஆன் ஆதாரங்கள்**

1. "நபியே ! நிச்சயமாக உமது இரட்சகன் கண்காணித்துக் கொண்டிருக்கிறான்." (89 : 14)
2. "கண்களின் மோசடியையும், உள்ளங்கள் மறைத்து வைத்திருப்பதையும் அவன் நன்கறிவான்."
3. "நிச்சயமாக அல்லாஹ்வுக்கு பூமியிலோ, வானத்திலோ உள்ள எதுவும் மறைந்ததாக இல்லை."

**ஹதீஸ் ஆதாரங்கள்**

1. "அறிவாளி என்பவன், தன்னைப் பரிசோதனை செய்து மரணத்துக்குப் பின் உள்ள வாழ்வுக்காக செயற்படுபவனேயாவான்." (திர்மிதி)
2. "ஒரு மனிதனின் அழகிய பண்பு, அவன் தனக்கு அவசியம் இல்லாததை விட்டு விடுவதாகும்." (திர்மிதி)

3. "நீர் எங்கிருந்தாலும் அல்லாஹ்வை அஞ்சிக்கொள்வாயாக. தீமை செய்தால் பதிலாக தொடர்ந்து நன்மை ஒன்றைச் செய்வாயாக. அது தீமையை அழித்துவிடும். அழகிய குணத்துடன் மக்களுடன் பழகு வாயாக. (திர்மிதி)

அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்காக செயற்படுகின்ற முஸ்லிம், தனது செயற்பாடுகள் பற்றி சுய விசாரணை செய்து கொள்வது அவசியமாகும். இதனையே, "முஹாஸபா " என்பர். ஒவ்வொரு நாளும் உறங்கச் செல்லுமுன்னர் அன்றைய தினம், தான் ஆற்றிய செயற்பாடுகளை மீட்டிப் பார்த்து அவை அல்லாஹ்விடம் அங்கீகாரம் பெற்றவையா? அவ்வாறாயின் அவை இக்லாசுடன் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா? அன்றேல் விலக்கப் பட்டவையா? என்பது பற்றி சுயவிசாரணை செய்து பார்த்தல் வேண்டும். அல்லாஹ்வினால் அங்கீகரிக்கப்படாத செயல்கள் நிகழ்ந்திருந்தால் அதற்காக அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்பதும் பயனுடையதாகும். இதனை நல்லடியார்கள் அன்று முதல் இன்று வரை செய்து வருகிறார்கள்.

## ஆன்மீக வளர்ச்சிக்குரிய செயற்பாடுகள்

மனிதன் உடல், அறிவு மற்றும் ஆன்மா ஆகிய மூன்றையும் கொண்டவனாகப் படைக்கப்பட்டுள்ளான். அம்மூன்று அம்சங்களும் சீராக அமைய வேண்டும் என்பது இஸ்லாத்தின் கோட்பாடாகும். அதிலும் குறிப்பாக அல்லாஹ் மனிதனின் வெற்றியை ஆன்மீகப் பரிசுத்தத்திலேயே வைத்துள்ளான். "ஆத்மாவின் மீதும், அதனை (மனிதனாக) உருவாக்கியவன் மீதும், அதன் நன்மை தீமைகளை அதற்கறிவித்தவன் மீதும் சத்தியமாக, எவன் (பாவங்களை விட்டும்) தன்னைப் பரிசுத்தமாக்கிக் கொண்டானோ அவன் நிச்சயமாக சித்தியடைந்துவிட்டான். எவன் அதனைப் (பாபத்தில்) புதைத்து விட்டானோ நிச்சயமாக நஷ்டமடைந்து விட்டான்."(91 : 7-10)

நபிமார்கள் அனைவரும் உள்ளத்தைப் பரிசுத்தமாக்கும்படி அழைப்பு விடுத்தனர். தஸ்கியதுந் நப்ஸ் எனப்படும் உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தல் அவர்களின் முதன்மையான பணிகளுள் ஒன்றாக இருந்தது. தஸ்கியதுந் நப்ஸ் என்பது பயன்மிக்க அறிவு, நற்செயல், நன்மைகளை ஏவித் தீமைகளைத் தடுத்தல் என்பவற்றினூடாக உள்ளத்தைச் சீர்படுத்தி, அதனைத் தூய்மைப்படுத்துவதாகும். இவ்வாறு உள்ளத்தை தூய்மைப்படுத்தி, அதற்குரிய செயற்பாடுகளைச் செய்யும் போது ஆன்மா பரிசுத்தமடைவதோடு அது வளர்ச்சியுமடைகின்றது. அந்த வகையில் ஆன்மீக வளர்ச்சிக்குரிய செயற்பாடுகள் அநேகமுள்ளன. அவற்றுள் பிரதானமானவற்றை அவதானிப்போம்.

### நாவைப் பேணுதல்

அல்லாஹ் மனிதனை மிக அழகாகப் படைத்து, அவனுக்கு கண், காது, நாவு, கை, கால் போன்ற பயன்மிக்க உறுப்புகளையும் வழங்கியுள்ளான். அவற்றுள் அவனுக்கு பேசுகின்ற ஆற்றலைக் கொடுக்கின்ற நாவு முக்கியமானதாகும். அது அல்லாஹ் அவனுக்கருளியுள்ள மாபெரிய அருட்கொடையாகும். நாவு பேசுவதன் மூலம் மனிதனது உள்ளத்திலிருந்து எண்ணங்களை வெளிப்படுத்து வதற்கும் பிறருக்கு தகவல்களை வழங்குவதற்கும் துணையாக அமைந்துள்ளது.

அல்லாஹ் மனிதனுக்கு தனது செயற்பாடுகளை கவனமாக அமைத்துக் கொள்ளும்படி கட்டளையிட்டிருப்பது போலவே தனது வார்த்தைகளையும் கவனமாக வெளிப்படுத்தும்படி ஏவியுள்ளான். அவனது வார்த்தைகள் உண்மையானதாகவும், நளினமானதாகவும், சீரானதாகவும், அறிவுபூர்வமான தாகவும், அளவானதாகவும், நன்மையை நோக்கியதாகவும், இறைவணக்கத்தில் திளைத்ததாகவும், பிறரைப் புண்படுத்தாததாகவும் அமைந்திருக்க வேண்டும்.

**அல் குர்ஆன், அல் - ஹதீஸ் ஆதாரங்கள்**

**நாவைப் பேணுதல்**

- "எவர் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி நன்மையான விடயங்களைச் செய்தால் நாம் அவர்களுக்கு மகத்தான நற்கூலியைத் தருவோம்." (4 : 114)

- அபூஹுரைரா (ரழி) அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பிக்கை கொண்ட ஒருவர் நல்லதையே பேசட்டும், அல்லது மௌனமாக இருக்கட்டும்" என்று நபி (ஸல்) கூறினார்கள். (புஹாரி. முஸ்லிம்)

- "ஓர் அடியான் (நல்லதா, கெட்டதா?) என சிந்திக்காமல் பேசிவிட்டால், அதன் காரணமாக அவன் கிழக்கிற்கும், மேற்கிற்குமிடையே உள்ள மிக தூரமான அளவுக்கு நரகில் வீழ்வான்" என நபி (ஸல்) கூறியதை அபூஹுரைரா (ரழி) அறிவிக்கின்றார்கள். (புஹாரி. முஸ்லிம்)

- அபூஹுரைரா (ரழி) அறிவிக்கின்றார்கள் "ஓர் அடியான் அல்லாஹ்வின் திருப்தியை பெற்றுத் தரும் வார்த்தையை அதன் முக்கியத்துவம் பற்றித் தெரியாமல் பேசுகிறான். எனினும், அதற்காக அல்லாஹ் அவனின் தகுதிகளை உயர்த்துவான். ஓர் அடியான் அல்லாஹ்வின் கோபத்தைப் பெற்றுத் தரும் வார்த்தையை அதன் முக்கியத்துவம் பற்றி உணராமலேயே பேசுகிறான். அதற்காக அவன் நரகில் வீழ்கிறான்" என்று நபி (ஸல்) கூறினார்கள். (புகாரி)

- ஒரு முறை, நபி (ஸல்) இரு மண்ணறைகளை கடந்து சென்றார்கள். அப்போது இரு மண்ணறைகளிலுள்ள இருவரும் வேதனை செய்யப்படுகிறார்கள். ஆனால், "மிகப்பெரும் பாவச் செயலுக்காக இவர்கள் வேதனை செய்யப்படவில்லை. இதோ இவர் சிறுநீர் கழிக்கும் போது அது தனது உடலையோ உடையையோ அசுத்தப்படுத்தும் நிலையிலிருந்து தவிர்ந்து கொள்ளாதவர். இதோ, இவர் மக்களிடையே கோள் சொல்லி, புறம் பேசித் திரிந்து கொண்டிருந்தார்" (புகாரி) என நபி (ஸல்) கூறினார்கள்.

- ❖ "கோள் சொல்கின்றவன் சுவனம் நுழையமாட்டான்" (புகாரி) என நபி (ஸல்) கூறினார்கள் என ஹுதைபா (ரழி) அறிவிக்கின்றார்கள்.
- ❖ அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வை நினைவு கூறும் பேச்சை (திக்ரை) தவிர (மற்ற பேச்சை) அதிகம் பேசாதீர்கள். அல்லாஹ்வை நினைவு கூறும் பேச்சைத் தவிர்த்து (மற்ற பேச்சை) அதிகம் பேசுவது இதயத்தை இறுக வைத்து விடும். மக்களில் அல்லாஹ்வை விட்டு மிக தூரமாக விலகி நிற்பவர், இறுகிப் போன இதயமுடையவர்" (திர்மிதி) என நபி (ஸல்) கூறினார்கள்.
- ❖ "தன் நாவையும், வெட்கஸ்தலத்தையும் பாதுகாத்துக் கொள்வதாக ஒருவர் பொறுப்பேற்றால், அவருக்கு சுவனம் கிடைத்திட நான் பொறுப்பேற்றுக் கொள்வேன்" (புகாரி) என நபி (ஸல்) கூறினார்கள்.

### பார்வை, செவிப்புலன், பாலுறுப்பு போன்ற உறுப்புக்களை பேணுதல்

அல்லாஹ் மனிதனுக்கு அநேக அவயவங்களை வழங்கியுள்ளான். அவை அவனுக்கு கொடுக்கப்பட்டுள்ள அருமையான கொடைகளாகும். அவற்றை வழங்கிய அல்லாஹ், அவற்றை மனிதன் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றான்.

அல்லாஹ் முஸ்லிமுக்குக் கடமையாக்கியுள்ள கடமைகள் அவனது உடல் உறுப்புக்களின் பங்களிப்புடனேயே நிறைவேற்றப்படுவதை அவதானிக்கலாம். தொழுகையில் நாவு, உறுப்புக்கள், உள்ளம், மூளை அனைத்தும் செயற்படுகின்றன. நோன்பின் போது முழு உடலும் சுகபோகங்களைத் தடுத்துக் கொள்கின்றது. ஹஜ், ஹிஜ்ரத், அறப்போராட்டம், கல்வி போன்றவற்றுக்காக உடல் உறுப்புக்கள் பல சிரமங்களைத் தாங்கிக் கொள்வதோடு தியாகத்தோடு உழைக்கின்றன. மது, போதைப் பொருட்கள், விபச்சாரம், பன்றி இறைச்சி போன்றன மனிதனது உடலையும் அறிவையும் பாதிப்பனவாகக் காணப்படுகின்றன.

- ❖ "(மனிதன்) எதைக் கூறிய போதிலும் அதனை எழுதக் காத்துக் கொண்டிருக்கும் ஒருவர் அவனிடம் இல்லாமலில்லை" (அவன் வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையும், உடனுக்குடன் பதியப்படுகின்றது) (50 : 18)
- ❖ "நம்பிக்கையாளர்கள் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டனர். அவர்கள் எத்தகையவர்கள் என்றால், மிக்க உள்ளச்சத்தோடு தொழுவார்கள், அவர்கள் வீணான காரியங்களிலிருந்து விலகியிருப்பார்கள், அவர்கள்

ஸகாத்தும் கொடுத்து வருவார்கள். அவர்கள் தமது மர்மஸ்தலங்களையும் பாலுறுப்பு (விபசாரத்திலிருந்து) பாதுகாப்பார்கள். (23 : 1-5)

- ஆயிஷா (ரழி) அறிவிக்கின்றார்கள் : நபி (ஸல்) அவர்கள் சுத்தம் செய்தல் (வுழு செய்தல், குளித்தல்), தலை வாருதல், செருப்பு அணிதல் போன்ற அனைத்துக் காரியங்களிலும் வலது புறத்திலிருந்து தொடங்குவதையே விரும்புபவர்களாக இருந்தார்கள். (புஹாரி, முஸ்லிம்)
- ஹப்ஸா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:- "நபி (ஸல்) உண்ணவும், பருகவும் தனது வலது கரத்தையே பயன்படுத்தினார்கள். இவை அல்லாத காரியங்களுக்குத் தன் இடது கையை பயன்படுத்துவார்கள்." (அபூதாவூத்)
- நபி (ஸல்) கூறினார்கள்: "உங்கள் கண்களுக்கு உங்கள் மீது ஓர் உரிமை இருக்கின்றது. எனவே இந்த தெய்வீக அருட்கொடையை மதிப்பது ஒவ்வொரு விசுவாசியினதும் கடமையாகும். இந்த அருட்கொடையை எல்லாம் வல்ல இறைவன் நாட்டப்படியே பயன்படுத்த வேண்டும்." (திர்மிதி)
- நபி (ஸல்) அவர்கள், "உனக்கு உதவி செய்பவனுக்கு உதவி செய். உபத்திரம் செய்பவனுக்கும் உதவி செய்" என அருளினார்கள். "உபத்திரம் செய்பவருக்கு உதவி செய்வது எப்படி"? என்று ஸஹாபாக்கள் விசாரித்தார்கள். அவன் அந்தப் பாவத்தை செய்யாமல் தடுப்பதே அவனுக்குச் செய்யும் உதவி என்றார்கள்."

### நேரம் பேணுதல்

நேரம் என்பது மனித வாழ்வின் பகுதியாகும். உண்மையில் நேரமென்பதே வாழ்வாகும். நேரம் கழிகின்றது என்பது வாழ்வின் ஒரு பகுதி கழிகின்றது என்பதே கருத்தாகும். "நேரம் ஓர் வாள் போன்றது. அதனை நீ வெட்டாவிட்டால் அது உன்னை வெட்டிவிடும்" என்ற பொன்மொழி நேரத்தின் யதார்த்த நிலையைத் தெளிவுற விளக்குகின்றது. நேரத்தை தவிர இழந்து போன ஒன்றை மீண்டும் பெறக்கூடிய சாத்தியம் இருக்கின்றது. நேரத்தை இழந்தால் அது மீண்டும் ஒரு போதும் திரும்பி வராது. ஆதலால் அது மனிதன் பெற்றிருக்கும் மிகப் பெறுமதியான ஒன்றாகும். ஒரு மு.ஃமின் எப்போதும் நேரத்தை நல்ல விடயங்களில் ஈடுபடுத்தவே முயற்சிப்பான். தீய, வீணான, தேவையற்ற விடயங்களைச் செய்வதில் நேரம் கழிந்து விடக்கூடாது என்பதிலும் கரிசனையோடிருப்பான்.

நேரம் பேணுதல் இஸ்லாம் வலியுறுத்தும் ஓர் அடிப்படைப் பண்பாகும். அதனால்தான் தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ் என்ற பிரதான இபாதத்துக்கள் அனைத்தும் நேரத்தை அடிப்படையாகக் கொண்டும் அதனைப் பேணும் விதத்திலும் அமைக்கப்பட்டுள்ளன.

- “இரவு பகல் மாறிவருவதிலும், வானங்களிலும் பூமியிலும் அல்லாஹ் படைத்திருப்பவற்றிலும் இறையச்சமுடைய மக்களுக்கு (உணர்ச்சியூட்டும்) பல சான்றுகள் நிச்சயமாக இருக்கின்றன.” (10 : 6)
- “ஆகவே (நம்பிக்கையாளர்களே) நீங்கள் உங்கள் காலை நேரத்திலும் மாலை நேரத்திலும் அல்லாஹ்வைப் புகழ்ந்து கொண்டிருங்கள். (30:17)
- "(அவ்வாறின்றி)" நீங்கள் இளைப்பாறுவதற்கு இரவையும் (பல இடங்களுக்குச் சென்று வாழ்க்கைக்குத் தேவையான) அவனுடைய அருளை நீங்கள் தேடிக் கொள்ளும் பொருட்டுப் பகலையும் உங்களுக்கு அவன் உருவாக்கிவைத்திருப்பவற்றுக்கு அவன் கிருபைதான் காரணம். இதற்கு நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவீர்களாக" (28 : 73)
- "அவர்கள் அனைவரையும் அல்லாஹ் (உயிர் கொடுத்து) எழுப்பும் நாளில் அவர்கள் செய்தவைகளைப் பற்றி அவர்களுக்கு அறிவிப்பான். அதனை அவர்கள் மறந்து விட்ட போதிலும் அவைகளை அல்லாஹ் சேகரித்து வைக்கின்றான். (அவர்கள் செய்யும்) அனைத்தையும் அல்லாஹ் அறிந்தவனாகவே இருக்கின்றான்"
- நபி (ஸல்) கூறினார்கள்: மறுமையில் ஒவ்வொரு அடியானும் நான்கு கேள்விகளுக்குப் பதிலளிக்காதவரை அவ்விடத்தை விட்டு சிறிதும் நகர முடியாது. அவை:
  - (I) உன் வாழ்க்கையை எவ்வாறு கழித்தாய்?
  - (II) உன் வாலிபத்தை எவ்வாறு கழித்தாய்?
  - (III) உன் செல்வத்தை எவ்வாறு திரட்டி எவ்வாறு செலவளித்தாய்?
  - (IV) நீ பெற்ற அறிவின் மூலம் எந்தளவு செயற்பட்டாய் என்பனவாகும். (புஹாரி, முஸ்லிம்)
- நபி (ஸல்) கூறினார்கள் : அறிவுடைய ஒருவன் நேரத்தை நான்கு பகுதிகளாக வகுத்துக் கொள்வான். அதில் ஒரு பகுதியில் அவன் தன் இரட்சகனை இபாதத் செய்து கொண்டிருப்பான். அடுத்த பகுதியில் அவன் தன்னைச் சுய விசாரணைக்குட்படுத்திக் கொள்வான். மூன்றாவது பகுதியில் அல்லாஹ்வின் படைப்புக்கள் பற்றி அவன் சிந்திப்பான். நான்காவது பகுதியில் தனது வாழ்க்கைக்கான தேவைகளை நிறைவேற்றிக் கொள்வான். (இப்னு ஹிப்பான்)
- "அல்லாஹ்வே! எமது உம்மத்தினரில் அதிகாலையிலேயே துயில் எழுபவர்களுக்கு நீ அருள் புரிவாயாக" என நபி (ஸல்) பிரார்த்தனை செய்தார்கள். (முஸ்லிம்)
- "சூரியன் மறையப் போகும் நேரத்தில் அஸர் தொழுபவனது தொழுகை முனாபிகின் தொழுகையாகும்" என நபி (ஸல்) கூறினார்கள். (முஸ்லிம்)

- ❖ உமர் (ரழி) கூறினார்கள்: "பகல் நேரத்தில் நிறைவேற்ற வேண்டிய சில கடமைகள் இருக்கின்றன. அவற்றை அல்லாஹ் இரவில் அங்கீகரிப்ப தில்லை. அவ்வாறே இரவு நேரத்தில் அல்லாஹ்வுக்கு நிறைவேற்ற வேண்டிய சில கடமைகள் இருக்கின்றன. அவற்றை அல்லாஹ் பகலில் அங்கீகரிப்பதில்லை". (புகாரி)

- ❖ நபி (ஸல்) கூறினார்கள் : "அர்த்தமற்ற தேவையில்லாத வேலைகளை விட்டுவிடுவது, மனிதனின் ஈமானின் சிறப்பு அம்சங்களில் உள்ளதாகும்". (திர்மிதி)

## இளமையின் முக்கியத்துவமும் நல்வழியில் பயன்படுத்தலும்

அல்லாஹ் மனித வாழ்வை பல கட்டங்கள் கொண்டதாக அமைத்துள்ளான். குழந்தைப் பருவம், இளமைப் பருவம் மற்றும் முதுமைப் பருவம் என்பன அவற்றுள் முக்கிய கட்டங்களாகும். அதிலும் குறிப்பாக இளமைப் பருவம் மிகவும் முக்கியமான பருவமாகும். இளம் பருவத்தினரே பெரும் புரட்சிகளிலும் எழுச்சிகளிலும் நேரடிப்பங்காளிகளாவர்.

நபி (ஸல்) அவர்களின் வரலாற்றிலும் இளைஞர்களின் பங்களிப்பு மிக அதிகமாகும். அவர்களது த.ஃவா பணியிலும் போராட்டக் களங்களிலும் அவருக்குத் தோளோடு தோள் நின்று உழைத்தவர்கள் இளைஞர்களாக இருந்த சஹாபாக்களே யாவர். இஸ்லாமிய வரலாற்றிலும் முஹம்மத் பின் காஸிம், தாரிக் பின் ஸியாத் போன்று பெரும் சாதனைகள் செய்தோர் இளம் வயதினரேயாவர்.

இளமையை சிறப்பாகப் பயன்படுத்தியோருக்கு மறுமையில் அதிகப் பேறுகள் கிடைக்கின்றன என்பதை ஹதீஸ்கள் கூறுகின்றன. “அல்லாஹ்வுடைய நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத மறுமை நாளில். அவன் ஏழு பேருக்கு நிழல் கொடுப்பான்; ஒருவர் அல்லாஹ்வுடைய இபாதத்துகளிலேயே வளர்ந்த இளைஞன்... (புகாரி)

இறைதூதர் (ஸல்) அவர்கள் ஒரு மனிதருக்கு கீழ்வருமாறு உபதேசம் செய்தார்கள். “நீ ஐந்து விடயங்கள் இடம்பெற முன்பு ஐந்து விடயங்களைப் பயன்படுத்திக் கொள் : உனது வயோதிபத்திற்கு முன்பு இளமையை, நோய் ஏற்பட முன்பு ஆரோக்கியத்தை, வறுமைக்கு முன்பு செல்வத்தை, வேலைப்பளுவுக்கு முன்பு ஓய்வு நேரத்தை, மரணத்திற்கு முன்பு வாழ்வை (பயன்படுத்திக் கொள்). (நஸாஈ, ஹாகிம்)

* ஒரு சில இளைஞர்கள் ஒரு குகையினுள் (அபயம்) தேடி ஒதுங்கிய போது அவர்கள் "எங்கள் இரட்சகனே! உனது அருளை எங்கள் மீது சொரிவாயாக! எங்கள் காரியத்தில் நேர்வழியை எங்களுக்கு இலகுவாக்கித்தருவாயாக" என்று (பிரார்த்தனை செய்து) கூறினார்கள். (அல்குர்ஆன் 18 : 10)

* யூசுப் (அலை) அவர்கள் தன் இளமைப் பருவத்தில் சிறையில் இருந்துங்கூட பிரச்சாரப் பணியைக் கைவிடாதவர்களாயிருந்தார்கள். அவர்கள் தனது சிறைத் தோழர்களிடம் இவ்வாறு கூறினார்கள். "சிறை கூடத்திலிருக்கும் எனது தோழர்களே! (யாதொரு சக்தியுமற்ற) வெவ்வேறு தெய்வங்கள் (மேலா) நன்றா? அல்லது (அனைவரையும்) அடக்கியாளுகின்ற (ஒரே இறைவனாகிய) அல்லாஹ் ஒருவனே மேலா? (12 : 39)

* "அவனையன்றி நீங்கள் வணங்குபவை அனைத்தும் நீங்களும் உங்கள் மூதாதைகளும் வைத்துக் கொண்ட வெறும் (கற்பனைப்) பெயர்களே தவிர (உண்மையில் அவை ஒன்றுமே) இல்லை. அல்லாஹ் இதற்கு யாதொரு ஆதாரத்தையும் இறக்கி வைக்கவுமில்லை. சகல அதிகாரங்களும் அல்லாஹ் ஒருவனுக்கே அன்றி (மற்றவர் எவருக்கும்) இல்லை. அவனைத் தவிர (மற்ற எவற்றையும்) நீங்கள் வணங்கக் கூடாதென்று அவனே கட்டளை இட்டிருக்கின்றான். இதுதான் நேரான மார்க்கம். எனினும் மனிதர்களில் பெரும்பாலானவர்கள் (இதனை) அறிந்து கொள்ளவில்லை" (என்று யூசுப் அவர்களுக்கு நல்லுபதேசம் செய்து) (12 : 40)

### ஆன்மீக வளர்ச்சிக்கான சமூக உறவு

மனிதன் தனித்து வாழ முடியாது. அவன் தனது சமூகத்துடன் சேர்ந்து வாழ வேண்டியவனாக இருக்கின்றான். அவ்வாறு இணைந்து வாழும் போது அவனிடம் சமூக உறவைப் பேணும் விதத்தினாலான சில பண்புகள் காணப்படுதல் வேண்டும். அப்போதுதான் அந்தச் சமூகம் சீராக வாழ முடிவதோடு அது தனிமனித ஆன்மீகப் பரிபக்குவத்திற்கும் துணையாக அமையும். இஸ்லாம் இவ்வகையான பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

### சுகதுக்கங்களில் பங்கெடுத்தல்

மனித வாழ்வில் சுகமும் துக்கமும் ஏற்படுவது இயல்பானதாகும். அந்நேரங்களில் பங்கு கொள்வது மிகச் சிறந்த பண்பாகும். ஒரு முஃமின் அடுத்த சகோதரனுடைய சந்தோசமான நிகழ்வுகளில் மாத்திரமன்றி கவலையான சந்தர்ப்பங்களிலும் கலந்து கொண்டு கஷ்ட நஷ்டங்களிலும் பங்கெடுத்துக் கொள்வான்.

* "நிச்சயமாக இறை விசுவாசிகள், (யாவரும்) நிச்சயமாக சகோதரர்களே" (49 : 10)

* "எவர்கள் (இதற்குப் பின்னரும்) விசுவாசிகளுக்கிடையில் (இத்தகைய) மானக்கேடான விஷயங்களைப் பரப்ப விரும்புகிறார்களோ அவர்களுக்கு நிச்சயமாக இம்மையிலும், மறுமையிலும் மிக்க துன்புறுத்தும் வேதனையுண்டு" (24 :19)

* ஸ∴த் பின் அபீ வக்காஸ் (ரழி) அவர்கள் கூறினார்கள்: நபி (ஸல்) அவர்கள் நான் நோயுற்றிருந்த போது என்னை உடல்நலம் விசாரிக்க வந்து, "இறைவா ஸ∴துக்கு நோயிலிருந்து குணமளிப்பாயாக" என்று பிரார்த்தித்தார்கள். (புஹாரி)

* "இறை நம்பிக்கையாளர் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்கும் விடயத்தில் ஒரு கட்டடத்தை போன்றவர்கள் ஆவர். கட்டடத்தின் ஒரு பகுதி மற்ற பகுதிக்கு வலு சேர்க்கிறது" என நபி (ஸல்) கூறினார்கள். பிறகு தம் கை விரல்களை ஒன்றோடொன்று கோர்த்துக் காண்பித்தார்கள் என அபூ மூஸா அல்-அஷ் அரி (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (புஹாரி)

* "ஒரு மு∴மினுக்கு அவனது கஷ்டங்களை நீக்குவதனூடாக அல்லது அவனது கடன்களை அடைப்பதனூடாக நீங்கள் ஏற்படுத்தக்கூடிய சந்தோஷம் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான செயலாகும்" என நபி (ஸல்) கூறினார்கள்." (முஸ்லிம்)

* வாஸிலா இப்னுல் அஸ்க∴ (ரழி) அறிவிக்கிறார்கள்: "உம் சகோதரனின் துன்பம் கண்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தாதீர். (இதனால்) அல்லாஹ் அவன் மீது அருள் புரிவான். உம்மை சோதித்து விடுவான்" என நபி (ஸல்) கூறினார்கள். (திர்மிதி)

* பரா∴ இப்னு ஆஸிப் (ரழி) அறிவிக்கின்றார்கள்: "நோயாளியை விசாரித்தல், ஜனாஸாவில் கலந்து கொள்ளுதல், தும்மியவனுக்கு பதில் கூறுதல், நீதியை பேணுதல், அநீதம் இழைக்கப்பட்டவனுக்கு உதவுதல், விருந்திற்கு அழைத்தால் செல்லுதல், ஸலாமைப் பரப்புதல் ஆகியவற்றை எங்களுக்கு நபி (ஸல்) கட்டளையிட்டார்கள்". (புகாரி, முஸ்லிம்)

## கடன், அடமானம், இரவல் கொடுத்தல் (அத்தைன், அல்ரஹ்ன், அல் ஆரியா)

இவை சமூக வாழ்வில் கொடுக்கல், வாங்கல் நடவடிக்கைகளில் மக்களோடு தொடர்புபடுகின்றன. கடனைப் பொறுத்தவரை ஒருவர் மற்றொருவரிடம் இருந்து திருப்பிக் கொடுக்கும் அடிப்படையில் பெறும் பொருட்கள் அல்லது பணம் என்பன கடன் எனப்படும்.

"ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு இரு தடவை கடன் கொடுப்பது ஒரு தடவை தர்மம் செய்வதைப் போலாகும்" (அல்-ஹாகிம்). அதே நேரம் இயன்றவரை கடன் வாங்குவதைக் கட்டுப்படுத்திக் கொள்ளுமாறு இஸ்லாம் அறிவுரை பகர்கின்றது. "கடனை விட்டு விடு; சுதந்திரமாக வாழலாம்." (அல்-ஹாகிம்)

கடன் என்பது மிகவும் பொறுப்பு வாய்ந்ததும், விசாரணைக்கு உட்பட வேண்டியதுமாக உள்ளதை நாம் புரிந்து கொள்ள "ஜனாஸாவை தொழுவிக்கும் விடயத்தில் நபி (ஸல்) அவர்கள் "இந்த மய்யித்து யாருக்கும் கடன் கொடுக்க இருக்கிறதா?" என்பதை விசாரித்து அதனை ஒருவரும் பொறுப்பேற்காத வரை தொழுவிக்காமல் இருப்பது நபியின் நடைமுறையாக இருந்து வந்துள்ளமை இங்கு மிகவும் சிந்திக்கத்தக்கதாகும்.

கடன் விடயத்தில் அல்குர்ஆனுடைய பின்வரும் வழிகாட்டல் எமது கவனயீர்ப்பை பெறுகின்றது. கடன் பெறும் ஒருவர்; தான் பெற்ற கடனுக்கு ஈடாக கடனைத் திருப்பிக் கொடுக்கும் வரை கடன் கொடுப்பவருக்கு பணப் பெறுமதியுள்ள ஒரு பொருளை நிபந்தனையோடு வைப்புச் செய்வது "அடகு" எனப்படும். இது பற்றி அருள்மறை அல்-குர்ஆன் பின்வருமாறு வழிகாட்டுகின்றது. "நீங்கள் பிரயாணத்தில் இருக்கும் போது (கொடுக்கல், வாங்கல் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டு அதனை எழுத) எழுத்தாளரைப் பெறாவிட்டால் (ஒரு பொருளை) ஈடாகப் பெற்றுக் கொள்ளுங்கள். (2:283)

### வாடகை (அல் இஜாரா)

குறித்த ஒரு கட்டடத்தை அல்லது பொருளை குறித்ததொரு காலப்பிரிவு வரை நிர்ணயிக்கப்பட்ட கூலியை பெற்றுக்கொண்டு இன்னொருவர் பயன்படுத்துவதற்கு இடமளிப்பது "வாடகை" எனப்படும். மறு வார்த்தையில் கூறுவதாயின் ஒரு பொருளிலிருந்து அடைந்து கொள்ளும் பயன்பாட்டுக்குப் பகரமாக செலுத்த வேண்டியதையே "வாடகை" என்றும் மனித உழைப்புக்குப் பகரமாக வழங்கப்படுவதை "கூலி" என்றும் குறிப்பிடுகின்றோம்.

"இஜாரா"எனப்படும் வாடகை நடவடிக்கையை நடைமுறைப்படுத்த பின்வரும் நிபந்தனைகள் பின்பற்றப்படல் வேண்டும் என இஸ்லாமிய சட்டம் விபரிக்கிறது.

(i) இரு தரப்பினரும் சித்த சுவாதீனமாயிருத்தல்.
(ii) பருவ வயதை அடைந்திருத்தல்.
(iii) உடன்படிக்கை பற்றி இணக்கம் காணப்படல்.
(iv) வாடகைக்கு விடப்படும் பொருள் பற்றித் தெளிவாக அறிந்திருத்தல்.
(v) வாடகைக்கு விடும் பொருளை அதன் பயன்பாடு உள்ள நிலையில் கையளிக்கும் சக்தியைப் பெற்றிருத்தல்.

(vi) வாடகைக்கு விடப்படும் பொருள் ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்டிருத்தல்.

(vii) வாடகை பணப்பெறுமதி உடையதாகவும், தொகை அறியப்படாததாகவும் இருத்தல்.

**பிணை நிற்றல் (அல்ழமான்)**

"விசுவாசிகளே! நீங்கள் நன்மையான கருமங்களுக்கும் இறையச்சத்தை வளர்க்கும் அம்சங்களுக்கும் பரஸ்பரம் ஒத்துழைப்பு வழங்குங்கள்" என்ற அல்குர்ஆனுடைய வழிகாட்டலுக்கிணங்க இக்கட்டான நிலைக்குள்ளாக்கப்பட்ட ஒரு சகோதரனுக்கு இன்னொரு சகோதரன் முன்வந்து உதவுவது, நீதிமன்ற பிடியாணைக்குள் சிக்கிக்கொண்ட ஒரு சகோதரனுக்கு நட்பு ரீதியில், உறவு ரீதியில் ஒருவர் முன்வந்து அவரது சட்டச் சிக்கலை இலகுபடுத்தி அவரது விடுதலைக்குதவுவது “பிணை நிற்றல்” என்ற நன்மையான கருமத்தோடு தொடர்புபட்டதாகும். இதனுடைய சிறப்புப்பற்றி நபி (ஸல்) அவர்கள், "ஒரு அடியானுக்கு இன்னொரு அடியான் உதவி செய்யும் காலமெல்லாம் உதவி செய்கின்ற அடியானுக்கு அல்லாஹ் தனது உதவியை வழங்கிக்கொண்டே இருக்கின்றான்." என்ற நபி மொழிக்கிணங்க பிணைநிற்றல் இஸ்லாமிய சமூக அமைப்பின் சகோதரத்துவ வாஞ்சையோடு தொடர்புபட்ட உன்னத அம்சம் என்பதில் சந்தேகம் இல்லை.

**சாட்சி சொல்லல் (அஷ்-ஷஹாதா)**

❖ அபூபக்கர் (ரழி) அறிவிக்கின்றார்கள்:- "பெரிய பாவங்கள் பற்றி உங்களுக்கு நான் கூறட்டுமா?" என நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். இறைத்தூதர் அவர்களே! “சரி” என்று நாங்கள் கூறினோம். “அது அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், பெற்றோரை நோவினை செய்தல்” என்று கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு "அறிந்து கொள்ளுங்கள், பொய் சாட்சி கூறுவதும் தான்" என்று கூறினார்கள். அவர்கள் மௌனமாகிவிடமாட்டார்களா? என்று நாங்கள் கூறுமளவுக்கு திரும்பத்திரும்ப அதையே கூறிக்கொண்டிருந்தார்கள். (புகாரி, முஸ்லிம்)

❖ அனஸ் (ரழி) அறிவிக்கின்றார்கள்:- "அல்லாஹ்வின் தூதர் பெரும் பாவம் தொடர்பாக குறிப்பிட்டார்கள். அல்லது அவர்களிடம் கேட்கப்பட்டது. அப்போது நபி (ஸல்), "அல்லாஹ்வுக்கு இணைவைப்பது, கொலை செய்வது, பெற்றோரை புண்படுத்துவது ஆகியன" என்று கூறிவிட்டு “மிகப்பெரும் பாவத்தை அறிவிக்கட்டுமா” என்று கேட்டார்கள். "பொய்

பேசுவது அல்லது பொய்சாட்சியம்" (மிகப்பெரும் பாவமாகும்) என்று சொன்னார்கள். (புகாரி)

### பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்

பொதுச் சொத்துக்கள் என்பது பொது மக்களின் பாவனைக்கு உட்படுத்தப்பட்ட வக்பு செய்யப்பட்ட தலங்களையும், இடங்களையும், உடமைகளையும் குறிக்கும். பள்ளிவாசல்கள், மத்ரசாக்கள், அனாதை விடுதிகள், வயோதிப மடங்கள், பொதுநூலகங்கள், ஆஸ்பத்திரிகள், பூந்தோட்டங்கள் போன்ற இன்னோரன்ன சமூக தாபனங்கள் அனைத்தும் இஸ்லாமிய பார்வையில் பொதுச் சொத்துக்களாகக் கருதப்படுகின்றன. இவற்றை தனிப்பட்ட ரீதியில் யாரும் உரிமை கோரவோ, விஷேட பாவனையில் பயன்படுத்துவதற்கோ அனுமதியில்லை. இவற்றின் பாவனை பற்றி மறுமை நாளில் கேள்வி, கணக்கு இருப்பதைப் பின்வரும் குர்ஆனிய வசனம் உறுதிப்படுத்துகின்றது.

* "பின்னர் அந்நாளில் (உலகில் அனுபவித்து வந்த அனைத்து) அருட்கொடையைப் பற்றியும் நிச்சயமாக நீங்கள் கேட்கப்படுவீர்கள்" (102 : 8)
* "பெண்கள், ஆண் மக்கள், பொன், வெள்ளிகளினால் சேர்த்து வைக்கப்பட்ட பெருங் குவியல்கள், அடையாளமிடப்பட்ட குதிரைகள், (ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய) கால்நடைகள், வேளாண்மை ஆகிய (மனதுக்கு) ஆசையூட்டப்பட்ட வற்றை நேசிப்பது மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டுள்ளது. இவை (யாவும் நிலையற்ற) இவ்வுலக வாழ்க்கையின் (அற்ப) இன்பங்களே. அல்லாஹ்வே, அவனிடத்தில் (நிலையான) அழகிய திரும்பிச் செல்லும் இடமுண்டு. (3 : 14)

### சிறுவர்கள், பெரியோர்கள், உலமாக்கள், ஆசிரியர்கள் மீது அன்பு காட்டலும், மதித்து நடத்தலும் -

ஒரு சமூகம் பல்வேறு தரப்பினர்களைத் தாங்கி நிற்கின்றது. சிறுவர்கள், பெரியோர்கள், உலமாக்கள், ஆசிரியர்கள் போன்ற இன்னோரன்ன தரப்பினர் ஒரு சமூகத்தின் இயக்க சக்திக்கு முக்கியமானவர்களாவர். இவர்கள் ஒவ்வொருவரும் தமது பங்கை சிறப்பாகவும், வினைத்திறமையாகவும் மேற்கொண்டு சமூகமயமாக்கலை அடைய வேண்டுமென கல்வியியலாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

சிறுவர்கள் மீது அன்பு காட்டல், பெரியோர் மீது மரியாதை செய்தல், உலமாக்களை கண்ணியப்படுத்தல் என்பன முஸ்லிம் சமூக ஆரோக்கிய வாழ்வுக்கு இன்றியமையாத விழுமியங்களாகக் கருதப்படுகின்றன. அன்பு செலுத்தப்பட வேண்டியவர்களில் பெற்றோர் முதலிடம் பெறுகின்றனர். இதனை வலியுறுத்தும் அல்-குர்ஆன் வசனம் பின்வருமாறு :

* "அல்லாஹ்வை ஒருவனையே வணங்குங்கள். அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதீர்கள். பெற்றோருக்கு நன்றி செய்யுங்கள்" (4 : 36)

* "தமது தாய், தந்தை(க்கு நன்றி செய்யும்படி) மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் கூறினோம். அவனுடைய தாய் துன்பத்தின் மேல் துன்பம் அனுபவித்து (கர்ப்பத்தில்) அவனைச் சுமந்தாள்" (31 : 14)

* "நபியே! நீர் கேளும். கல்வி அறிவுடையோனும், கல்வி அறிவில்லாதோனும் சமமாவார்களா? (இந்தக் குர்ஆனைக் கொண்டு) நல்லுபதேசம் பெறுவோர் எல்லாம் (கல்வி) அறிவுடையோரே" (அல் குர்ஆன் 39 : 9)

ஹாருன் ரஷீத் அவர்களின் காலத்தில் அவருடைய மகன் மாமூன், அபூ முஹம்மத் என்ற ஆசிரியரிடம் கற்று வந்தார். ஒரு முறை ஆசிரியர் பாடம் சொல்லிக் கொடுக்க வந்தார். மாமூனை அழைத்தார். ஆனால் அவர் அங்கு வரவில்லை. நேரம் கழித்து வந்தார். இதனால் அவர் கோபப்பட்டு பிரம்பினால் அடித்து விட்டார். சிறுவன் மாமூன் அழத் தொடங்கினார். இவ்வேளை மாமூனைப் பார்க்க அமைச்சர் வந்தார். மாமூன் தன்னைப் பற்றி அமைச்சரிடம் முறையிடுவாரோ என ஆசிரியர் பயந்தார்.

மாமூனோ அமைச்சரைக் கண்டதும் அழுகையை நிறுத்தி விட்டு அவர் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொன்னார். ஆசிரியர் பற்றி எதுவுமே சொல்லவில்லை. அமைச்சர் திரும்பிச் சென்றார்.

பின்னர் ஆசிரியர் மாமூனைப் பார்த்து "நீர் என்னைப்பற்றி அமைச்சரிடம் முறையிடுவீர் என்று எண்ணினேன். நீர் எதுவும் சொல்லவில்லையே" என்று ஆச்சரியத்துடன் கேட்டார். அதற்கு மாமூன் "நான் உங்களைப் பற்றி எவரிடமும் குறைகூறமாட்டேன். ஒழுக்கம் புகட்டுவதற்காகவே என்னை அடித்தீர்கள். இதில் குற்றம் எதுவுமில்லை. இனிமேல் நான் ஒழுங்காக நடந்து கொள்வேன்." என்று கூறினார்.

### சிரமதானப்பணிகளில் பங்கேற்றல்

சமூக சேவை ஒரு "இபாதத்" என்ற ரீதியில் பொது ஸ்தாபனங்களின், நிறுவனங்களின் சுற்றுச் சூழலையும், உள்ளக அம்சங்களையும் சுத்தமாகவும், நேர்த்தியாகவும் வைத்துக்கொள்ள இஸ்லாமிய போதனைகள் வலியுறுத்துகின்றன. அதற்குரிய பொருத்தமான வழிமுறையாக சிரமதானப்பணி கருதப்படுகின்றது. அதனை மேற்கொள்ள திட்டமிடல், கலந்துரையாடல், வளங்கள், ஆளணி என்பன அவசியப்படுகின்றன. இந்த வகையில் இஸ்லாம் வலியுறுத்தும் ஒற்றுமை, சகோதரத்துவம் போன்ற நற்குணங்கள் சிரமதானப்பணியை ஊக்குவிக்கும் அம்சங்களாக கருதப்படுகின்றன.

சிரமதானப்பணியின் மூலம் இயக்க, ஸ்தாபன உறவும், தொடர்பும் வலுவடைகின்றது. இதன் மூலம் இஸ்லாம் எதிர்பார்க்கும் சமூக மயப்படுத்தல், நிறுவனமயப்படுத்தல் என்ற உயர்ந்த இலக்குகளை ஒரு முஸ்லிம் அடைந்து கொள்கின்றார்.

## அயலார், உறவினர் நல்லுறவை பேணுதல்

மனிதன் பிறருடன் சேர்ந்து வாழ்பவன் என்ற வகையில் பல்வேறு வகையினருடன் உறவு கொள்கின்றான். அவர்களுள் அயலாரும் உறவினரும் முக்கியமானவர்கள். ஒரு சமூகரீதியான மார்க்கமான இஸ்லாம் அத்தகையவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான வழிமுறைகளைக் காட்டித் தந்துள்ளது.

அண்டை அயலாருடன் நல்ல முறையில் நடந்து கொள்வதன் முக்கியத்து வத்தையும் அவர்களுக்கு தீங்கிழைப்பதன் பாரதூரத்தையும் கீழ்வரும் நபிமொழிகள் விபரிக்கின்றன.

“ஜிப்ரீல் (அலை), அண்டை வீட்டார் தொடர்பாக அவர்களுக்கு வாரிசுரிமை கொடுக்கச் சொல்லி விடுவாரோ என நான் நினைக்கும் அளவுக்கு தொடர்ந்து உபதேசித்துக் கொண்டிருந்தார்கள்.” (புகாரி, முஸ்லிம்)

“யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டிருக்கிறாரோ அவர் அண்டை வீட்டாரைக் கண்ணியப்படுத்தட்டும்.” (புகாரி, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் ஒரு முறை “அல்லாஹ்வின் மீது ஆணையாக, அவன் ஈமான் கொண்டவனல்லன். (மூன்று முறை) என்று கூறினார்கள். அவன் யார் இறை தூதரே ! எனக் கேட்டதற்கு, “யாருடைய தீங்குகளிலிருந்து அவனது அண்டை வீட்டான் பாதுகாப்புப் பெறவில்லையோ அவன்” என்றார்கள். (புகாரி, முஸ்லிம்)

உறவினரைப் பேணி நடப்பது தொடர்பாகவும் இஸ்லாம் அநேக போதனை களைக் கொண்டுள்ளது.

“ஏழைக்கு ஸதகா செய்வதானது தர்மமாகும். உறவினருக்கு ஸதகா செய்வது தர்மமும் இனபந்துத் தொடர்பை சேர்த்து வாழ்வதுமாகும்.” (நஸாஈ, இப்னு மாஜா)

தாயின் சகோதரிக்கு நபி (ஸல்) அவர்கள் தாயின் ஸ்தானத்தில் உள்ளவர் எனக் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

* "ஆகவே (அந்த) அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். அவனைக் கொண்டே (நீங்கள் உங்களுக்குள்) ஒருவருக்கொருவர் வேண்டியவற்றைக்) கேட்டுக் கொள்கின்றீர்கள். இன்னும் (அல்லாஹ்வுக்குப் பயந்து) இரத்தக் கலப்பு உறவினர்களிடமும் (அன்பாக நடந்து கொள்ளுங்கள்) நிச்சயமாக அவன் உங்களைக் கவனித்தவனாகவே இருக்கின்றான்" (அல் குர்ஆன் 4 :1)

**அனர்த்த முகாமைத்துவம்**

மேற்படி எண்ணக் கரு இன்றைய நவீன வாழ்வியல் போக்கில் இடம்பிடித்த ஒரு அறிவுசார் அம்சமாகும். சுனாமி, பூமியதிர்ச்சி, சூறாவளி, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களால் மக்கள் பாதிக்கப்படும் போது, அவர்களை மீட்டு, இயல்பு நிலைக்குக் கொண்டுவரும் செயன்முறையே அனர்த்த முகாமைத்துவம் என விவரிக்கப்படுகிறது.

மக்களை மீட்டெடுத்தல் இரண்டு செயன்முறைகளால் இடம்பெறலாம்.

(1) உளவள ஆலோசனை மூலம் மீட்டெடுத்தல்.
(2) வாழ்வாதார நிவாரணப் பணிகள் மூலம் மீட்டெடுத்தல்.

உளவள ஆலோசனை என்ற வகையில் “ஒவ்வொரு அழிவுக்குப் பின்னரும் ஒரு அபிவிருத்தி” உருவாகும் என்ற அல்லாஹ்வுடைய நியதியை வரலாற்றுக் காலத்திலிருந்து இன்று வரை குர்ஆன், ஹதீஸ், ஸலபுஸ் ஸாலிஹீன் ஆதாரங்களிலிருந்து பாதிக்கப்பட்ட மனங்களுக்கு ஒரு வகை ஆன்மீக மருந்தாக (தர்பிய்யா), உபதேசமாக வழங்குவது ஒரு வகை தார்மீகக் கடமையாகும்.

துன்பத்திலிருந்து விடுதலை பெற, கவலை நீங்க, அச்சம் பயத்திலிருந்து விடுபட, ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்புப் பெற, மன அழுத்தம் குறைய, வாழ்க்கையில் நம்பிக்கை பிறக்க, மன அமைதியைப் பெற, உள உறுதியையும், மனோ வலிமையையும் பெற காலை, மாலை ரசூல் (ஸல்) அவர்கள் ஓதி வந்த

திக்ர்களையும், அவ்ராதுகளையும் அறிமுகம் செய்து ஆன்மீக ரீதியில் அனர்த்தப் பாதுகாப்புக்கோர சிறார்களை வழிகாட்டல் வேண்டும்.

1) சூறதுல் பகராவில் முதல் நான்கு வசனங்கள் ஓதல் (1 தடவை)
2) ஆயத்துல் குர்ஸி ஓதல் (1 தடவை)
3) “குல்” என ஆரம்பிக்கும் சூறாக்கள் ஓதல் (3 தடவை)
4) நபி (ஸல்) மீது ஸலவாத் ஓதிக் கொள்ளல் (3 தடவை)

### விருந்தோம்பல்

விருந்தோம்பல் நபிமார்களின் பண்பாகும். நபி இப்றாஹீம் (அலை) இத்துறையில் மிக முன் மாதிரியாக நடந்து காட்டியுள்ளார்கள். ஜாஹிலிய்யாக் கால மக்களிடமும் விருந்தோம்பல் என்ற நற்பண்பு இருந்து வந்தது. இதனை நபி (ஸல்) அவர்கள் ஈமானியப் பண்பாக பின்வரும் நபிமொழி மூலம் உற்சாகப்படுத்தியுள்ளார்கள்.

"யார் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் விசுவாசிக்கின்றாரோ அவர் தனது விருந்தாளியை கௌரவிக்கட்டும்". (புகாரி, முஸ்லிம்)

"யாராவது விருந்துக்கு அழைக்கப்பட்டால் அதற்குப் பதிலளிக்கட்டும்.” (முஸ்லிம்)

### விருந்தினரை கௌரவிக்கும் முறைகள்

1. இன்முகத்துடன் வரவேற்றல்
2. அன்புடன் நடந்து கொள்ளல்
3. சந்தோஷமாக உரையாடல்
4. குறித்த நேரத்தில் உணவு அல்லது சிற்றுண்டி பரிமாறல்
5. அவர்களுடன் சேர்ந்து அமர்ந்து உண்ணல்
6. அவர்கள் சாப்பிட்டு முடிக்கும் முன்னர் தான் சாப்பிட்டு முடிக்காதிருத்தல்
7. அவர்களால் ஏற்படும் சிரமங்களைச் சகித்துக் கொள்ளல்
8. வீட்டுவாசல் வரை சென்று வழியனுப்புதல்.

### ❖ விருந்துண்ட பின் ஓதும் துஆ

أَللّٰهُمَّ اَطْعِمْ مَنْ اَطْعَمَنَا وَاسْقِ مَنْ سَقَانَا

* "யாஅல்லாஹ்"! எமக்கு உணவளித்தவருக்கு நீயும் உணவளிப்பாயாக. எமக்கு தண்ணீர் புகட்டியவருக்கு நீயும் தண்ணீர் புகட்டுவாயாக."

أَللَّهُمَّ بَارِكْ لَهُمْ رَزَقْتَهُمْ فِيْمَا وَاغْفِرْ لَهُمْ وَارْحَمْهُمْ.

* "யாஅல்லாஹ்" நீ இவர்களுக்கு அளித்தவற்றில் அபிவிருத்தியை அருள்வாயாக. மேலும், இவர்களுக்கு மன்னிப்பு வழங்குவாயாக இன்னும் இவர்களுக்கு அருள்புரிவாயாக"

### ❖ விருந்தோம்பலில் வலீமா

வலீமா என்பது திருமணம் முடித்த சந்தோஷத்திற்காக தனதும், தனது மனைவியினதும் உறவினர், நண்பர்களுக்காக ஏற்பாடு செய்யும் விருந்துபசாரமாகும். கணவனின் வசதிக்கேற்ப இதனைக் கொடுக்கலாம். நபி (ஸல்) அவர்களிடம், தான் திருமணம் முடித்ததாகக் கூறிய ஒரு ஸஹாபியைப் பார்த்து, "ஓர் ஆட்டைக் கொண்டேனும் வலீமாவை ஏற்பாடு செய்வீராக" என்றார்கள்.

திருமணத்தைப் பகிரங்கப்படுத்துவதற்கான ஒரு வழிமுறையே வலீமா விருந்தாகும். இதில் ஆடம்பரம், வீண்செலவு, களியாட்டம் போன்றன தவிர்க்கப்பட்டு, குடும்பத்திலுள்ளோர், உறவினர்கள், அயலவர்கள், ஏழைகள் என்ற பாகுபாடின்றி அழைப்பு விடுக்கப்படுவதை பின்வரும் நபி மொழி உறுதி செய்கின்றது.

"ஏழைகள் புறக்கணிக்கப்பட்டு செல்வந்தர்கள் மாத்திரம் அழைக்கப்பட்ட வலீமா விருந்துகளே விருந்துகளில் மிகவும் மோசமானதாகும்" (புஹாரி, முஸ்லிம்)

### ❖ விருந்தோம்பலில் இப்தார்

"இப்தார்" என்பது நோன்பு துறக்கச் செய்வதற்காக உணவு, ஆகாரமளிக்கும் விருந்தைக் குறிக்கின்றது. இது பற்றி நபி (ஸல்), "யார் ஒரு நோன்பாளியை நோன்பு துறக்கச் செய்கின்றாரோ, அவருக்கு அந்த நோன்பாளியின் நற்கூலியைப் போன்ற நன்மை உண்டு. தவிர, அந்த நோன்பாளியின் நன்மையில் எக்குறைவும் ஏற்படாது" எனக் குறிப்பிட்டார்கள்.

எவர்களின் இல்லத்திற்குச் சென்று நோன்பு துறக்கின்றோமோ அவர்களுக்காக பின்வரும் துஆவை ஓதிக் கொள்வது நபிவழியாகும்.

أَفْطَرَ عِنْدَكُمُ الصَّائِمُونَ وَأَكَلَ طَعَامَكُمُ الْأَبْرَارُ وَصَلَّتْ عَلَيْكُمُ الْمَلاَئِكَةُ

"நோன்பாளிகள் உங்களிடத்தில் நோன்பு துறக்கின்றார்கள். நல்ல மனிதர்கள் உங்கள் உணவை உண்கின்றார்கள். மேலும், வானவர்கள் உங்களுக்காக துஆச் செய்கின்றார்கள்".

## பொது இடங்களிலும் போக்குவரத்து சாதனங்களிலும் பண்புடன் நடத்தல்

இலங்கை போன்ற பல்லின சமூகங்கள் வாழும் நாடுகளில் இஸ்லாமிய த.ஃவாவிற்குரிய வழிமுறைகளுள் பொது இடங்களில் நற்பண்புகளை வெளிப்படுத்துவது, குறிப்பிடத்தக்க ஏனைய சமூகங்களைக் கவரக்கூடிய ஓர் அம்சமாக விளங்குகின்றது. அந்தவகையில் பொதுப்போக்குவரத்து சாதனங்களில் முஸ்லிம்களாகிய நாம் பயணிக்கும் போது மனிதநேயத்துடன் நடந்துகொள்வது அவசியமாகும். இது பற்றி நபி (ஸல்) அவர்கள் பொதுவான ஒரு வழிகாட்டலைத் தந்துள்ளார்கள் "நன்மை என்பது நல்ல பண்புகளாகும். தீமை என்பது உன்னுடைய உள்ளத்தை உறுத்துவதாகும். மேலும் அத்தீமையை மக்கள் காண்பதை நீர் வெறுப்பீர். (புஹாரி, முஸ்லிம்)

இந்த வகையில் பொதுப்போக்குவரத்து சாதனங்களான பேரூந்து, ரயில் போன்றவற்றில் நாம் பயணம் செய்யும் போது பின்வரும் நடைமுறை ஒழுங்குகளை கவனத்திற் கொண்டு செயற்படுவது வரவேற்புக்குரியதாகும்.

1. முண்டியடித்துக்கொண்டு வாகனத்தில் ஏறாதிருத்தல். கியூ வரிசையை பின்பற்றல்
2. உரிய அனுமதிச்சீட்டை பெற்றுக்கொண்டு பயணிப்பதே ஏற்புடையதாகும். இல்லையேல் அல்லாஹ்விடத்தில் குற்றவாளியாவதோடு தண்டப்பணம் செலுத்தும் நிலைக்கும் உள்ளாகலாம்.
3. ஆசனங்கள் கிடைக்காமல் நின்று பிரயாணம் செய்யும் வயோதிபர்கள், கர்ப்பிணி, மதகுருமார்கள், சிறுவர்கள் ஆகியோருக்கு ஆசனம் வழங்கி உதவுதல்.
4. இருவர் பேசிக்கொண்டு செல்லும் போதும், கையடக்கத் தொலைபேசியில் பேசும் போதும் பக்கத்திலிருப்பவர்களுக்கு அசௌகரியம் ஏற்படாதவாறு நடந்து கொள்ளல்.
5. ஆண்களும் பெண்களும் கலந்து பயணம் செய்யும் நிலை காணப்படுவதால் மஹ்ரமி, அஜ்னபி சட்டதிட்டங்களைக் கவனத்தில் கொண்டு பார்வையைத் தாழ்த்தல், ஆண்கள் பெண்கள் வெவ்வேறான ஆசனங்களில் அமர்தல் போன்ற கற்பொழுக்கங்களை பேணிக்கொள்ளல்.

புகைப்பிடித்தல், மெய்மறந்து தூங்குதல், செருமிக்கொண்டு துப்புதல் போன்ற அநாகரிகமான செயற்பாடுகளில் ஈடுபடுவதை இயலுமான அளவு தவிர்த்துக்கொள்ளல்

- "நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள். உங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றியமை பற்றி விசாரிக்கப்படுவீர்கள்" என நபி (ஸல்) கூறினார்கள்.
- நபி (ஸல்) கூறினார்கள். உங்களுக்கு சாபத்தைப் பெற்றுத்தரும் மூன்று இடங்களை பயந்து கொள்ளுங்கள்: அவை

    1. நீர் நிலைகள்
    2. பாதை ஓரங்கள்
    3. நிழல்தரும் மரங்கள் என்றார்கள்

- நபி (ஸல்) கூறினார்கள். யார் "பி.்.ரு ரூமா" என்ற கிணற்றை தோண்டிச் சுத்தம் செய்கின்றாரோ அவர் சுவனம் செல்வார்."
- நபி (ஸல்) கூறினார்கள். "மனிதர்களுக்கு பயனுள்ளவனே மனிதருட் சிறந்தவனாவான்".
- நபி (ஸல்) கூறினார்கள். "நல்ல காரியங்கள் ஒவ்வொன்றும் தர்மம் ஆகும்" (புஹாரி)

## மஹ்ரமி, அஜ்னபி உறவு பேணல்

ஆண்களையும், பெண்களையும் படைத்த அல்லாஹுத்தஆலா அவ்விருபாலாரும் எத்தகைய விதிமுறைகளின் கீழ் இணைய முடியும்? எத்தகைய கட்டங்களில் கலந்துறவாட முடியாது? போன்ற ஒழுக்க வரம்புகளை வகுத்துத் தந்துள்ளான். பார்வையைத் தாழ்த்தல், அன்னிய பெண்களுடன் தனிமையாகக் கலந்துறவாடாதிருத்தல், கற்பொழுக்கம் பேணல் போன்ற கட்டுப்பாடுகள் மூலம் மஹ்ரமி, அஜ்னபி உறவு முறைகளை இஸ்லாமிய சட்டம் அறிமுகஞ் செய்கின்றது. "மஹ்ரமி" என்ற பதம் திருமணம் முடிக்க விலக்களிக்கப்பட்ட பெண்களையும், "அஜ்னபி" என்ற பதம் திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்ட பெண்களையும் சுட்டும் சொற்களாகும்.

> "நபியே! நம்பிக்கையாளர்களான ஆண்களுக்கு நீங்கள் கூறுங்கள். அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ்நோக்கியே வைக்கவும். அவர்கள் தங்கள் கற்பையும் பாதுகாத்துக் கொள்ளவும். இது அவர்களை பரிசுத்தமாக்கி வைக்கும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவைகளை நன்கறிந்து கொள்கிறான்." (அல் குர்ஆன் 24 : 30)

மேற்படி குர்ஆன் வசனம் சமூக வாழ்வில் ஆணும், பெண்ணும் கட்டுப்பாடான உறவை பேண வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. மஹ்ரமி, அஜ்னபி என்ற சட்ட விதிமுறை திருமணத்தின் போது மட்டுமன்றி; நாளாந்த வாழ்விலும் கைக்கொள்ளப்பட வேண்டும்.

# பின்னிணைப்பு

## அறபுக் கலைச் சொற்கள்

1. அல் (கு) ஹுலுக் - الْخُلُقُ - பண்பாடு
2. அல்-அஹ்லாக் - الأَخْلَاقُ - பண்பாடுகள்
3. ஹுலுக் ஹஸன் - الْخُلُقُ الْحَسَنُ - அழகிய பண்பாடு
4. அல்-அஹ்லாக் ஹஸனா - الأَخْلَاقُ الْحَسَنَةُ - அழகிய பண்பாடுகள்
5. மகாரிமுல் அஹ்லாக் → مَكَارِمُ الأَخْلَاقِ → சங்கையான பண்பாடுகள்.
6. (அல்) அதப் - الأَدَبُ - ஒழுக்கம்
7. அல்-ஆதாப் - الآدَابُ - ஒழுக்கங்கள்,
8. அல்-அகீதா - الْعَقِيدَةُ - நம்பிக்கைக் கோட்பாடு
9. அல்-அகாயித் - الْعَقَائِدُ - நம்பிக்கைக் கோட்பாடுகள்
10. அல்-இபாதாத் - الْعِبَادَاتُ - வணக்க வழிபாடுகள்.
11. அல்-முஆமலாத் - الْمُعَامَلَاتُ - கொடுக்கல், வாங்கல் சட்டங்கள்.
12. அல்-முனாகஹாத் - الْمُنَاكَحَاتُ - திருமணம், விவாகரத்து தொடர்பான சட்டங்கள்
13. அல்-ஜினாயாத் - الْجِنَايَاتُ → குற்றவியல் சட்டங்கள்
14. அல்-இஃலாஸ் - الإِخْلَاصُ → உளத்தூய்மை.
15. அர்-ரியா - الرِّيَاءُ → முகஸ்துதி

# அல் அக்லாகுல் இஸ்லாமிய்யா

# (இஸ்லாமிய பண்பாடுகள்)